# பாரதமணி

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
12, பிருந்தாவனம் தெரு,
மயிலாப்பூர், மதராஸ்.

வருஷ சந்தா { உள்நாடு ரூ. 3
வெளிநாடு ரூ. 5

| மாலை 5 | புதன் 12-2-41 விக்ரமஸ்ரீ மாசி மீ 1௳ | முத்து 2 |
|---|---|---|

## பொருள் அடக்கம்

| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| ஸ்வராஜ்யத்துக்கு வழி ஒன்றே ... ... | கா. சி. வேங்கடரமணி | 66 |
| ஸ்வாதித் திருநாள் பெருமை ... ... ... ... | | 68 |
| கவிராயரும் புவிராயரும் ... | வரகவி. திரு. அ. சுப்ரமண்யபாரதி | 70 |
| தேவகியின் கனவும் கண்ணீரும் ... ... | ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ. | 73 |
| திருவடிப் புணை ... | வே. நாராயணன், எம். ஏ., எம். எல் | 75 |
| ரவீந்திரர் பெருமை ... ... | கு. ப. ராஜகோபாலன், பி. ஏ. | 76 |
| நாவல்மரம் ... ... ... | கே. வெங்கடாசலம் | 81 |
| பேகம் மேஹருன்னிஸா எம். ஏ. ... ... | எஸ். குஞ்சிதபாதம் | 85 |
| விஞ்ஞானத்தின் இலட்சியம் ... | பி. நவநீதகிருஷ்ணன் எம். ஏ. | 96 |
| வடவிழம் ... ... ... | அ. வி. மயில்வாகனம் | 99 |
| மகா மகோபாத்யாய யக்ஞசாமி சாஸ்திரிகள் ... ... ... | தேவங்குடி தியாகராஜ சாஸ்திரிகள் | 102 |
| தவக் காலம் ... ... ... | ஸ்ரீமதி சேது அம்மாள் | 113 |
| கண்ணன்—அவள் காதலன் ... ... | எஸ். ஸோமாஸ்கந்தன் | 114 |
| உங்களுக்குத் தெரியுமா? ... ... ... ... | | 118 |
| சிறுவர் பகுதி ... ... ... | பெ. நா. அப்புஸ்வாமி, பி. ஏ., பி. எல். | 121 |
| புத்தக விமர்சனம் ... ... ... ... ... | | 124 |

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

# ஸ்வராஜ்யத்துக்கு வழி ஒன்றே

[கா. சி. வேங்கடரமணி]

வைத்யருக்கு வியாதி என்னவென்று தெரிந்தால்தானே நோயாளிக்குச் சிகிச்சை செய்யலாம்? இந்த உண்மை அரசியல் வைத்யத்துக்கு முக்கியமாய்ப் பொருந்தும். மேல்நாட்டு நாகரிகத்தின் அடிப்படையாகவுள்ள வியாதி என்னவென்று தெரிந்துகொள்ளாமல் ஒருவிதமான முன்னேற்றத்தையும் மேல்நாடுகளும் அடைய முடியாது; நாமும் அடைய முடியாது. இப்பொழுது மேல்நாட்டில் நடந்துவரும் கொடிய யுத்தத்துக்குத் தாய்ப்பூச்சி யென்னவென்று தெரிந்து கொண்டால்தான் உலகத்திற்கு உண்மையான வெற்றி கிடைக்கும்.

யுத்த ஆரம்பம் முதல் பிரிட்டிஷ் மந்திரி சபை இந்தியாவை நடத்திவரும் வழியைக் கவனிப்போம். தங்க முட்டையிட்ட கோழியை—கதையில் குடியானவன் நறுக்கிப் பார்த்ததுபோல் 1919-ம் வருஷத்துக்குப் பிறகு ராஜ தந்திரத்தில்—முக்கியமாய் அயல்நாட்டுத் தந்திரத்தில் பிரிட்டிஷ் மந்திரி சபையில் தீர்க்கதரிசிகளே முன் வரவில்லை. வெற்றி யடைந்த குதூகலத்தில் மெய்ம் மறந்து உறங்கி விட்டார்கள். 'வர்ஸெயில்ஸ்' உடன்படிக்கைக்குப் பிறகு ஐரோப்பாவில் அரசியல் பொருளாதார சுக துக்கத்துக்குக் கேவலம் கையாளாக மாறிவிட்டது. அரசியலின் உண்மையான குணங்களும் லட்சியங்களும் மாறிப் போய்விட்டன. பெரிய வியாபாரிகளுக்கு அரசியல் அடிமையாய்ப் போய்விட்டது. இதனால்தான் முப்பது வருஷமாய்ப் புரண்டுவரும் யுத்தங்களும் அதனால் ஏற்படும் துக்கமும் நாசமும் கொடுமையும் அடிமை இந்தியாவினால் ஏற்படும் லாபத்தை ருசி கண்ட பிரிட்டிஷ் மந்திரி சபை ஒரே மதியாய் அந்தச் சுவையிலே நிற்கிறது. அதனால் உண்மையில் ஏற்படும் கஷ்ட நிஷ்டூரங்களைத் தெரிந்துகொள்ளவில்லை. சுயராஜ்யம் பெற்ற இந்தியாவினால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குக் கிடைக்கக் கூடிய லாபங்கள் பெருமை என்னவென்று அறியவில்லை. கையிலிருக்கும் பதரை எறிந்து விட்டுக் கீழே முட்டிட்டுக் கிடக்கும் அவலைக் கைப்பற்ற உன்னத நோக்கமும் தியாக புத்தியும் கொஞ்சமாகிலும் வேண்டாமா?

தற்கால பிரிட்டிஷ் மந்திரி சபையில் பிரதம மந்திரியா யிருக்கும் வின்ஸ்டன் சர்ச்சில் பராக்கிரமசாலி; மிக்க உழைப்பாளி. சில்லறைகளைச் சேர்த்துப் பொறுக்கிக் குவித்துப் பெரிதாய்க் காட்டும் சக்திவாய்ந்தவர். ஆனால் தீர்க்கதரிசியல்லர். சண்டை சச்சரவிலும் சாந்தத்தைக் கைவிடாமல் திட்டம் போட்டுச் சமூக வாழ்வுக்குப் புத்துயிரளிக்கும் சக்தி வாய்ந்தவரல்லர். இந்தியாவில் நாற்பது கோடி ஜனங்கள் இருந்தென்ன? நாற்பது கோடிக் கொசுக்களின் சக்தியைக்கூட நாம் 150 வருஷம் பிரிட்டிஷ் அரசாட்சியின் கீழ் இருந்துங்கூட அடைய வில்லையே. கொசுவுக்காவது பாடத் தெரியும், ஆடத்தெரியும், கடிக்கத் தெரியும்.

பிரிட்டிஷ் ராஜ தந்திரமும் அரசியல் நோக்கங்களும் உத்தமமா யிருந்து இந்த நாற்பது கோடி ஜனங்களையும் ஐக்யப்படுத்திப் பலப்படுத்தி ஓர் ஈட்டியாய்ச் செய்திருந்தால் ஹிட்லர் ஸெக்கோஸ்லோவோகியா எல்லையில் காலெடுத்து வைத்துத் தாண்டி யிருப்பாரா? ஜப்பான், எலியைப் பூனை பிடிப்பதுபோல் மஞ்சுகோவைப் பிடித்திருக்குமா? முஸோலினி அபிஸீனியாவில் விஷ வாயு யுத்தம் செய்திருப்பாரா?

பிரிட்டிஷ் மந்திரி சபையில் தீர்க்கதரிசிகள் இருந்தால் பூனா தீர்மானத்தைக் கைவிட் டிருப்பார்களா? குழம்பி நிற்கும் இந்திய அரசியல் நிலையை ராஜாஜி பரம தைரியத்துடன் மத்திட்டுக் கடைந்து 'பூனா தீர்மான'த்தை வெண்ணெயாக வைஸ்ராயிடம் கொடுத்தார். கொடுத்தும் கண்ணை மூடிக்கொண்டே நாளைய

தினம் வரையில் இந்தியா மந்திரி அமெரியும் வைஸ்ராயும் வெய்க்கு அழுதுகொண்டிருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் உண்மையான காரணமென்ன? இந்தியாவுக்கு இன்னும் போதுமான உணர்ச்சியும் ஐக்கிய பாவமும் செயலும் வரவில்லை யென்பதுதான் பிரிட்டிஷ் மந்திரி சபையின் அந்தரங்கமான கருத்து.

அஹிம்ஸை மார்க்கமே உத்தம மார்க்கம். உண்மையான நமது நாகரிகத்தின் வழி என்னும் மகாத்மாஜியின் கொள்கைதான் என்னுடைய கொள்கையும். ஆனால் தேங்கி நிற்கும் அஹிம்சை துள்ளிக் குதிக்கும் ஹிம்ஸையைவிட மிகக் கொடியது. அஹிம்ஸையைச் செயலாக மாற்றித் தினசரி பழக்க வழக்கத்துக்குக் கொண்டு வந்தால்தான் அதன் உண்மைப் பயன் நமக்குத் தெரியும். அஹிம்ஸை சொல்லால் பரிமளிக்காது. செயலால்தான் பரிமளிக்கும். சிருஷ்டியின் உண்மை செயல்தானே?

காந்திஜியின் அஹிம்ஸை தன்னைப் பற்றினவரையில் ஓர் உத்தமமான சக்தியாகவும் ஒரு யோக சாதனமாகவும் ஏற்பட்டுவிட்டது. ஏனென்றால், அவர் சொல்லைச் செயலாக மாற்றிவிட்டார். அஹிம்ஸையை ஸ்வாநுபவத்துக்குக் கொண்டு வந்துவிட்டார். ஆனால் அந்த அஹிம்ஸைத் திட்டத்தை ரிஷிகேசம் முதல் ராமேசுவரம் வரையில் பல வகையில் நிற்கும் நாற்பது கோடி ஜனங்களுக்கும் பயன்படும்படியாகத் திட்டம் போட்டு நடத்தவில்லை. அது ஒரு பெருங் கைங்கரியம். மிகக் கஷ்டமானது. இதைச் செய்யாமல் வேறு எவ்விதத்திலும் நமக்குச் சுயராஜ்யம் கிடைக்காது. குதிரைப் பந்தயத்தில் கிடைக்கும் பரிசுபோல்—நமக்குக் கிடைத்தாலும் நிற்காது; உடம்பில் ஒட்டாது.

நமது நாட்டிலுள்ள ஏழு லக்ஷம் கிராமங்களும் அஹிம்ஸைத் தொண்டில் ஈடுபட்டுச் செயல் ரூபமாய் முன்னேற்றமடைந்தாலொழிய வேறு வழியில்லை. ஆகையினால் இதற்கு வேண்டிய சட்ட திட்டங்களை நாமே போடவேண்டும். நமக்குச் சுயராஜ்யம் இல்லாமல் இந்த ஏழு லக்ஷம் கிராமங்களுக்கும் சட்ட திட்டம் போடமுடியாது என்னும் வாதம் சோம்பேறியின் செயலற்ற வாதம்தான். ஏழு லக்ஷம்கிராமங்களையும் ஒரு லக்ஷம் கிராமத் தொர்குதிகளாகச் சேர்த்துப் பிரித்து ஒரு தொடருக்கு ஓர் உண்மைத் தொண்டனை நியமித்து நமது கிராம வாழ்க்கையைப் போஷித்தால்தான் நமது வாழ்க்கைக்கு முன்னேற்றமுண்டு. நம் நாட்டுக்குச் சுயராஜ்யமுண்டு. இந்த லக்ஷம் வீரர்கள்தான் நவ இந்தியாவுக்குப் புதிய அஸ்திவாரம். இப்படித் திட்டம்போட்டுத் தொண்டு புரியாவிட்டால் நமக்கு ஒருநாளும் சுயராஜ்யம் கிடைக்காது. கிடைத்தாலும் நிற்காது. அங்கியர் இனாமாக வெற்றி அடைந்த ஸந்தோஷத்தினால் நமக்குச் சுயராஜ்யத்தைக் கொடுத்தாலும் அது 'கட்டிக் கொடுத்த சோறும் சொல்லிக் கொடுத்த வார்த்தையும்போல்' ஆகும்.

புத்துயிரளிக்கும் இத் தொண்டை நாம் இன்றையதினமே திட்டம்போட்டு ஆரம்பிக்கவேண்டும். அரசியலில் திட்டமில்லாத சேவை, கரையில்லாத ஆற்றில் காட்டு வெள்ளம் கரைபுரளுவதுபோலாம்

---

# ஸ்வாதித் திருநாள் பெருமை

(மாட்சிமை தங்கிய மகாராணி சேது பார்வதிபாயி அவர்கள் ரஸிக ரஞ்சினி சபையில் செய்த பிரசங்கத்தின் மொழி பெயர்ப்பு.)

[கு. ப. ரா.]

மகாராஜா அவர்களுக்கும் எனக்கும் நீங்கள் அளித்த அன்பார்ந்த வரவேற்பும் ஸர். அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களும் ஸ்ரீமதி ஜயராம அய்யர் அவர்களும் வாக்கு வன்மையுடன் வெளியிட்ட அன்புமிக்க உணர்ச்சிகளும் எங்களை மிகவும் உணர்ச்சி வசமாக்கி விட்டன. அவற்றிற்காக நாங்கள் உங்களுக்கு வந்தன மளிக்கிறோம்.

உயர்தர சங்கீதத்தை அபிவிருத்தி செய்யவும் பரப்பவும் ரஸிக ரஞ்சனி சபை செய்து வரும் தொண்டைப்பற்றி நாங்கள் முன்பே அதிகம் கேள்விப்பட்டிருக்கிறோம்; இந்தச் சந்தர்ப்பத்தால் நேர்முகமாக அதன் பலதரப்பட்ட ஊக்கங்களை அறிய எங்களுக்கு இடம் ஏற்பட்டு விட்டது.

என்னுடைய மூதாதையார் என்று நாம் பெருமை கொள்ளும் திருவாங்கூர் அரசர் ஒருவருடைய உருவத்தையும் ஞாபகத்தையும் உங்கள், சங்கீத வித்வான்கள், பக்தர்கள்—இவர்களிடையே முதன்மை வகிப்பவர்களில் ஒருவர் என்ற முறையில் கொண்டாடும் இந்த வைபவத்தில் கலந்து கொள்வது எனக்குப் பெரு மகிழ்ச்சி அளிக்கிறது.

மனித சமுகத்தின் விவகாரங்களில் ஏற்படுவது போல, ஆத்ம விசாரத்திலும் கலைகளிலும் தேக்கமேற்படும் பருவங்களும் வளர்ச்சி தாமதப்படும் சமயங்களும் பிற்பாடு திடீரென்று ஒளி வீசும் சந்தர்ப்பங்களும் இருக்கின்றன போலத் தென்படுகிறது. மகாராஜா ஸ்வாதித் திருநாள் அவர்கள், அவருடைய சமகாலத்தவர்கள், ஸ்ரீ தியாகய்யர், முத்துஸ்வாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரிகள்—இவர்களுடைய கற்பனு சக்தி மண்டின காலத்திற்கு முன் பின் வருஷங்களே இந்த ஊக்கத்திற்கு அத்தாட்சிகள்.

இந்தியாவில், உயர்தரக் கீர்த்தனைகளைப் பாடுவதற்குப் பலதரப்பட்ட சக்திகள் ஒன்று சேரவேண்டி யிருக்கிறது. சிருங்கார ரஸத்திலேயே லட்சியத்தைச் சித்திரித்தாலும் சங்கீதத்தில் இஷ்ட தேவதையை வைத்துப் பாடுவதே மூலாதாரமாக இருந்திருக்கிறது. இந்த பக்தியும் உசிதமான கவிதை வாக்கும் எப்பொழுதுமே சேர்ந்து காணப்படுவதில்லை; ஆனல் அந்த வாக்கின் முத்திரை யில்லாவிட்டால் சங்கீதமே வெறும் செப்பிடு வித்தையாகிவிடும்.

பக்தியும் கவன சக்தியும் சேர்ந்திருந்தால்கூடப் போதாது; ஆழ்ந்த உணர்ச்சி மூலங்களைத் தூண்டும் சாஸ்திரத்துடன் பிணைப்பு கொண்ட சங்கீதக் கலையில் அநுபவஞானமும் வேண்டும். பல தலைமுறைகளில் இவ் வகைத் திறன்களைக் கொண்ட பல கவிதைப் பண்பிலும், சங்கீதப் பண்பிலும் தோய்ந்த பல கனிந்த கீர்த்தனைகளைப் பாடி மதத்தின் உத்கிருஷ்டமான தேவைகளுக்கு உபயோகப்படும்படி செய்தார்கள் என்பதுதான் இந்தியாவின் சிறப்புக்களில் ஒன்று. அப்பேர்பட்டவர்களுக்குள் மகாராஜா ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் ஒருவர் என்பது எல்லோரும் ஒப்புக்கொண்ட விஷயம்.

சிறியதும், ஆனல் பலதரப்பட்ட வேட்கைகள் கொண்டதுமான அவர் வாழ்க்கையைப்பற்றி இங்கே நான் கூற விரும்பவில்லை. ஏழு பாஷைகளில்—மலையாளம் ஸம்ஸ்கிருதம், மராத்தி, தெலுங்கு, தமிழ். கன்னடம், உருது—நாட்டிய சாஸ்திரத்தின் தேவைகளுக் கேற்ப கீர்த்தனைகள் இயற்றியதைச் சொல்லி, அவர் கீர்த்தனை

கள் எவ்வளவு விரிவான பூமியில் தோன்றினவை என்பதை மட்டும் குறிக்கிறேன். சங்கீதமும் சாகித்யமும் அவற்றில் ஒத்துக் கைகோர்த்து நிற்கின்றன. அவருடைய ரசனைகளைத் தொகுத்து வெளியிடும் வேலை ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. ஆனால் சமீபகாலத்தில் திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு வெளியிலிருந்து சேர்க்கப்பட்டவைகளைக் காட்டித் திருத்தி அமைக்க வேண்டிய வகையில் இன்னும் நிரம்ப செய்யவேண்டியிருக்கிறது. திருவனந்தபுரத்தில் சமீபத்தில் ஸ்தாபனமான ஸ்வாதித்திருநாள் சங்கீத சங்கத்தின் நோக்கம் மகாராஜாவின் கிருதிகளைச் சேர்த்து வெளியிட்டு அவர் சேவையைப் பிரசாரம் செய்வது மட்டுமல்ல; உண்மையான சங்கீதத்தில் ருசியும் அனுபவமும் ஏற்படுத்த அவற்றை ஒரு தூண்டுதலாகவும் ஊக்கக் கருவியாகவும் செய்ய வேண்டும் என்பதுதான்.

உலகம் முழுவதுமே கவிகளும், ஓவியங்களும், சங்கீதகலைஞர்களும் இரண்டு விதமான ஆபத்துக்களுக்கு உள்ளாவதுண்டு. சில சமயங்களில் அவர்கள் கலைச்சிறையில் தம்மை அடைத்துக்கொண்டுஒரு சிலரைத் திருப்தி செய்வதிலேயே ஈடுபடுகிறார்கள். சில சமயங்களில் லாபத்தையோ ஜனவாக்கையோ உத்தேசித்து, சிக்கலான கலைமுறைகளையும் அதன் கட்டு திட்டங்களையும் புறக்கணித்து தாற்காலிகமான ரசனையொன்றிற்குத் திருப்தி யளிக்க முயலுகிறார்கள். ஞானஸ்தர்கள் காதில் அது அபஸ்வரமாகப் படுகிறது. ஸ்வாதித் திருநாள் அவர்களுக்கு உற்றாரும் ஊராருமான நாம் கைக்கொண்ட கடமையையொட்டி நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் மகத்தானவையாக இருக்கின்றன. விவஸ்தையற்ற கரகோஷத்திற்குச் சுருக்குவழியாக சாதாரண கீழ்த்தரமான முறைகளைக் கையாளாமல், கவிதை யென்னும் தறியில் இந்திர தனுசின் ஏழுவர்ணங்களுடன் கணக்கற்ற பாவு பாய்த்த பரமாச்சாரியரின் அந்தரங்கத்தைக் கிரகித்து வேலை செய்வோம். பூரணமான அர்ப்பண புத்தியுடன் அவர் பகவான் பத்மநாபனின் புகழைப் பாடி நகரத்தையும் உத்சவங்களையும் தம் கீர்த்தனைகளில் சிறப்பித்தார். நம் சங்கீதத்தின் லட்சியங்களைப்பற்றி அவர் தம்முடைய பக்தி மஞ்சரியில் சொல்லியிருப்பதைக் காட்டிலும் திறம்படச் சொல்ல முடியாது.

**तन्त्री नादविमिश्रितं लययुतं तारस्वनात्युज्ज्वलं, श्रोत्रानन्दकरं चरिष्णुभिरलं ग्रामत्रयोपिस्वरैः। गीतं तारकनाम निर्भरसुधा ज्युष्टं नचेत् तत्पुनः, व्यर्थं व्यर्थमरण्यरोदनमिव प्रायो रमावल्लभ ॥**

(தந்தி வாத்திய நாதத்துடன் கலந்து, லயத்தோடு கூடி, தாரஸ்தாயி சாரீரத்தில் வேகங்கொண்டு காதிற்கினிமையாய், மூன்று கிராமங்களில் சஞ்சரிக்கும் ஸ்வரங்களோடு கூடின கான மன்றோ. ரமா வல்லப, உம்பேரையும் அதன் சுவையையும் பாடவேண்டும்! வேறெல்லாம் காட்டில் கதறும் குரல் போன்ற தாகும்.) ப. 64, பக்த மஞ்சரி.

மிகுந்த மன மகிழ்ச்சியுடன் நான் இப்பொழுது மகாராஜா ஸ்வாதித் திருநாளின் உருவப் படத்தைத் திறந்துவைக்கிறேன். மற்ற சகாக்களுடன் அந்த ஸங்கீத சாஸ்திர நிபுணர்கள் உருவமும் இந்த அழகிய மண்டபத்தில் இனிமேல் அழகாகப் பொலிவுறும்.

---

# கவிராயரும் புவிராயரும்

[வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதி]

நீண்ட காலமாகக் கல்வி வாசனையே கண்டறியாத ஓரூரில் ஒரு கவிராயர் தோன்றினர். அவரை எல்லோரும் கௌரவப்படுத்தி வேண்டுவன உதவி ஆதரித்து வந்தனர். இதனை யன்றிக் "கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாம் சிறப்பு" என்றபடி அவருக்கு எக்கும் சிறப்பேற் பட்டது. அதனுல் அவர் தம் குடும்பத்தை ஒருவாறு கௌரவமாகவே நடத்தி வந்தார்.

கவிராயர் ஆறடி ஆறங்குல உயரமும் விகாரமான தோற்றமு முடையவர். உடம்பில் எலும்பெல்லாம் தெரியும். வயிறு ஒட்டி மடிப்பு மிகுந்திருக்கும். கண்கள் இரண்டும் கிடுகிடு பள்ளத்தி லிருக்கும். "ஆஞ்சநேய உபாஸனை செய்ததன் பயனய் அவதரித்தவர் போலும் இவர்" என்று பிறர் எண்ணத் தக்கபடி முகம் நீண்டு, பற்கள் முன் வந்திருக்கும். இதனுல் அடிக்கடி இவர் உதடுகளினுல் பற்களை மூடிக்கொள்ள வேண்டிய அவசியத்திற்கு முள்ளாவர்.

எப்படி இருப்பின் என்ன? வித்தை நிறைந்திருந்தபடியால்—"கல்வி அழகே அழகு" என்றபடி பிறர் பழிப்பிற் கிடமில்லாமல் விளங்கினர். விகார ரூபமுடையவ ராணுலும் அழுமூஞ்சிக் கவிராய ரல்லர். ஸல்லாப உல்லாஸ வல்லாளன் என்று புகழும்படி—எப்போதும் உல்லாச முகத்துடன் கவி பாடி எல்லோரையும் மகிழ்வித்துத் தாமும் மகிழும் மகாநுபாவர்!

இவ்வா றிருந்த கவிராயருக்கு வரவரக் குடும்பம் பலத்தது. பலக்க பலக்க கவிராயருக்குக் குடும்பம் சுமக்கமுடியாத பாரமாயிற்று. இப்போது அடிக்கடி கவிராயர்.—

"நாப்பிளக்கப் பொய் யுரைத்து
நவநிதியந் தேடி
நலனென்று மறியாத
நாரியரைக் கூடிப்
பூப்பிளக்கப் பொய்யுரைத்துப்
புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப்
புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர்
கைவிடவு மாட்டீர்
கவர்பிளந்த மரத் துளையிற்
கால் நுழைத்துக் கொண்டீர்
ஆப்பதனை அசைத்து விட்ட
குரங்கதனைப் போல
அகப்பட்டீர் கிடந் துழல
அகப்பட்டீரே"—

என்று பாடிய பட்டினத்தடிகளைக் கையெடுத்துக் கும்பிடுவார். யாரைக் கும்பிட்டு மென்ன பண்ணுவது?—"உரலில் அகப்பட்டபின் உலக்கைக்குத் தப்பமுடியுமா?—இப்போது மோடாரிலும் ரயிலிலும் ஆகாய விமானத்திலும் ஓடி ஓடிச் சம்பாதிப்பவர்களே "ஓகோகோ! குடும்பத்தொல்லை பொறுக்க முடியவில்லை! எங்கேனும் ஒருவரோடும் சொல்லாமல் ஓடி விடுவோமா என்றெண்ணும்படி வாட்டுகிறது" என்று கூறக் கேட்கிறேமே! அப்படி யிருக்க — சாதாரண தமிழ் வித்வானொருவன் காலால் நடந்து சென்று பொருள்தேடும் நிலையி லிருக்கும் ஒருவன் பாடு எதிற் சேர்ந்ததாம்!

அந்தோ என்ன செய்வது? நாளடைவில் கவிராயர் குசேலரானர். ஆனல் குசேலரைப்போல் பரம பாகவத சிரோமணியா யிராமல் — ஊரூராய்ப் பிரபுக்களிடஞ்சென்று கவிபாடிப் பொருள்தேடிக் குடும்ப காலக்ஷேபத்தை நடத்திக் கொண்டு வந்தார். ஒருநாள் வரும்படி கிடைக்கும். ஒருநாள் வரும்படி கிடைக்காது. எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு — தளராநிலையி லிருந்து வந்தார் கவிராயர்.

இவ்வாறு இருக்கையில் கவிராயர் ஒரு நாள் ஒரு புவிராயரிடம் போனார். அந்தப் புவிராயர் வீட்டுவாசலை மிதிக்கும்போது கவிராயர் தம் உடம்பையும் உடையையும் பார்த்துக் கொண்டார்; "இரக்கப் போனாலும் சிறக்கப் போ—என்கிறபடி சட்டம் தெரிகிறது. தெரிந் தென்ன பண்ணுவது? குதிரை நடந்தாலல்லவா ராவுத்தர் ஓட்டுவதற்கு" என் றெண்ணிப் பெருமூச்சோடு—ஜகதீசா நீயே துணை—என்ற மந்திர உச்சாரணத்துடன் மாளிகைக்குள்ளே போனார்.

மாளிகையில் உட்பக்கமிருந்த காவலாளி—"பிரபுவைப் பார்க்க வேணுமாக்கும்? இரும் அப்படியே ஒரு பக்கம்! நித்திரை செய்கிறார்" என்று தடுத்தான். கவிராயர் மௌனமாய் நடந்து ஒரு மரத் தடியில் கடல் தாண்ட யத்தனப்படும் கவிராயர்போல் அமர்ந்தார். அப்பால் சற்று நேரம் சென்ற பின் எழுந்து நடந்து போய்க் காவலாளியைக் கண்டார். காவலாளி "எங்கானும் அவசரப்பட்டுச் சாகிறீர்? பிரபு ஸ்நானம் செய்கிறார். இரும் அப்படி" என்றான்.

கவிராயர் பழைய கவிராயரானார். மீண்டும் சற்று நேரம் பொறுத்துக் காவலாளியைக் கண்டார். அவன், "போஜனம் ஆகிறது. இரும்"—என்றான். இப்படி பிரபு அலுவலா யிருக்கிறார், மனைவியோடு பேசுகிறார்!—என்பனவாதிப் பல போக்குகள் பிறந்தன. முடிவில் கவிராயர் மன மலுத்தவராய் — ஒரு மரத் தடியில் — இரண்டு கைகளாலும் இறுகக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து—"செல்வத்தின் மகிமையே மகிமை" என்றெண்ணி வித்தையை வெறுத்தார்.

கவிராயர் எந்த நிலையில் எவ்விடத்திலே இருந்தாலும் ஏதாவது கற்பனைசெய்து கொண்டேயிருப்பது வழக்கம். அவர் தம் மனநிலை அத்தன்மையது. அவ்வாறே இவரும் கற்பனை செய்வாராயினர்.—

1. வறுமையே உன்னை வணங்குகிறேன்! உன்னுடைய உறவினால் நான் உலக முழுவதையும் பார்க்கிறேன். ஆனால் என்னை ஒருவரும் பார்ப்பதில்லை. இது ஒரு சித்தி யல்லவா?

2. இவ் வுலகில் பணக்காரர்களுக்கு அந்நியரும் உறவாகின்றனர். தரித்திரனுக்கு எனக்கு உறவினரும் அந்நியராகின்றனர்.

3. தரித்திரனொருவன் தன் உறவினரின் மத்தியில் வாழ்வதை விடக் கடும் புலி வாழும் காட்டிலிருந்து காய் கனி உண்டு வாழ்வது நல்லது. புற்றரையிலே படுத்தலும் மரவுரி உடுத்தலும் மேன்மையாம்.

கவிராயர் இவ்வாறு எண்ணமிட்டபடியிருக்கையில் புவிராயர் அரண்மனையிலிருந்து வெளியே வந்தார். கவிராயர் கற்பனை செய்துகொண்டிருந்த படியால், புவிராயரைப் பார்க்கவில்லை. புவிராயர் கவிராயரைப் பார்த்துவிட்டார். அவர் "இக் குரங்கன் யாவன்?" என்று அங்கிருந்தவரை நோக்கிப் பலமாய்க் கேட்டார். கவிராயர் இதைக் கேட்டதும் திடுக்கிட்டெழுந்து ஸ்ரீராமன் ஸந்நிதிக் கவிராயரைப்போல் பணிவு காட்டி, "வேந்தே! அடியேன் ஸ்ரீராமபிரான் அனுப்ப வந்த கவிராயன்! இங்கே ஸீதாதேவி வசிக்கிறாளோ இல்லையோ என்று தெரிந்து கொண்டு போக வந்தேன்!" என்றார்.

இந்தப் புவிராயர் நிரக்ஷரகுக்ஷியுடையவரல்லர். கல்வியோடு கேள்வியு முடையவர். ஆதலால் கவிராயர் கூறியதை அறிந்து கொண்டு—"அந்தோ "உருவு கண்டெள்ளாமைவேண்டும்" என்ற நீதியை மறந்தோமே! இவர் அறிவாளி போலும். தக்க விடை தந்தார். விடையில் நம்மை இகழாததுபோல் இகழ்ந்தார். நம் பிழையை நமக்குணர்த்தினர்" என்று கருதிக் கவிராயரை வந்தனத்தோடு வரவேற்று விசாரித்துச் சந்தனம் தாம்பூலத்துடன் தக்க ஸந்மானம் செய்தனுப்பினர்; அப்பால் கொஞ்ச நாளில் அவரை, சமஸ்தான வித்வானாகவும் வைத்துக்கொண்டார்.

கவிராயர் என்பது கவிராஜன் அல்லது கவி சொல்ல வல்லவன்—அதாவது கல்விமான் என்றும் பொருள் பெறும். கவி—செய்யுள் என்றும் குரங்கு என்றும் பொருள் தரும் ஒரு சொல். ராஜன் என்பது ராயர் எனவாயிற்று. புவிராயர்—புவிக்கு ராஜன் புவி—பூமி.

"ஸ்ரீராமன் அனுப்பவந்த கவிராயன்" என்றதனால் வித்வான் தாம் ஸ்ரீராமபிரா

னுடைய தூதனுகிய மாருதி என்ற உயர்வை மேற்கொண்டார். இங்கே ஸீதாதேவி இருக்கிருளோ இல்லையோ என்றதனுல் தேவியைச் சிறை செய்த இராவணன் என்று அரசனைத் தாழ்த்தினுர். இவையன்றி இதில் இன்னெரு பொருளும் உண்டு. ஸீதாதேவி என்பது திருமகள் என்று பொருள் தரும். திருமகள் வசிக்குமிடத்தில் செல்வம் மிகுந்திருக்குமென்பர். ஆகையினுல் இத் தொடர்—இங்கே செல்வம் இருக்கிறதோ இல்லையோ என்றும் பொருள் தருவதாம்,

ஆகவே கவிராயர், தம்மைக் குரங்கன் என்று ஒரு சொல்லால் இகழ்ந்த வேந்தனுக்கு—இவ்வாறு பல சொல்லி இகழாதது போல் இகழ்ந்தது வித்வத் சமர்த்திய விநோதமாய் அமைந்தது காண்க.


# பாரத மணி

(ஆசிரியர் :- கா. சி. வேங்கடரமணி, எம்.ஏ., பி.எல்.)

உயர்தர மாதப் பத்திரிகை.

இன்றே சந்தாதாரராய்ச் சேருங்கள்!

வருஷ சந்தா { உள்நாடு ரு. 3 / வெளிநாடு ரு. 5 }

இந்தக் கூபனைக் கத்தரித்து அனுப்புங்கள்

மானேஜர்,
பாரத மணி

12, பிருந்தாவனம் தெரு
மயிலாப்பூர்
மதராஸ்.

அன்பார்ந்த ஐயா,

நான் "பாரத மணி"க்குச் சந்தாதாரனுகச் சேரவிரும்புகிறேன். இன்று மணியார்டர் மூலம் ஒரு வருஷ சந்தா ரு. 3-0-0யும் அனுப்பியிருக்கிறேன். தயவு செய்து கீழ்க்கண்ட விலாஸத்துக்குப் பத்திரிகையை அனுப்பவும்.

கையெழுத்து...........................................................

விலாஸம்...........................................................

...........................................................

...........................................................

# தேவகியின் கனவும் கண்ணீரும்

[ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.]

வனப்பு வாய்ந்த வேளைகளிலும் கோரமான எண்ணங்கள் நம் அகக் கண்முன் தாண்டவ மாடுகின்றன. கோரமான சந்தர்ப்பங்களிலும் நம் மனம் அழகும் அமைதியும் அரசு செலுத்துகிற நாட்டிற்கு விரைந்துவிடலாம். இருள் செறிந்த ஒரு பெரும் பிழம்பாய் நிமிர்கிற நேரங்களிலும் ஒரு தனிச் சோதிச் சுடரை நம் உள்ளம் உணரக்கூடும். நடுநிசி கன அந்தகாரத்தில் இருள் திரையைத் தள்ளிக்கொண்டு நம் கண்கள் மறைந்து கிடக்கிற காலையின் எழிலைத் துருவி ஆராய்ந்துவிடுகின்றன. தான் சிருஷ்டித்த உலகத்தில் தட்டுத்தடங்கலின்றித் திரிகிறது மனத்தின் இயல்பு போலும்.

நள்ளிரவு; நிலா பட்டப் பகல் போலக் காய்ந்துகொண் டிருந்தது. வட மதுரையில் ஊர் ஓசைகள் அடங்கிவிட்டன. அவ்வமைதியில் யாமத்தைக் குறிக்கும் முரசொலியைத் தவிர வேறொன்றும் கேட்கவில்லை. நிலாப் படிந்த மாடத்தில் ஒருவர் தூங்கிக்கொண் டிருந்தார். அவர் முகத்தில் புகலரும் சாந்தம் ததும்பி நின்றது. உலகமே சிதைந்தாலும், உலகமே ஒரு நீண்ட பாழ் இருளில் ஆழ்ந்தாலும் அவருடைய நம்பிக்கையை ஒன்றும் அழிக்க முடியாதுபோல் பட்டது. அவிந்துபோகாமல் உலகப் பெரும் புயலில் நின்று, பதின் மடங்கு அது சுடர்விட்டு எரிந்தது. பரம்பொருளைக் கண்ட பேருவகையில் வசுதேவர் இன்பக் கனவு கண்டு கண் வளர்ந்தார்.

அவர் பக்கத்தில் அவர் மனைவி தேவகி வீற்றிருந்தாள். அவளுக்குத் தூக்கம் வரவில்லை. மனம் எங்கேயோ திரிந்தது. அந்நிலவு திடீரென்று ஒரு கும்பிருட்டு இரவை அவள்முன் கொண்டு வந்தது.

இடைவிடாது மழை கொட்டிற்று. மின்னல்கள் வானத்தைத் தங்கள் நகங்களினால் கீறின. காற்று புலி போலச் சீறிற்று; யமுனா நதி இருண்டு பயங்கரமாய்ச் சுழித்து ஓடிற்று. அவ் வாற்றைத் தாண்டி ஒருவர் குழந்தையை எடுத்துக் கொண்டு போன காட்சி முதல் முதலில் அவளுக்கு வந்தது.

சிறிது நேரங் கழித்து மற்றொரு உருவம் அவள் கண்முன் நின்றது. கோகுலத்தில் ஒரு வீட்டில் ஒரு ஸ்திரீ தொட்டிலில் குழந்தையை விட்டுத் தாலாட்டிக் கொண்டிருந்தாள். அவள் பாடுகிற பாட்டு தேவகியின் செவியில் விழவே, அவள் மனம் அமுதகீத வலையில் அப்படியே சிக்கிவிட்டது.

"ஓதக் கடலின் ஒளி முத்தினாரமும்
சாதிப் பவளமும் சந்தச் சரிவளையும்
மாதக்க வென்று வருணன் விடுதந்தான்
சோதிச் சுடர் முடியாய்! தாலேலோ
சுந்தரத் தோளனே! தாலேலோ"

(பெரியாழ்வார் 15)

இம் மதுரமான கீதத்தைக் கேட்டவுடன் தேவகியின் மனத்திலும் ஒரு பாட்டெழுந்தது. தொட்டில் ஆட்டத் தனக்குப் பாக்கிய மில்லையே என்று மனம் நைகின்றாள்.

"ஆலை நீள்கரும்பன்னவன் தாலோ
அம்பு யத்தடங் கண்ணினன் தாலோ

* * *

ஏலவார்குழ லென்மகன் தாலோ
என்றென்று உன்னை என் வாயிடை நிறைய
தாலொலித்திடும் திருவினை யில்லாத
தாய ரில்கடை யாயின தாயே."

தூங்கி விழித்த குழந்தையைப் பல பெண்கள் மடியில் வைத்துக்கொண்டு "குழந்தாய், அப்பா காட்டு" என்று பரிவுடன் கேட்கிறார்கள். அப்பொழுது

குழந்தை தன் விரலினாலும், கடைக் கண்ணினாலும் காட்டுகிறது.

“ முந்தை நன்முறை யன்புடை மகளிர்
முறைமுறை தந்தம் குறங்கிடை
யிருத்தி
எந்தையே ! என்தன் குலப்பெருஞ் சுடரே
எழு முகில் கணத்தெழில் கவரேறே!
உந்தை யாவனென் றுரைப்பநின் செங்கேழ்
விரலி னும்கடைக் கண்ணினும் காட்ட
நந்தன் பெற்றனன் நல்வினை யில்லா
நங்கள் கோன்வசுதேவன் பெற்றிலனே”

இக் காட்சியைக் கண்ட தேவகி உள்ளம் சாம்பி இப் பாக்கியம் தன் கணவன் வசுதேவன் பெறவில்லையே என்று பெருமூச்செறிந்தாள்.

குழந்தையின் ஒவ்வொரு அவயவத்தையும் சிந்தித்தாள் தேவகி. நிலவுபோல் ஒளி வீசுகிற கண்ணனின் முகமும் மார்பும் தோளும் எல்லாம் இவள் கண்முன் தோன்றி மறைந்தன. இளமை யின்பத்தைப் பருகத் திருவில்லாத தாயாய் இருக்கின்றேனே என்று உள்ளங் கசிந்து அழுதாள்.

“ களிநிலா வெழில் மதிபுரைமுகமும்
கண்ணனே ! திண்கை மார்வும் திண்
[தோளும்
தளிர்மலர்க் கருங் குழல் பிறையதுவும்
தடங்கொள் தாமரைக் கண்களும்பொலிந்த
இளமை யின்பத்தை இன்று என்தன் கண்
[ணல்
பருகுவேற்கு இவள்தாயென நினைந்த
அளவில் பிள்ளைமை யின்பத்தை யிழந்த
பாவியே னெனதாவி நில்லாதே ”

இப்படி அடையவில்லையே என்று நினைக்கிற தேவகிக்கு மனத்தில் எள்ளளவும் பொறாமை கிடையாது. “தெய்வ நங்கை யசோதை” என்று அவள் கூறிய வார்த்தைகள் எவ்வளவு தூய்மை உடையவள் தேவகி என்று நன்கு விளக்கும். குழந்தையின் பாலிய லீலைகளை அனுபவிக்காததுபற்றி எந்தத் தாய்தான் மனம் புழுங்காள் ?

“உன் நெற்றியில் சுட்டி ஆட உனக்கு முத்தம் தாவில்லை நீ வருகிற பொழுது, உன் அப்பா வருகிறதுபோலிருக்கும். அவ் வடிவுகண்டு உள்ளம் குளிர பாக்கியம் பெறவில்லை. எல்லாம் தெய்வ நங்கை யசோதை பெற்றாள்” என்ற எண்ணங்கள் தேவகியின் உள்ளத்தில் அலை அடித்தன.

“ மருவும் நின்திரு நெற்றியில் சுட்டி யசைதர
மணி வாயிடை முத்தம்
தருதலும் உன்தன் தாதையைப் போலும்
வடிவுகண்டு கொண்டு உள்ளம் உள்குளிர
விரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்த்து
வெகுளியாய் நின்றுரைக்கும் அவ்வுரையும்
திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன் எல்லாம்
தெய்வநங்கை யசோதை பெற்றாளே ”

மேலும் குழந்தை மண்ணில் செம்பொடி ஆடிவந்து தன்னை மார்பிடைத் தழுவவில்லை என்ற குறையும் தேவகியின் மனத்தில் எழுந்தது.

“ தண்ணந் தாமரைக் கண்ணனே ! கண்ணு
தவழ்ந்தெழுந்து தளர்ந்ததோர் நடையால்
மண்ணில் செம்பொடி யாடிவந்து என்தன்
மார்வில் மன்னிடப் பெற்றிலேன் அந்தோ ”

எல்லாக் குறைகளைக் காட்டிலும், குழந்தைக்குப் பால் கொடுக்கவில்லையே என்ற குறையைத்தான் பெருங்குறையாக அவள் கருதினாள். அவள் மனத்தில் விரிந்த சித்திரம் நம் மனத்தைவிட்டு அகலாது.

“என் குடங்கையில் குழந்தையை வைக்கவில்லை இளம் தளிர்போல அது ஒரு கையால் ஒரு முலைமுகம் நெருடும். இடை இடையே மழலை மென்னகை தரும். வாயிலே முலையிருக்க அன்னை முகம் நோக்கும் காட்சியை அனுபவிக்க அருள்பெற்றிலேனே என்று இரங்கிப் பேசுகிறாள் தேவகி”.

“ குழகனே ! என்தன் கோமளப் பிள்ளாய்
கோவிந்தா ! என் குடங்கையில் மன்னி
ஒழுகு பேரெழில் இளஞ் சிறுதளிர் போல்
ஒரு கையால் ஒரு முலை முகம் நெருடா
மழலை மென்னகை யிடை யிடையருளா
வாயிலே முலை யிருக்க என் முகத்தே
எழில்கொள் நின்திருக் கண்ணினை நோக்கந்
தன்னையும் இழந்தேன் இழந்தேனே”

தன் பிள்ளை வெண்ணெய் திருடினதற்காக யசோதை தாம்பு கொண்டு அடிக்கிற சித்

திரமும் அவள் மன மன்றில் மின்னலடித்தது.

"முழுதும் வெண்ணெ யளைந்து தொட்டுண்ணும்
முகிழிளஞ் சிறுத்தாமரைக் கையும்,
எழில்கொள் தாம்புகொண் டடிப்பதற்கு எற்கு
நிலையும் வெண் தயிர் தோய்ந்த செவ்வாயும்
அழுகையும் அஞ்சி நோக்கும் அந்நோக்கும்
அணிகொள் செஞ்சிறுவாய் நெளிப்பதுவும்
தொழுகையும் இவைகண்ட அசோதை
தொல் லையின்பத்திறுதி கண்டாளே"

இப்படி ஒவ்வொரு படமும் அவள் கண் முன் மிதந்து வந்தது. தன்னையறியாமல் கண்களில் நீர்பெருகிப் பக்கத்தில் படுத்திருந்த வசுதேவர் மீது விழவே அவர் எழுந்து நீர் மல்கிய அவள் கண்களைப் பார்த்தார். "என்ன! ஏன் அழுகிறாய்?" என்று அவர்வினவ, "குழந்தையின் ஞாபகம் வந்தது, வந்ததும் என்னை யறியாமல் கண்களில் ஜலம் வந்துவிட்டது" என்று பதில் கூறினாள் தேவகி.

"பயித்தியக்காரி, குழந்தை, எங்கே வளர்ந்தால் என்ன? அவனுக்கு ஒரு குறைவும் வராது நீ பயப்படாதே."

"ஆமாம் நீங்கள் சொல்லுவது உண்மை தான். நாங்கள் பெண்களோ இல்லையோ, மனம் தாங்கமாட்டாமல் புலம்புகின்றோம்" என்று முடித்தாள் தேவகி.

இந்தத் 'தேவகியின் புலம்பலில்' குலசேகர ஆழ்வார் தன் கவித் திறமையை நன்றாய்க் காட்டி யிருக்கிறார். ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு சித்திரமென்றே சொல்லிவிடலாம். சொற்களை வைத்துக் கொண்டு, கண்ணனின் கடைக் கண்ணின் பார்வையையும், ஒரு மூலை முகம் நெருடிக் கொண்டு அவன் காட்டின முறுவலையும், வெண்ணெ யளைந்த கையையும், வெண் தயிர் தோய்ந்த செவ்வாயையும் அஞ்சி நோக்கும் அந் நோக்கையும் சித்திரங்களாகச் சமைப்ப தென்றால் சாதாரண காரியமில்லை. தான் கண்ட அனுபவத்தைப் பிறர் மனத்திலும் எழுப்புகிறது தான் கவியினுடைய ஆற்றல் என்பதில் சற்றுஞ் சந்தேக மில்லை. இத்தகைய ஆற்றலும் கற்பனு சக்தியும் இப் பாடல்களில் ததும்பி நிற்பதை எவரும் காணலாம்.

# திருவடிப்புணை

வே. நாராயணன்
எம். ஏ., எம். எல்.

சென்னையில் கடற்கரை யோரம்; கடலிலே பலர் நீந்திச் செல்லுகின்றனர்; ஒரு சிலர் கட்டுமரங்களிலே செல்வோராய், துடுப்புகளால் கடல்நீரைத் துழாவிக் கட்டு மரங்களைச் செலுத்துகின்றனர். அவைகளைப் பார்த்துக்கொண்டு கரையிலே நிற்கிறார் ஒரு கிழவர்; அவர் தம் அருகிலிருந்த சிடனை நோக்கி, தம்பி! இவர்கள் செய்வனவற்றைக் கவனித்தாயோ? கடத்தற்கரிய கடலைத் தன் கைப்பலத்தைக் கொண்டு நீந்திக் கடத்தல் கூடுமோ? துடுப்பைக்கொண்டு துழாவிக் கடக்க முயல்வதும் மதியீனமன்றோ? ஒன்று, இவர்கள் கடலுள் அழுந்திக் கெடுவார்கள்; அல்லது, நாம் அனைவரும் கைகொட்டிச் சிரிக்கும் நிலையில், மீண்டும் கரைவந்து சேருவார்கள். இதுபோலவேதான் பிறவிப் பெருங்கடலை நீந்த முயல்வதும். மக்கள் பிறவிப் பெருங்கடலை நீந்த முயல்கிறார்கள்; ஆயினும் அவர்களுட் பலரும் நீந்தி அக் கரை செல்லமாட்டார்கள். நீந்திச் செல்லவேண்டும் என்ற ஆசையும் ஆற்றலும் இருந்தால் மட்டும் போதுமா? தெய்வத்தின் அருளைப் பெறவேண்டும். 'துன்பக் கடல் புக்கு வைகுந்தன் என்பதோர் தோணி பெறாது உழல்கின்றேன்' என்பது நாய்ச்சியார் திருமொழி. தோணிபுரத்து அம்மையப்பன் அருளாகிய தோணியைப் பெறவேண்டும். பெறாவிடின், நாம் மீண்டும் இக்கரையேறி இளைத்திருக்கவேண்டியதுதான் "அனத்தக் கடலுள் அழுந்தி இக் கரையேறி இளைத்திருந்தேனை உன் பேரருளால் 'அஞ்சேல்!' என்று கைகவியாய்" என்பர் பெரியாழ்வார். இறைவன் திருவடியிணையாகிய வன்புணையைப் பெறவேண்டும். பெற்று, அதனைக்கொண்டு கடலில் இறங்கினால் நீந்தி அக் கரை சேரலாம். 'புணைவன் பிறவிக் கடல்நீந்துவார்க்கே' என்பர் நம்மாழ்வார்.

பிறவிக் கடலை நீந்துவார்க்குப் புணையாக உதவும் பாதங்களை யுடையவன் இறைவன். திருவடியிணையாகிய புணையைப் பெற்றவனே சாகத் துணிந்தவன் ஆவான்; சாகத்துணிந்தவனுக்கு சமுத்திரங்கூட முழங்காலாழும் உடையதாகி விடும் என்பதன் கருத்தும் இதுவே. நீ என்னைக் கைக்கொண்டபின் என்ன அதிசயம் நிகழ்ந்தது தெரியுமா? என்று பெரியாழ்வார் பரமபுருடனைப் பார்த்துச் சொல்பவராய், "பிறவி என்னும் கடலும் வற்றிப் பெரும்பத மாகின்றதால்!" என்று வியந்து கூறுகிறார்.

கடலைக் கடந்து வந்த அனுமனைப் பார்த்து சீதாப்பிராட்டி "ஐயா! நீ அளப்பரும் அளக்கர் நீந்தினை யெய்தியது எப்பரிசு? இயம்புவாய்' என்றாள். அது கேட்டு, அநுமான் "சுருங்கிடை! உன் ஒரு துணைவன் தூயதாள் ஒருங்குடையுணர்வினோர், ஓய்விலா மாயையின் பெருங்கடலைக் கடந்தனர் பெயரும் பெற்றிபோல், இக் கருங்கடலையும் காலினாற் கடந்தேன்' என்றான். ஓய்விலாத மாயாமயமாகிய சமுசார சாகரத்தைக் கடப்பதற்கு முயல்வோர் அந்த அளப்பரும் அளக்கரை நீந்துவோராயினும் அவர்கள் அக் கரை யெய்தவேண்டின், உன்னுடைய துணைவனின் தூயதாளில் ஒருங்கிய உணர்வுடையவர்கள் ஆதல் வேண்டும். அவ்வாறாயின், மட்டுமே அவர்கள் 'பெருங்கடலைக் கடந்தனர் என்னும் பெற்றி'யுடையோர் ஆவர்; அத்தகைய பெற்றியினைப் பெறுவிப்பது உன் துணைவனுடைய தூயதாள் என்று அறிந்த எனக்கு, இக் கருங்கடலைக் கடப்பது கடினமாகுமோ? அக் காலினாலேதான் கடந்தேன்" என்று விடை தந்ததையும் நோக்குவாயாக.

ஆனால் இறைவனுடைய பாத விலச்சனை நம் சென்னித்திடரிலே அமையப் பெற்றோம் என்று இருத்தல் கூடாது. திருவருள் கை கூடியதன் அறிகுறியாக நாமும் முயன்றால் மட்டுமே கற்

பயனைப் பெறலாகும். பிறவிப் பெருங் கடலை நீந்துவர் இறைவனடி சேராதாராயின் நீந்திக் கரையேற மாட்டார்கள்; இறைவனடி சேர்ந்து பிறவிப் பெருங் கடலை நீந்த முயலாது இக் கரையிலேயே சும்மா யிருப்பினும், அக் கரை சேர இயலாது. தம்பி! இக் கருத்துக்களை யெல்லாம் உட்கொண்டே, நமது நாயனரும்,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்"

என்று கூறியுள்ளார் என்பது தெளிவு" என்று சொல்லி முடித்தார். நானும் கடற்கரையினின்று வீடுவந்து சேர்ந்து நான் கேட்டவற்றை யொரு கட்டுரையாக அமைத்தேன்.

---

விளம்பரம்

மன்னார்குடி டி. மு. கோர்ட்டு
S. C No, 483/1940

V. G. ராமலிங்கம் பிள்ளை—வாதி
ச. ஈ. முகம்மது கலிபா சாகேப்பு—Deft.

ஷை நம்பர் வாதி வக்கீல் K. சின்னஸாமி அய்யர் தெரிவிக்கிறதாவது:—

வாதியால் பிரதிவாதி பேரில் பத்துவரவு கணக்குப்படி ரூ. **143-1-2** கிடைக்க வேணுமாய் தாவா செய்யப்பட்டு சம்மனை ஒட்டி சார்வு செய்ய உத்திரவாகி **17-2-1941**ல் ஈரங்கி போடப்பட்டிருக்கிறது. அன்று பிரதிவாதி ஆஜாாகி கக்ஷிகளை தெரிவிக்காத வரையில் எகஸ்பார்ட்டி செய்து தீர்ப்பாகிவிடும் என்பதை அறிவிக்கிறேன்.

மன்னார்குடி **K. Chinnaswami Aiyar,**
10-2-41. வாதி வக்கீல்

படித்தவர்கள் பாமரர்கள்
கிழவர்கள் இளைஞர்கள்
ஆண்கள் பெண்கள்
எல்லோரும்
படித்து ஆனந்திக்கத்தகுந்தது

*

**பாரத மணி**

இனிய மாதப் பத்திரிகை

வருஷ சந்தா { உள் நாடு ரூ. 3
வெளி நாடு ரூ. 5 }

*

**இன்றே சந்தாதாரராய்ச் சேருங்கள்.**

# ஸ்ரீ ரவீந்திரர் பரம்பரை

[கு. ப. ராஜகோபாலன், பி. ஏ.]

கீதாஞ்சலி என்று ஆங்கில நூலில் மொழிபெயர்த்துக் கொடுக்கப்பட்டிருக்கும் கீதங்கள் ஸ்ரீ ரவீந்திரர் தமது நடு வயதின் இறுதியில் எழுதியவை. அவருக்கு அப்பொழுது வயதுசுமார் ஐம்பது. கீதாஞ்சலி அவருடைய ஆங்கில நூல்களில் முதலாவது; ஆனால் அவருடைய வங்காளி நூல்களிடையே அநேகமாகக் கடைசியில் வெளியான முக்கியமான புத்தகம் என்று சொல்லலாம். கீதாஞ்சலிக்குப்பின் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொடுக்கப்பட்ட பல நூல்கள் அவர் அதற்குமுன் இருபத்தைந்து வருஷகாலத்தில் எழுதின வங்காளிப் புத்தகங்களிலிருந்து பொறுக்கி எடுத்தவை. இந்தத் தலைகீழ் முறையில் நாம் அவரை ஆங்கிலத்தில் படிக்க நேர்ந்ததால் தலை முறையே, பரம் பரையே, புரண்டு தென்படுகிறது. கீதாஞ்சலிப் பாடல்கள் பாடின ரவீந்திரர் ஐம்பதாவது வயதின்போது தான் தோன்றினர் என்பதை வாசகர்கள் அறிய முடியாமற் போகிறது. என்றுமே அவர் அம்மாதிரிப் பாடல்கள் பாடித் திரிந்தவர்தானே என்று நினைக்க நேரிடுகிறது. அவர் காதலைப்பற்றி எழுதிய புத்தகம் பிறகு வெளிவந்தால் அது தப்பிப் பிறந்ததோ அல்லது மறைபொருள் கொண்டதோ என்ற நினைப்பை ஊட்டுகிறது. இந்த வகையில் ரவீந்திரரின் மகிமை முழுவதும் வெளிவராமல் மங்கிப் போய்விட்டது.

நம் தமிழ் நாட்டில் கூட பாரதிக்கு அந்தகதிதான் ஏற்பட்டது. தேசியப் பாடல்கள் சில வற்றை எழுதியிருக்கிறார் என்றும் அவற்றால் தான் அவர் மகிமை என்றும் தப்பெண்ணம் ஏற்பட்டுவிட்டது. தேசியப்பாடல்கள் பாரதியின் கவிதையில் ஒரே ஒரு சிறு அம்சம் தான் என்பது தெளிவாகாமல் போய் விட்டது. அதே மாதிரி கீதாஞ்சலி முதலில் வெளி வந்ததால் ரவீந்திரர் இளைஞராகவும் யௌவன புருஷராகவும் இருந்தபொழுது எழுதிய அழகுமிக்க கவிதையெல்லாம் மதிப்பற்றுப் போயின.

கீதாஞ்சலிப் பாட்டுகள் அற்புதமாகத் தான் இருக்கின்றன. ஆனால் அவை ரவீந்திரருடைய கவிதையில் சதாம்சம் கூட இல்லை. நான் முன் சொன்னதுபோல அவை ரவீந்திரருடைய கவிதைப் பருவத்தில் அறுவடையான பிறகு தோன்றினவை—சிதறிய கதிர்கள்—அவ்வளவு தான்.

ஆனால் அவையுட்பட ரவீந்திர நாதர் சென்ற அறுபத்தைந்து ஆண்டுகளாக எழுதிய எல்லா எழுத்துக்களுக்கும் ஆதாரமான பொதுக்கருத்து ஒன்று இருக்கிறது. அதைத் தூண்டின பரம்பரையும் ஒன்று இருக்கிறது.

ஸ்ரீ ரவீந்திர நாதருடைய நூல்களில் பொதுக் கருத்து என்ன? அவருடைய இலக்கிய பரம்பரை எது?—இந்த இரண்டு கேள்விகளுக்கும் செவ்வனே பதில் அளித்துவிட்டால் அவருடைய யாவற்றையும் பற்றிச் சுருக்கமாகச் சொல்லியாகிவிடும்; அவருடைய கவிதையின் மகத்துவத்தை ஸ்தாபித்தாகி விடும்.

ஆமாம், ரவீந்திரர் உலக கவிகளிடையே ஒரு மகா கவியாக இருப்பது இவை இரண்டால் தான். இந்திய இலக்கியப் போக்கைப் பின்பற்றி அதன் பணியில் விழுந்து அவருடையசொல்லாலும் பொருளாலும் தான் அவர் வால்மீகி, வியாஸர், காளிதாஸன், கம்பன், இளங்கோ—இவர்களுடன் இந்தியாவின் மகாகவிகளில் ஒருவராக இருக்கிறார். அவர் கையாளும் விஷயம் மேற்சொன்னவர்கள் உன்னத முறையில் கையாண்டு கொடுத்துவிட்டுப் போயிருக்கிற விஷயம். அவர்களுடைய நேர்மரபில் தோன்றியவர் அவர். அதற்கு அத்தாட்சி அவர் எழுதியிருக்கும் ஒவ்

வொரு பக்கத்திலும் இருக்கிறது. அவருடைய சொற்சிறப்பும் செருக்கும் உவமைத்திறனும் எவ்வளவு தூரம் வால்மீகியாலும் காளிதாஸனலும் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பின்னேர் இடத்தில் குறிக்கிறேன்.

அவருடைய மூலாதாரமான கவிதைக் கருத்தும் இந்திய இலக்கியத்தின் சிகரக் கருத்துதான். வேத ரிஷிகளும் வேதாந்தத்தின் கவிகளும், யோகிகளும் சித்தர்களும் கண்கண்ட உண்மைபோல அநுபவித்துக் களித்துக் கனவாக்கிப் பாடின கருத்து அது—மனித ஹிருதயத்தின் ஒரு மட்டற்ற காதற் கருத்து. அந்தராத்மா தன் காதலியைக் காண ஏங்கும் நிலையில் பிரிவாற்ருமை கொண்டு பரிதபிக்கும் விசுவ விரகக் கருத்து.

கவியின் உள்ளம் ஒரு காதலன் போல, சுற்றியிருக்கும் சக்தி ஸ்வரூபமான இயற்கையின் அழகு அதன் காதலி, உயிர்த் தெய்வம்—ஜீவன தேவதை. இந்த ஜீவன தேவதையைத்தான் கவி தான் பாடும் முதல் பாட்டு முதல் கடைசிப் பாட்டு வரை—எல்லாவற்றிலும் இடைவிடாமல் போற்றுகிருர். கவிதையே இந்தப் போற்றுதலின் சாரம்தான். ஜீவன தேவதை தான் அவருடைய வாக்கின் அதிஷ்டான தேவதை. அவளுடைய அருள்தான் பிரகிருதியின் பல அம்சங்களாக அவரிடம் என்றும் பூர்ணிமை நிலவுபோலப் பொங்கி இருந்து அவர் வாக்குக்குச் சக்தியையும் வேகத்தையும் கொடுக்கிறது.

இந்த ராதாகிருஷ்ண பாவம்தான் கவிதையின் ஜீவ நாடி. யோகி பிரகிருதியில் கலந்து நிற்கும் பரமாத்மாவிடம் காதல் கொள்கிருன்; கவி பரமாத்மாவிடம் காதல் கொள்ளக் கிளம்பினவன் பிரகிருதியிடமே லயித்து அத்துடனேயே நின்றுவிடுகிருன். எனவே ஒரு முறையில் யோகி திசை தப்பிக் கவியாகிவிடுகிருன். எப்படித் தாந்திரீகத்தில், முக்திக்கு இச்சைப்பட்டவன் சில்லறை சித்திகளைக் கண்டு மயங்கி அவற்றில் ஈடுபட்டு விடுகிருனே அப்படி.

கவி முற்றி யோகி ஆகிருன் என்று நான் ஒரு சந்தர்ப்பத்தில் சொன்னதைத் திருப்பி இப்படிச் சொல்லுகிறேன்—யோகி நிலை தவறிக் கவி ஆகிவிடுகிருன். யோகியின் லட்சியமும் கவியின் லட்சியமும் ஒன்றுதான்—ஆத்மா பரமாத்மாவுடன் சேர்க்கை கொள்ளவேண்டும் என்ற காதல், ஆனல் யோகி கலங்காத உள்ளத்துடன் லட்சியத்திலேயே நிற்கிருன். கவி பிரகிருதியின் புற அழகைக் கண்டு மயங்கி அதுதான் லட்சியம் என்று பிரமைகொண்டு நின்றுவிடுகிருன். கவியின் உள்ளம் பாரதியின் "காதலன்—கண்ணன்" போல தன் காதலியான இயற்கை அழகைப் பார்த்துக் கேட்கிறது.

'சுட்டும் விழிச்சுடர்தான்—கண்ணம்மா,
சூரிய சந்திரரோ ?
வட்டக்கரிய விழி—கண்ணம்மா,
வானக் கருமை கொல்லோ ?'

இந்த மனமோகினியின் மாய எழில் கவியை அடிமையாக்கிவிடுகிறது. அவளை ஜீவன தேவதை என்று உள்ளக் கோவிலில் இருத்தி ஆராதிக்கிருன். இந்தக் கொள்கையைப்பற்றி பிறகு விரிவாகச் சொல்லவேண்டும். இப்பொழுது ஸ்ரீ ரவீந்திருடைய கவிதைக்கு ஆதாரமான இந்தக் கருத்தின் வளர்ச்சியைச் சற்று கவனிக்கவேண்டும்.

———

## சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு

யுத்த நிலைமையினால் "பாரதமணி"யின் வாரப்பதிப்பை மாதப் பதிப்பாக மாற்றியமைத்திருக்கிறோம். உயர்ந்த கட்டுரைகளையும் அரிய விஷயங்களையும் தாங்கி "பாரதமணி"யின் மாத சஞ்சிகை வெளிவரும். சிரமமிருந்தபோதிலும் அதைப் பொருட்படுத்தாமல் வருஷ சந்தா 4 ரூபாயை 3 ரூபாயாகக் குறைத்திருக்கிறோம்.

அக்டோபர்மீ முதல் தேதிவரையில் 4 ரூபா வீதம் கணக்குப் பார்த்துப் பாக்கி நிற்கும் சந்தாவை வருஷத்திற்கு 3 ரூபா வீதம் மாதப்பதிப்புக்கு வைத்துக் கொள்ளப்படும். இதற்குடன் படாதவர்கள் காரியாலயத்திற் கெழுதினால் பாக்கித் தொகை திருப்பி யனுப்பப்படும்.

**மானேஜர்,**
"பாரதமணி" காரியாலயம்,
12, பிருந்தாவனம் தெரு, மயிலாப்பூர், சென்னை.


### கல்யாண காலம்:

நவீன பாஷன் பெங்களூர் பட்டு சேலைகள் எல்லா அளவுகளிலும் பெங்களூர் விலைக்கு எங்களிடம் கிடைக்கும்.

இன்னும் மற்ற முக்கியமான இடங்களில் தயார் ஆகும் பட்டு, நூல் சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்களும் மிக நயமான விலைக்கு கிடைக்கும்.

ஜவுளி தினுசுகள் வாங்க உத்தேசிக்கும் ஒவ்வொருவரும் எமது கடைக்கு வந்து இங்குள்ள ரகங்களைப் பார்த்த பின் தீர்மானஞ் செய்யுங்கள்.

**பெங்களூர் சில்க் ஹவுஸ்,**
(Prop : H. சுப்பண்ணா, பெங்களூர்)
**132, நைநியப்ப நாயக்கன் தெரு,**
**பார்க் டவுன், மதராஸ்.**



### புத்திக்கு உணவு வேண்டாமா?

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ சங்கராசார்யார் உபந்யாஸங்கள் | 1 | 8 |
| 2. | அற்புத உலகம் (பெ. நா. அப்புசாமி அய்யர்) | 1 | 0 |
| 3. | விதியின் செயல் முதலிய கதைகள் (வ. எஸ். பஞ்சாபகேசய்யர், ஐ. ஸி. எஸ்.) | 0 | 6 |
| 4. | குமுதினி (ஸ்ரீமதி ரங்கநாயகி மொழி பெயர்ப்பு) | 1 | 8 |
| 5. | சந்திரிகா (குகப்ரியை) | 0 | 12 |
| 6. | ஹிட்லரும் மகா யுத்தமும் (A. G. வெங்கடாசாரி, பி.ஏ.) | 1 | 4 |
| 7. | ஜடாவல்லவர் (வரகவி திரு அ. சுப்ரமண்ய பாரதி) | 1 | 2 |
| 8. | தேசபக்தன் கந்தன் (கே. எஸ். வேங்கடரமணி) | 1 | 0 |
| 9. | முருகன் ஓர் உழவன் (கிருஷ்ண குமாரி மொழி பெயர்ப்பு) | 1 | 8 |

**சுவேதாரண்ய ஆச்ரமம்**
12, பிருந்தாவனம் தெரு, மயிலாப்பூர், மதருஸ்.

# நாவல் மரம்

[கே. வேங்கடாசலம், தூத்துக்குடி.]

சென்ற கோடை விடுமுறையின் போது என்னுடைய கிராமத்திற்குச் சென்றிருந்தேன். ஹரிகேசவ நல்லூர் சிறிய கிராமம் தான். மொத்த ஜனத் தொகை ஆயிரத்துக்குமே விராது. இரண்டு மெத்தை வீடுகளும், மூன்று காரை வீடுகளும், மற்றவை ஓலை, ஓடுகளால் வேயப்பட்ட வீடுகளும்தான். கிராமத்தை வளைந்து கன்னடியன் கால்வாய் ஓடுகிறது. கால்வாய் சிறியதானாலும் அதன் பிரயோசனம் மிகப் பெரிது. கன்னடியன் வாய்க்கால் பாசனத்து நிலம் என்றாலே அதற்குத் தனி மதிப்பு.

ஹரிகேசவ நல்லூரில் நான் சென்ற இரண்டு நாள் எப்படியோ கழிந்துவிட்டது. கார்ணம் கொழும்பிலிருந்து வந்திருந்த இரண்டு பேர் என் கூட இருந்தனர். நேரமும் ஓடிவிட்டது. ஆனால் மறு நாள் அவர்கள் பாபவினாசம் சென்றுவிட்டபடியால் நான் வீட்டில் தனியாக உட்கார்ந்திருந்தேன். வீட்டில் என்னைத் தவிர, என் அம்மாவும், பாட்டியும் தான் இருந்தார்கள். காலை பத்து மணிக்கு அதாவது காப்பி பலகாரம் சாப்பிட்ட பின்பு வாய்க்காலுக்கு ஸ்நானம் செய்யப் போனேன்.

வாய்க்கால் படித் துறை மீது ஒரு விநாயகர் கம்பீரமாக வீற்றிருந்தார். பிள்ளையார் இல்லாத இடமே அந்தப் பக்கம் மிகவும் அபூர்வ மல்லவா? அதுவும், சைவப் பழங்கள் நிறைந்த நெல்லைப் பிரதேசத்தில் கேட்கவா வேண்டும்? விநாயகரின் ஆலயம் இயற்கையால் நிர்மாணிக்கப்பட்டது. வேம்பு ஓங்கி வளர்ந்து நிழலைக் கொடுத்துக்கொண் டிருந்தது. அதைச் சுற்றி அரசு வளைந்து வளைந்து தழுவிக்கொண் டிருந்தது. சிலு சிலு வென்ற மெல்லிய காற்று வீசிக்கொண் டிருந்தது. இதைக் கவனித்துக்கொண் டிருந்த என் கண்கள் பிள்ளையாரின் மீது விழுந்தது.

பிள்ளையாருக்குக் கட்டியிருந்த பரிவட்டத் துணியைக் கசக்கிப் பிழிந்தால் கால் படி எண்ணெய் எடுக்கலாம். அவ்வளவு எண்ணெய்ச்சிக்கு! வாய்க்காலில் ஸ்நானம் செய்து விட்டுப் பெண்கள் ஈர உடையுடன் விநாயகரை வலம்வந்து விபூதி யிட்டுக் கொண்டனர். பாவம்! பிள்ளையார் கல்லுப் பிள்ளையார்! இல்லையானால் அவர் அத்தனை பேரிடமும் "திருஷ்டி" படாம லிருப்பாரா? விநாயகர் சிலைக்கு அடுத்தாற்போல் ஒரு நாவல்மரம் இருந்தது. மிகவும் பழமையான மரம். இதற்குமுன் நாவல் பழத்தைப் பார்த்திருக்கிறேனே ஒழிய, மரத்தைப் பார்த்ததில்லை. அடேயப்பா! எத்தனை உயரம்! எத்தனை கிளைகள்! அதில் தொங்கிக்கொண் டிருக்கும் வட நாட்டு 'ஷாலிக்கிராம்' போன்ற நாவல் பழங்கள்தான் என்ன அழகு! நாக்கில் ஜலம் ஊற்றெடுத்து, கீழேவிழுந்த ஒன்றிரண்டு 'சுட்ட' பழங்களை ஊதி ஊதித் தின்றேன்.

நாவல் பழ வேட்டையில் குளிக்க வந்ததையும் மறந்து மரத்தடியில் உட்கார்ந்தேன். கொஞ்சநேரம் சென்றது. ஒரு கிழவர், அவருக்கு வயது அறுபதுக்குமேலிருக்கும்—வந்துகொண் டிருந்தார். நான் அங்கு இருப்பதைக் கண்டதும் அவர் முகம் ஒருவிதத் தோற்றமடைந்தது. அவ்வருடைய முகத்தில் ஏற்கனவே இருந்த சுருக்கம் இன்னும் அதிகமாகியது. அவர் என்னை நோக்கி அருகில் வந்ததும், நான் எழுந்து நின்றேன். "அப்பா, நீ, சுப்பராமன் பிள்ளை யல்லவா?" என்று தணிந்த குரலில் கனிவுததும்பக் கேட்டார்.

"இல்லை; நான் அவருடைய தமக்கை பிள்ளை" என்று பதிலுரைத்தேன்.

"சரிதான், மங்களத்தின் மகனு நீ! அது கிடக்கட்டும், இந்த நடுப்பகலில் இங்கே மரத்தடியில் ஏன் வந்து நிற்கிறே?" என்று கேட்டார்.

"இல்லே, குளிக்க வந்தேன். சும்மா ......" என்று இழுத்தேன்.

"அட, பாவமே! நாவல்பழ ஆசையில் உன் தலேமேல் விழ இருக்கிற ஆபத்தைக் கூட மறந்துட்டயே" என்று பரிவுடன் சொன்னர்.

"என்ன, ஆபத்தா! விளங்கவில்லே யே" எனப் பதட்டத்துடன் வினவினேன்.

"ஆம்; அப்பா, வா அப்படி உட்காருவோம்." என்று கூறிவிட்டு விநாயகரை நோக்கினர். நானும் கூடப் போனேன். கிழவர் படித்துறைக் கல்லின்மீது உட்கார்ந்தார். அப்போது வாய்க்காலில் ஒருவரும் இல்லே. சூரிய வெப்பம் கலந்த காற்று வீசியது. கிழவரும் கதையை ஆரம்பித்தார்.

* * *

மைதிலி முத்துசுவாமி பிள்ளேயின் மூத்த பெண். இளமையின் பொலிவு அவளிடம் ததும்பிக்கொண் டிருந்தது. அவள் வாய்க்காலுக்கு இடுப்பில் கும்ப கோணத்துக்குடத்துடன் ஆடி அசைந்து வருவது கந்தருவப் பெண் நடனத்தைக் கூடத் தூக்கி யடித்து விடும்போ லிருந்தது. அவளுடைய முக மண்டலத்தில் ஆயிரம் இரவிகளின் ஒளியுடன்கூடிய புன்னகை தான் எப்படி! அவள் வாய்க்காலில் ஜலம் மொண்டு குடத்தை 'ஜக்' கென்று இடுப்பில் வைப்பதிலும் தனி யழகு சொரிந்துகொண் டிருக்கும். ஆம், மைதிலி பெயருக்கு ஏற்ப அழகி, குணவதியுங்கூட.

அவள் மனதைத் திருடிய கள்வன் தான் நாகபூஷணம். அவனிடம் மைதிலி எப்படித் தன் மனதைப் பறிகொடுத்தாள் என்பது தனிக் கதை. ஒரு சமயம் மைதிலி, வழக்கம்போல் சூரிய உதயத்திற்குமுன் வாய்க்காலுக்கு ஜலம் எடுக்க வந்தாளாம். அப்போது படித்துறைமீது கிடந்த வஸ்து ஒன்றின்மீது அவள் காலே வைத்ததும், "ஐயோ! பாம்பு! பாம்பு!" என்று கத்தினளாம். மைதிலியின் கூக்குரல் கிராமத்தாரை எழுப்பிவிட்டது. அவள் குடம் வாய்க்காலோடு யாத்திரை போய் விட்டது. கிராமத்தார் ஓடிவந்ததும், அவர்கள் கண்ட காட்சி அவர்களேத் திடுக்குறச் செய்தது. படித்துறையில் மைதிலி மூச்சுப் பேச்சின்றிக் கிடந்தாள். அவளே வீட்டுக்குக் கொண்டு போய் வைத்தியருக்கு ஆள் அனுப்பினர்கள். கிராமத்து வைத்தியர் அயலூர் சென்றுவிட்டபடியால் அவர்களால் மைதிலிக்கு என்ன நேர்ந்தது என்றுகூட அறிய முடியவில்லே. ஸ்மரணே வந்தபோது, "பாம்பு, பாம்பு" என்று கத்தினள். மைதிலியின் பெற்றேர்கள் செய்வதறியாமல் துடித்தனர்.

ஹரிகேசவ நல்லூர் பெரிய வீட்டுப் பிள்ளேயின் மைத்துனன் நாகபூஷணம் பட்டணத்தில் வைத்தியக் கல்லூரியில் படித்துக்கொண் டிருந்தவன் கோடை லீவில் வந்திருந்தான். அவன் காதிலும் இந்தச் செய்தி விழுந்தது. இருந்தாலும் தானே போவது சரியல்ல வெனத் தீர்மானித்து வீட்டில் பேப்பர் வாசித்துக் கொண் டிருந்தான். இதற்குள் நாலேந்து பேர் ஓடிவந்து, "அப்பா, நாகபூஷணம் நீ தான் டாக்டருக்குப் படிச்சிருக்கிறயே, அந்தப் பெண்ணுக்கு என்னன்னு பாரடா" என்று கேட்டுக்கொண்டார்கள். நாகபூஷணமும் நகர்ந்து சென்ருன்.

மைதிலி வரவர குணமடைந்தாள். நாகபூஷணத்தின் சிகிச்சையால். அவளேப் பாம்பு தீண்டவில்லே. கிலிபிடித்துவிட்டது. ஒருவாரம் கழித்து நாகபூஷணம் மருந்து கொடுக்கச் சென்றபோது மைதிலியின் அறையில் அவளேத் தவிர யாருமில்லே. உள்ளே காலே வைத்தவன், சற்று வெளியே அடிவைத்தான்; மைதிலியின் களங்கமற்ற முகத்தை அவன் ஒரு கணம் கண்டான். அவன் இருதயத்தில் பெரும் புயல் ஆரம்பித்துவிட்டது. "சும்மா, வந்து பார்க்கிறதுதானே," என்ற இனிய குரல் வந்ததும் நாகபூஷணம் தைர்யமாய்க் காலடி எடுத்துவைத்தான். மைதிலியின்

உடம்பு கிலியினால் வெடவெடத்துப்போயிருந்தது. அவன் அன்று அவளுக்கு மருந்து கொடுக்கவில்லை. அதற்குப் பதில் மைதிலியின் ‘மருந்து’ அவன் உடம்பில் பாய்ந்தது.

மைதிலியும் நாகபூஷணமும் தங்கள் காதல் நாடகத்தை அதிக நாள் நடத்த கடவுள் அனுமதிக்கவில்லை. அவனுடைய பெற்றோர் அவனுக்குப் பெண்ணைத் தேடி விவாகத்தை நிச்சயித்திருந்தனர். அவன் ஹரிகேசவ நல்லூரிலிருக்கும் போது அவனுக்குக் கடித மூலம் விஷயம் தெரிவிக்கப்பட்டது. மைதிலி நாகபூஷணத்தைச் சாதாரணமாக நேசிக்கவில்லை. இருவரும் வெளியுலகை அடியோடு மறந்து சொப்பன உலகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தனர். கடிதம் கண்டதும் அவன் சப்த நாடிகளும் ஒடுங்கின. அவன் மனத்தில் புகை சூழ்ந்துகொண்டது. முதலில் அவனுக்குத் தன் தகப்பனார் மீது கோபம் கோபமாக வந்தது. ஆனால் நாகபூஷணம் தன் தகப்பனாரை நன்கறிந்தவன். இந்த விவாகத்தை மறுத்தால் அவன் வாழ்நாளே நரகக் குழியாகிவிடும். அதை அவன் அறிவான். அவர் பிடித்த முயலுக்கு மூன்றே கால்தான். ஆனால் — மைதிலி? அவள் எங்கே? நாகபூஷணம் மறுத்தால் அவள் கதி என்னாகும்? அவன் நிலைமை மிகவும் சிக்கலாகியது. உன்மத்தம் பிடித்தவன்போல் எதையோ யோசித்துக்கொண்டிருந்தான். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தான்.

அன்றிரவு எட்டு மணியிருக்கும். முதலில் ஒரு உருவம் வந்து இந்த நாவல் மரத்தடியில் நின்று பரக்கப் பரக்க விழித்துக்கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் மற்றொரு உருவமும் வந்தது. சந்திரன் மேகங்களுக்குள் புகுந்தான். நட்சத்திரங்கள் ‘மினுக் மினுக்’கென்று பிரகாசித்தன. ஊர் அடங்கி அரவமும் ஒடுங்கியது. குளிர்ந்த காற்று தென் பக்கமாக வீசியது. மைதிலியும் நாகபூஷணமும் சந்தித்தார்கள். மிகவும் சிரமப்பட்டு ஒருவாறாக அவன் தன் முடிவைத் தெரியப்படுத்தினான்.

“சரிதான்; உங்கள் இஷ்டம். நான் அதன் குறுக்கே ஏன் நிற்கவேண்டும்? உங்கள் அன்புமட்டுமிருந்தால்போதும்.” இவ் வார்த்தைகளை அவன் அவளிடமிருந்து எதிர்பார்க்கவேயில்லை. அவை வரம்பு கடந்த வெறுப்பிலிருந்து உதித்தன என்று அவனுக்கு எப்படித் தெரியும்? அவன் நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. மைதிலி அவ்விடத்தில் அதிக நேரம் நிற்கவில்லை. “நான் போய் வருகிறேன். நீங்கள் காலை வண்டிக்குத்தான் போகிறீர்களாக்கும்.” எனக் கூறிவிட்டு, அவன் பதிலை எதிர்பார்க்காமலே நடந்தாள். அவனுக்கு அவளைக் கூப்பிட்டு நிறுத்தப் போதுமான சக்தியில்லை. மைதிலி மையிருட்டில் மறைந்தாள்!

விடிவதற்குப் பத்து பன்னிரண்டு நாழிகைக்கு முன் ஹரிகேசவ நல்லூர் பெரிய வீட்டுப் பிள்ளையின் இரட்டைக் காளை வண்டி, ‘ஜல், ஜல்’ என்று ரயில்வே ஷ்டேஷனை நோக்கிச் சென்றது. காலை ரயில் நாலேகால் மணிக்கு வருகிறது. நாகபூஷணத்தின் மன மண்டலத்தில் பனிப் படலம் சூழ்ந்துகொண்டிருந்தது. வண்டிக்காரனிடம் வகை தொகையில்லாமல் பேச்சுக் கொடுத்தான். அவன் கண்முன் மைதிலி தோன்றி நகைத்தாள்; அந்தச் சிரிப்பு அவனுக்கு விஷம் போல் இருந்தது. வண்டி காட்டுப் பாதையில் சென்றுகொண்டிருந்த சமயம் பாழடைந்த காளிகோயிலில் படுத்திருந்த ஒரு மிருகம் வண்டி சப்தத்தைக் கேட்டு ராகமிழுத்தது. அது ஓயுமுன் நாகபூஷணம் ‘ஆ’ வென்று அலறினான். வண்டியிலிருந்து குதித்துக் கிராமத்தை நோக்கித் தலைவிரி கோலமாய் ஓடினான். வண்டிக்காரன் திடுக்கிட்டுப் போய், “சாமீ, சாமீ” என கூவிக்கொண்டே பின்னால் ஓடினான். இது அவன் காதில் விழவில்லை.

நாகன் கிராமத்தை யணுகியதும் வாய்க்கால் பக்கத்தில் ஒரே கும்பல் கூடியிருப்பதைக் கண்ணுற்றான். அவன் நெஞ்சு அப்படியே நின்றுபோய்விட்டது. ‘பல பல’ வென்று விடிந்துகொண்டிருந்தது.

அருணனின் இளங்கதிர்கள் அந்த நாவல் மரத்தின்மீது விழுந்தன. ஆ! அவன் கண்டது என்ன? ஐயோ! என்ன கோரம்! நாவல் மரக்கிளையில் ஒரு பெண் ணுருவம் ஊஞ்ச லாடிக்கொண்டிருந்தது! முறுக்கேற்றிய சேலையே அவளுக்கு நமனுக வாய்த்தது? ஆம், அது மைதிலி தான், சந்தேகமில்லை. நாகபூஷணமே அவளுக்கு விஷபூஷணமானுன்!

* * *

கிழவர் இந்தக் கட்டத்தைக் கூறிக் கொண்டு வரும்போது அவர் தொண்டை அடைத்துவிட்டது. முகத்தில் வேர்வைத் துளிகள் வடிந்தன. அவர் மீண்டும் கதையைத் தொடங்கினர்.

"அந்தக் கோரக் காட்சியைக் கண்ட கண்கள் இன்னும் இருக்கின்றன; அவை அவிந்து போகவில்லை." இதைச் சொல்லி விட்டு அவர் பெருமூச்சு விட்டார் எனக்குத் தோன்றிய சந்தேகத்தை ஊர்ஜிதப் படுத்த.

"ஆயின் அந்த நாகபூஷணம்—நீங்..." என மெதுவாகக் கேட்டேன்.

"ஆம்; அந்தப் பாவி நான்தான்." இதற்குமேல் அவரால் பேச முடியவில்லை. நான் அவரை மீண்டும் ஏதாகிலும் கேட்டால் அது வெந்த புண்ணில் கோலிடுவது போலல்லவா இருக்கும்? ஆனல் அவர் என் தலையில் ஆபத்து விழப்போகிறது என்று சொன்னரே, அதை அறிய ஆவல் கொண்டேன். கொஞ்ச நேரம் கழித்துக் கிழவரிடம் அதைப்பற்றிப் பிரஸ்தாபித் தேன்.

கிழவர் கூறினர்.

"அப்பா, அன்றுமுதல் மைதிலி இந்த நாவல் மரத்தில் பிசாசு ரூபத்தில் நடமாடுகிறளாம். இதை அநேகர் நேரில்கூடக் கண்டார்களாம். ஆனல் ஒன்றுமட்டும் நிச்சயம். இந்த மரத்தடியில் தங்கும் வாலிபர்களுக்குக் கலியாணம் நடக்காது. அது மைதிலியின் சாபம்."

கிழவர் என்னிடம் விடைபெற்றுக் கொண்டு நகர்ந்தார். நான் வாய்க்காலில் குளித்துவிட்டு விரைவாக வீட்டுக்குப் போனேன். போகும்போது என் மனதில் தோன்றிய எண்ணம் இது:

கிழவர் கூறிய கதை அவ்வளவு உண்மையாக இராது; கொஞ்சம் உண்மையிருக்கலாம். அதுவும் மைதிலி பிசாசு ரூபமாக நடமாடுகிறுள், இதை நம்பவே முடியாது. சாபமாவது? பலிக்கவாவது?

நான் வீட்டிற்குள் நுழைந்ததும் என் அம்மா, "என்னடா, எத்தனை நாழி? குளிக்கப் போனுயா? குடியிருக்கப் போனுயா? அதோ—கடுதாசு வந்திருக்கு. யார் எழுதியிருக்கா" என்றுள்.

நான் உலர்ந்த வேஷ்டி யுடுத்துக் கொண்டு கடிதத்தைப் பிரித்துப் பார்த்தேன். என் கைகள் நடுங்கின. அப்பா எழுதி யிருந்தார்......"பெண் வீட்டார் தற்சமயம் கலியாணம் நடத்த முடியாது என்று தீர்மானமாகக் கூறிவிட்டனர். என்ன செய்யலாம்? எதற்கும் கிரகம் வேண்டும்...வேறு இடம் பார்க்க உத்தேசம்..."

என் கண்கள் தாமே மூடின. நாவல் மரமும், அதில் மைதிலி தூக்கிட்டுக் கொண்ட காட்சியும் கனவாகத் தோன்றியது. கிழவரின் கதை உண்மைதானே என்று பயந்தேன்.

ஆனல், தெய்வா தீனம் என்றுதான் சொல்லவேண்டும், அடுத்த மாதம் எனக்கு விவாஹமாகி விட்டது.

---

# பேகம் மேஹறுன்னிஸா எம்.ஏ.

[எஸ். குஞ்சிதபாதம், ஆனைதாண்டவபுரம்]

"மஸ்தான்!"

"ஹுஜுர்!"

"ஜல்தி!"

"ஜோ, ஹுகும்!"

"ஜாஹிர் அலிகான் பார்-அட்லா, மேஜையின் எதிரே உட்கார்ந்து மூக்குக் கண்ணுடியைக் கழற்றி இடது கையில் வைத்துக்கொண்டு, மேஜையின் மறுபுறம் இருந்த அவரது மனைவி பேகம் மேஹறுன்னிஸாவை நோக்கினர்.

மஸ்தான் இரண்டு வெள்ளித் தட்டுக்களில் போஜனத்தைக் கொணர்ந்து வைத்தான்.

"என்ன யோசனை மேஹர்?"

"ஒன்றுமில்லையே!"

"ரொம்ப நைஸ் புலவ்!"

"மஸ்தான் நன்ருகச் சமைக்கிருன்."

மஸ்தானுக்கு இந்த நற்சாட்சிப் பத்திரம் மனத்தில் ஸந்தோஷத்தை உண்டு பண்ணியது.

"அவசியம் உங்களுக்கு வேண்டுமா?"

"அவசியம் இல்லாவிட்டால் கேட்பேனு மேஹர்? நியூயார்க் பஞ்சு மார்க்கெட்டில் இப்பொழுது ஒரு பெரிய மாறுதல் உண்டாகி யிருக்கிறது. இப்பொழுது பஞ்சு விலை ஒரேயடியாக ஏறிக்கொண்டே வருகிறது. வாங்குவதற்கு நல்ல சந்தர்ப்பம் இனிமேல் கிடைக்காது. சர்வ தேசிய யுத்தத்தினுல் இந்த ஏற்றம் எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது. ஐயாயிரம் ரூபாயாவது இந்தத் தடவை வராவிட்டால் இனிமேல் இந்த வியாபாரத்தையே விட்டுவிடுகிறேன்."

"எப்பொழுதும்தான் இப்படிச் சொல்கிறீர்கள். இதுவரையில் நாற்பதினுயிரம் ரூபாய் வெள்ளியிலும், பஞ்சிலும், இரும்புப் பங்குகளிலும் பறிகொடுத்துவிட்டீர்கள். இப்பொழுது இன்னும் உங்களுக்கு ஆசைவிடவில்லை."

"வெளியிலே போய் கடன் வாங்குவானேனென்று பார்க்கிறேன். நான் அதிகமாகக் கேட்கவில்லை. இரண்டாயிரம் கொடு போதும். இன்னும் ஒரு மாதத்தில் திரும்பவும் உன் பணத்தை வாங்கிக்கொள். ஏய் மஸ்தான்! கொஞ்சம் ஸூப் போடு. ஏது மஸ்தான் சமையலில் ரொம்பத் தேறிவிட்டானே!"

வேலைக்காரர்களை அவர்களுக் கெதிரில் புகழ்வதால் சங்கடம் ஏற்படுகிறது. "ஹுஜுர்! இரண்டு மாதமாகச் சம்பளம் வரவில்லை. பதினைந்து ரூபாய் சம்பளம் போதவில்லை. வீட்டிலே பீபி காயலாகக் கிடக்கிருள், மூன்று குழந்தைகள்..."

"பணம் வேணுமா மஸ்தான்! நல்லது, தருகிறேன் போ!"

இருவரும் கை கழுவிக்கொண்டு ஜாஹிர் அலிகானின் ஆபீஸ் அறைக்கு வந்தனர்.

"பணம் என்னிடம் இப்பொழுது எவ்வளவு இருக்கிறது? கையிலிருப்பதையும் பாங்கியில் கரண்ட் அக்கௌண்டி லிருப்பதையும் சேர்த்தால் ஆயிரம்கூட முழுசாகத் தேருது. லைப் இன்ஷ்யூரன்ஸ் பிரீமியம் வேறே கட்ட வேண்டும். அதற்கே இந்த மாதச் சம்பளம் வாங்கித்தான் ஆக வேண்டும். எப்படி நான் பணம் கொடுப்பேன்?"

"அதெல்லாம் ஒன்றும் சொல்லாதே. உன்னிடம் எவ்வளவு பணம் இருக்கிறது என்று எனக்கு நன்ருகத் தெரியும். மேஹர், மேஹர்! கொடுக்கமாட்டாயே! வேண்டாம்!"

"ஊம்!"

"என்ன யோசனை மேஹர்!"

"சரி! நான் தருவதைப் பற்றி, ஒன்றுமில்லை. பணம் கிடக்கிறது. போகட்டும்,

"உங்கள் மனம் நிம்மதி இல்லாமல் போகி றது நான் பணம் கொடுப்பதால்!"

"கவலைப்படாதே! இந்தத் தடவை... நான் சொல்லக்கூடாது, நீயாகப் பாரேன்!"

கடிகாரம் பத்து மணிகள் கணீர், கணீ ரென்று அடித்தது. சற்று நேரம் அந்த ஹால் நிசப்தத்தில் ஆழ்ந்திருந்தது.

"மேஹர் போலாமா? உனக்குக் காலேஜில் முதல் பீரியட் வேலை யில் லையே!"

"இல்லை! ஆனால் நான் முன்னாலேயே போகவேண்டும். சேர்ந்து போய்விடு வோம்!"

இருவரும் புறப்படத் தயாராயினர். பங்களாவின் முன்புறம் கார் நின்றுகொண் டிருந்தது. அவர்கள் ஏறி யமரக் கார் புறப் பட்டது.

மஸ்தான் தட்டுக்களை அலம்பி வைத்து விட்டு, மேஜைகளையும் துடைத்துவிட்டு ஒரு பீடியைக் கொளுத்திக்கொண்டு, ஒரு நாற்காலியின் மேல் உட்கார்ந்து குருட்டு யோசனை செய்த வண்ணம் சிரமபரிகாரம் செய்துகொண் டிருந்தான்.

"மஸ்தான்!"

ஒரு கிழக்குரல் கூப்பிட்டது.

"சைத்தான், வேறே வேலை என்ன?"

மறுபடியும் அந்தப் பலவீனமான நடுங் கும் குரல் அவனை அழைத்தது.

"செவிட்டுப் பிணம்! என்ன?".

கிழவி ஜுஹுரான் பேகம் கழியை ஊன்றிக்கொண்டு தள்ளாடித் தள்ளாடி வந்தாள். மஸ்தான் அவளுக்குச் சாப் பாடு போட்டான்.

ஜுஹுரான்பேகம், ஜாஹிர் அலிகானின் தாயார். ஜாஹிர் அலிகான் இருக்கும் இடத்திற்கு அவள் வரக்கூடாது. எவ் வளவோ நண்பர்களும், நவ நாகரிக மனி தர்களும் வரும்பொழுது இந்தக் கிழவி, செவிட்டுப் பிணம் அங்கே வந்து நின் றால் அவருக்கு எவ்வளவு அவமான மாக இருக்கும்? எஜமானே அலக்ஷிய மாக இருக்கும்போது வேலையாள் எதற் காக அவளை லக்ஷியம் செய்ய வேண்டும்? அவனுடைய களைப்பு அவனுக்குத் தெரி யும்; இந்தக் கிழவியின் உபத்திரவத்தைக் கூடவா அவன் பொறுக்கவேண்டும்! பசியோ, தாகமோ, கிழவி மூலையில் முடங்கிக்கொண்டு கிடந்து, எல்லோரும் போன பிறகு வந்து சாப்பிட்டுவிட்டு மறுபடியும் யதாஸ்தானத்திற்குப் போய் விடுவாள். மேஹருன்னிஸாவுக்குக் கிழ வியிடம் மிகுந்த பிரியம் உண்டு. அவள் தான் கிழவிக்கு ஆதரவு. கிழவி என்ன வோ அந்தக் காலத்தில் செட்டுக் கட் டாக இருந்து, கஷ்டப்பட்டு ஜாஹிர் அலி கானின் படிப்புக்குப் பணம் கொடுத்தாள். அந்தக் காலம்தான் ஓடிவிட்டதே! இப் பொழுது என்ன அதற்கு? கிழவி ஒன் றும் பேசாமல் பரலோகத்தி லிருந்து அழைப்பு வரும் நாளையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். "பிஸ்மில்லா ஹி" லாஇலாஹி ஸலல்லாஹு அலைஹிவஸ் ஸலம்!" என்று சர்வலோக சரண்யன், ஆபத்பாந்தவன், அனாதை ரக்ஷகனைத் தியானம் செய்வதைத் தவிரக் கிழவியால் வேறு என்ன செய்ய முடியும்?

* * *

மேஹருன்னிஸா நாகரிக முற்போக்கு அடைந்துள்ள கொஞ்சம் முஸ்லீம் நாரீ மணிகளில் ஒருத்தி. அவள் எம். ஏ. பாஸ் செய்த பிறகு ஒரு முஸ்லீம் பெண் கலாசாலையில் ஆசிரியையானாள். நகரத் தில் அவளுக்கு மிகுந்த கௌரவம் உண்டு. மஹிளா சங்கத்தில் அவள் அடிக்கடி பிரசங்கங்கள் செய்வது முண்டு.

ஜாஹிர் அலிகான் ஐ. ஸி. எஸ். பரீ க்ஷை பாஸ் செய்வதற்காக இங்கிலாந்துக் குச் சென்று அதில் வெற்றியடையாமல் போகவே பாரிஸ்டர் பரீக்ஷையில் தேறி வந்தார். வக்கீல் தொழிலில் நல்ல வரு மானம் வந்துகொண் டிருந்தது. ஆனால் பணம் தங்குவதே யில்லை. அவருக்கு எதிர் காலத்தைப் பற்றிச் சிந்தை இல்லை. குழந்தைகள் இருந்தால் சிந்தனை ஏற்பட் டிருக்கும். அவருக்கு அத்தகைய மக்கட் பேறு இல்லை.

ஆனால் ஆண்டவனுக்கு எப்பொழுதுமே யாரும் சௌக்கியமாக இருப்பதில் திருப்தி கிடையாது போலும்! ஜாஹிர் அலிகானின் மனத்தில் ஒரு எண்ணம் உதித்தது. அவருடைய நண்பர்களில் சிலர் ஐயாயிரம், பதினயிரத்தை வைத்துக்கொண்டு லக்ஷ ரூபாய்கள் பெறும் சாமான்களை வாங்கிப் புரட்டிக்கொண்டு நல்ல லாபம் சம்பாதிப்பது போலத் தோன்றியது. முதலில் அவர் ஒரு ஆயிரம் ரூபாயைக் கொண்டு கொஞ்சம் பஞ்சு வாங்கினர்; கொஞ்சம் வெள்ளி வாங்கினர். இந்த வியாபாரத்திற்கு "முன்னிலே வாணிபம்" (Forward Business) என்று பெயர். அதாவது இன்றைக்கு வாங்கிவிட்டு, இஷ்டப்படி எதிர்காலத்தில்விற்றுவிடுவதாகும். விலை ஏறுவதோ, இறங்குவதோ அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. இதற்காகப் பம்பாயிலும், இதர பெரிய நகரங்களிலும் பெரிய பெரிய ஷேட்டுக்கள் மூட்டை மூட்டையாகப் பணத்தைக் கட்டி வைத்துக்கொண்டு இந்த மாதிரி சுலபத்தில் பணம் சம்பாதிக்க ஆசைப்படுகிறவர்களிடம் நல்ல கமிஷன் வாங்கிக் கொண்டு, அவர்கள் இஷ்டப்படி வாங்கி விற்றுக்கொண் டிருக்கிறார்கள். இந்த வியாபாரத்தில் ஈடுபட விரும்புகிறவர்கள் மார்க்கெட்டின்ஏற்றத்தாழ்வுகளுக்கு ஒப்ப ஒரு குறிப்பிட்ட ஜாமீன் தொகை கட்டி வைக்கவேண்டும். ஏழை கோடீஸ்வரனுைம் ஆவான்; கோடீஸ்வரன் ஏழையானுலும் ஆவான். தராசின் ஒரு தட்டு மேலே ஏறினல், இன்னெரு தட்டு கீழே இறங்கித்தானே ஆகவேண்டும்?

இந்த வியாபாரத்தில் சாமான்களைக் கண்ணுலேயே பார்க்கவேண்டிய அவசியமில்லை. எப்படி வேதாந்திகள் பிரஹ்மம் ஸத்தியம் என்று சொல்லி, அதைப் பார்க்க மட்டும் முடியாமல் இருக்கிறார்களோ, அப்படி இந்த வியாபாரத்தி லிறங்கியவர்கள் சாமான்களை வாங்கி விற்பது நிச்சயம், ஆனல் நம் கண்களால் பார்க்க முடியாது என்று திடமான நம்பிக்கை உடையவர்கள்.

ஜாஹிர் அலிகானுக்கு முதலில் லாபம் வந்தது. உற்சாகம் ஏற்பட்டது. சூதாட்டத்தில் முதலில் நஷ்டம் வருவதே நலம்; அத்துடன் அது நின்றுவிடும். லாபம் வருவதுதான் அனர்த்தம்; அது ஆளை முழுவதும் இழுத்துக்கொண்டு விடும். ஜாஹிர் அலிகானுக்குப் பின்னல் ஏற்பட்ட நஷ்டம் முதலில் வந்த லாபத்தை யெல்லாம் அடித்துக்கொண்டு போயிற்று. நாற்பதினயிரம் ரூபாயை இது வரையில் இழந்தார். இருந்தாலும் அவருக்கு என்னவோ ஒன்று அந்தக் கரணத்தில் ரகஸ்யமாக வெற்றி உண்டாகும் என்று சொல்லிக்கொண்டிருந்தது.

* * *

மேஹருன்னிஸாவும், ஜாஹிர் அலிகானும் திரும்பி வந்தனர்.

"நாளைக்குத் தருகிறேன் பணம்"

"சரி ஆகட்டும்!"

"என்ன ஒருமாதிரி இருக்கிறீர்கள்"

"பஞ்சு விலை இறங்கிவிட்டது!"

"ஐயோ! நான் எவ்வளவு தடவைகள் சொல்லி யிருக்கிறேன் இதெல்லாம் ஒன்றும்வேண்டா மென்று. பணம் எவ்வளவு இருந்தாலும் திருப்தி ஏற்படப் போவதில்லை. போதுமே இந்தக் கண்காணு வியாபாரம்!"

"உம்! என்ன சொல்கிறுய்? இல்லை! எப்பொழுது நாம் அனுபாசமாகப் பணத்தை எதிர்பார்க்கிறேமோ, அப்பொழுது இழப்பதற்கும் தயாராகத்தான் இருக்கவேண்டும். இன்று மத்தியானம் எனக்குப் பம்பாயிலிருந்து புரோக்கரிடமிருந்து தந்தி வந்திருக்கிறது. குறைவுக்கு ஈடான பணம் கட்டியாகவேண்டும். இருந்தாலும் இந்த வருஷம் குஜராத்தில் பஞ்சம், விளைவு குறைவு. அமெரிக்காவிலும் நிலைமை திருப்திகரமாக இல்லை. சர்வதேச நிலைமையைக் கவனித்துப் பார்த்தால் எனக்குத்தைரியமாகவே இருக்கிறது. பஞ்சு விலை ஏறப் போகிறது. உனக்குத் தெரியவில்லையா மேஹர்! அவசரப் படக்கூடாது. பதட்டம் தான் காரியத்தைக் கெடுத்துவிடுகிறது."

"இதெல்லாம் மதிலமேற் பூனை வியாபாரம். அதிர்ஷ்டம் வானத்தில் பறக்கும் புறுவைப் போன்றது. எந்தக் கூரையின்மேல் உட்காருமென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது."

"அப்படிச் சொல்லாதே! நான் எவ்வளவு புள்ளி விவரங்கள் சேகரித்து வைத்திருக்கிறேன்? உலக ராஜீய, பொருளாதார விஷயங்களால் விலைகள் எப்படிப் பாதிக்கப்படுகின்றன என்பதை ஜாக்கிரதையாகக் கவனித்து வருகிறேன். அப்படி இருக்கும்போது நஷ்டத்தையே எதிர்பார்க்கவேண்டாம்."

"ஆமாம்! நஷ்டத்தையே எதிர்பார்க்காமல் இருப்பதனால்தான் அது எதிர் பாராத விதமாக வந்துவிடுகிறது. சமாதானம் செய்கிறீர்களே என்னை! என்னைச் சமாதானம் செய்தால் பஞ்சு விலை எறிவிடுமா என்ன? உங்கள் முகம் உங்கள் உள்ளத்தின் சஞ்சலத்தை நன்றுகப் பிரதி பலிக்கிறதே. பணம் கிடக்கிறது, தள்ளுங்கள்! இப்படி நீங்கள் வேதனைப்படுவது தான் பார்க்க சகிக்கவில்லை. மார்க்கெட்டை ஊன்றிப் பரிசிலனை செய்கிறேன் என்கிறீர்கள். எல்லோரும்தான் அப்படி மார்க்கெட் நிலவரத்தை Study பண்ணுகிறார்கள். ஒருவரும் கண்ணை மூடிக்கொண்டு பணத்தைத் தூக்கி எறிகிறார்கள் இல்லை. யோசனை நன்றுகத்தான் செய்கிறீர்கள்; ஆனால் நீங்கள் யோசனை செய்கிறபடி உலகம் மாறமுடியுமா? இது வரையில் நாற்பதினயிரம் ரூபாய்கள் போயிருக்கும். எப்படிப் போயிற்று?

"மேஹர்! இஷ்ட மிருந்தால் பணம் கொடு; இல்லாவிட்டால் வேண்டாம்"

"பணம் தருவதைப்பற்றி நான் ஒன்றும் சொல்ல வில்லை; தருகிறேன்" பாரிஸ்டர் எழுந்து சென்றார்; மேஹருன்னிஸாவும் சற்று நேரம் இளைப்பாறிவிட்டு மோட்டாரில் போய் எறினள்.

* * *

"சமூகத்தின் முன்னேற்றம் ஸ்திரீகளின் ஸ்வாதந்தர்யத்தையே தழுவியிருக்கிறது. ஸ்திரீகள் பராதீனமாக இருக்கும் வரையில், ஸ்திரீகள் அஞ்ஞான இருளில் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் வரையில், அவர்களது விசார சக்தி மலராத வரையில் சமூகம் முன்னேற்றத்தைக் காண முடியாது. ஏனெனில், ஸ்திரீகள் சமூகத்தின் ஒரு பாதி; அந்தப் பாதி இருளில் வாழக்கையைக் கழித்துக்கொண்டிருக்கவும், குழந்தைகளை அந்த இருளிலேயே போஷிக்கவும் விட்டால் எவ்வாறு சமூகம் மேன்மையுறக் கூடும்? ஸ்திரீகளின் துர்ப்பாக்கியத்தினல், ஸ்திரீசிசுரூஷயின் அவசியம் மூடப்பழக்க வழக்கங்களின் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கிறது. ஸ்திரீகள் ஸமாஜத்தின் அன்னைகள்; ஆனல் அவர்களில் பெரும்பான்மையோர் அஞ்ஞானத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். அஞ்ஞானத்தின் குழந்தைகள் பிரகாசத்தைக் காண முடியாது. இதன் உத்தேசம் ஸ்திரீகளுக்கு நிர்ப்பயமாக ஸேவை செய்யும் சக்தியை உண்டாக்குவதே. ஆகவே தேசமுன்னேற்றத்தில் கவனம் செலுத்தும் பெரியார்கள் ஸ்திரீகளின் முன்னேற்றத்திலே முதலில் ஊக்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். அங்கொரு பெண்ணும், இங்கொரு பெண்ணும் படித்திருப்பது மட்டும் போதாது. எல்லா ஸ்திரீகளுக்கும், முக்கியமாக கிராமங்களில் ஓயாது உழைத்து உழைத்துக் களைத்துப் போயிருக்கும், அடிமைகள் போலக் கருதப்படும் ஸ்திரீகளுக்கும், ஆத்ம விசுவாசத்தையும், தைரியத்தையும், வாழ்க்கையில் திருப்தியையும் உண்டு பண்ணவேண்டும். எவ்வளவு சகோதரிகள் புருஷர்களின் யந்திரங்களாக இருக்கிறார்கள்? நாம் எல்லோரும் அவர்கள்பால் கவனம் செலுத்தவேண்டும்." என்று மேஹருன்னிஸா மஹிளா சமாஜக் கூட்டத்தில் பேசினள். அவளுடைய பேச்சில் இனிமை, காம்பீர்யம், படிப்பின எல்லாம் இருந்தன. பெண்களின் மிருதுவான கரகோஷம் செவிக்கின்பமளித்தது. வந்தனோபசாரத்திற்குப் பின் கூட்டம் முடிந்தது.

மேஹருன்னிஸா திரும்பும் பொழுது அவளது மனம் முழுதும் ஆலோசனையால் நிரம்பியிருந்தது.

"ஆம், அழகாக நாம் பேசுகிறோம். நம்மைப்போல் வாக்குச்சாதுர்யம்படைத்த பல ஸ்திரீகளும் அப்படிச்செய்ய வேண்டும், இப்படிச் செய்யவேண்டும் என்று கூறிவிடுகிறார்கள். கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள மஹிளா சமாஜத்திற்குப் பணம் கொடுக்கிறோம். பணத்தை யெல்லாம் தேனீர் விருந்துகளிலும், குதூகலங்களிலும் செலவிட்டுவிடுகிறோம். இந்த ஐந்து வருஷங்களில் ஸ்திரீகளுக்காக இந்தச் சங்கம் என்ன செய்திருக்கிறது? டென்னிஸ் ஆடக் கற்றுக் கொண்டிருக்கிறோம். சங்கீதக் கச்சேரிகள் வைத்துக் கேட்டிருக்கிறோம். பெரிய பெரிய தலைவர்களைப் பிரசங்கம் செய்ய அழைத்திருக்கிறோம். அவர்களும் ஸ்திரீகளின் முன்னேற்றம் அப்படிச் செய்யப்படவேண்டும், இப்படிச் செய்யப்படவேண்டும் என்று சொல்லிவிட்டுப் போகிறார்கள். இதுவரையில் நாம் உண்மையாக என்ன செய்திருக்கிறோம்? இந்த ஐந்து வருஷங்களில் மஹிளா சமாஜம் செய்துள்ளவைகளைப் பிழிந்து எடுத்தால் ஸாரமான விஷயம் ஒன்று மிருக்காது."

மோட்டார், பங்களா காம்பௌண்டிற்குள் நுழைந்து கட்டிடத்தின் எதிரே நிற்கவும் பேகம் மேஹருன்னிஸா இறங்கி உள்ளே சென்றாள். இரவு எட்டு மணி இருக்கும்.

நமது துயரங்களை, ஏமாற்றத்தின் அதிர்ச்சிகளை நாம் இலேசில் மறுக்க முடிவதில்லை. எவ்வளவுக்கெவ்வளவு மறைக்க முயற்சிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அத் துயரங்கள் பெருகி விசுவரூபம் எடுத்து நம் மனத்துடன் போராடுகின்றன. பாரிஸ்டர் ஸாஹேப் மது பானத்தினால் துக்கத்தைமாற்ற முயன்றார். ஆம், ஸுகமயமான மயக்கத்தில் துயரமேது, துன்பமேது? ஆனால் பிரமை தெளிந்ததும் துக்க உணர்ச்சிகள் இருமடங்காகின்றன. கை கால்களில் வலி உண்டாகிறது. மானஸிக உபாதையுடன் சரீர உபாதையும் கலந்துகொள்கிறது.

மேஹருன்னிஸாவுக்கு அவர் இந்த விதம் துக்க சாந்தி செய்துகொள்வது வெகு நாட்களாகவே தெரியும். அவளும் இங்கிதமாக அவரை இத் துர்ப் பழக்கத்தை விடும்படி சொல்லிக்கொண்டிருந்தாள். ஆனால் அவர் என்ன குழந்தையா? குழந்தையின் கையிலிருக்கும் பக்ஷணத்தைப் பிடுங்கி யெறிந்து, "உடம்புக்கு ஆகாது" என்று சொல்லி முதுகில் பளிச், பளிச் என்று இரண்டு அறைகள் வைக்க? அன்று அவர் மிகவும் மேல் ஸ்தாயியிலேயே சஞ்சாரம் செய்து கொண்டிருந்தார்.

"ஆரம்பித்து விட்டீர்களா? வேண்டாம்; பொருள், மனம், வாழ்க்கை, எல்லாவற்றையும் பாழ்படுத்திக்கொள்ள வேண்டாம். உங்களுக்கு நன்றாக இருக்கிறதா இது? இஸ்லாமிய தர்மத்தை அனுசரிக்கும் உங்களுக்கு இது தகாது."

"சட், நான்ஸன்ஸ், போ!"

மேஹர் பொறுமையுடன் சகித்துக் கொண்டாள் இந்த வார்த்தைகளை.

"என்னைக்கூட நீங்கள் இப்படிப்பேசும் படி செய்கிறது, பார்த்தீர்களா? நான், எவ்வளவு தடவைகள் மன்றாடி, மன்றாடி.........."

"சே! சே! வாயை மூடிக்கொண்டு போ! என்றாவது சொன்னாயோ........ உம்........மேஹர்! இங்கே வழாதே, போழி, சீ!"

ஸ்வதந்திர மனோ விருத்தியை உடைய ஒரு ஸ்திரீயை இம்மாதிரி சொல்வதா? மேஹருன்னிஸாவின் உள்ளத்திலேயே பெரிய அனல் மூண்டது. சூறாவளிப் பெருங் காற்றினால் சமுத்திர அலைகள் கொந்தளித்து எழுந்து மோதுவதுபோல, உணர்ச்சி யலைகள் உன்மத்தமாக உத்வேகமாகக் குதித்துப் புரட்சி செய்ய ஆரம்பித்தன. சடேரெனத் தன்னறைக்குச் சென்று ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள். கோலினால் எக்கச் சக்கமான அடிபட்ட ஸர்ப்பத்தைப் போல பெருமூச்சிட்டாள். உடல் வியர்த்தது. எழுந்தாள்; பெட்டியில் உடைகளை எடுத்துவைத்தாள். கண்ணாடி பீரோ

கதவை அறைந்து பூட்டினாள். 'ஹோல்டால்' படுக்கை உறையில் மெத்தையையும், தலையணைகளையும் வைத்துச் சுற்றினாள். அதன் தோல்பட்டை இடம் விலகி விட்டுக் கொண்டது. அப்படியே அந்தப் படுக்கைச் சாமான்களைத் தூக்கி முழுபலத்துடனும் ஒரு மூலையில் எறிந்தாள். அம் மூலையிலிருந்த பெரிய பீங்கான் சிலையின் மேல் அது விழுந்தது. பீங்கான் பொம்மை கணீரென்ற ஓசையுடன் கீழே விழுந்து சிதறியது.

"தலாக் (Divorce) மண விலக்கு! உம்... ஏன் செய்துகொள்ளக் கூடாது? இம்மாதிரி அயோக்கியர்களுடன் வாழ்வதைவிடத் தனியே யிருக்கலாகாதா?"

என்னென்ன பயங்கரமான யோசனைகளை யெல்லாம் செய்தாள்? அவள் ஒரு விதமான முடிவுக்கும் வரவில்லை. தனக்கு அறிமுகமான ஸ்திரீகளின் குடும்ப நிலைகளையெல்லாம்பற்றி ஆலோசனை செய்தாள். அவள் மணவிலக்குச் செய்து கொண்டுவிடலாம், அது ஒன்றும் பெரிய காரியமில்லை. அதன் பிறகு ஜாஹிர் அலிகான் இருப்பதும், இல்லாததும் ஒன்றுதான். அவளுக்கு வாழ்க்கை முழுவதும் அவரை விட்டுப் பிரிந்துவிட முடியுமா?...அது எப்படி முடியும்? தன்னைச் சற்றுச் சிறுமைப் படுத்தியதற்காகவா இப்படிப்பட்ட பெரும் பிரிவு? ஆனால் அவர் சொன்ன வார்த்தைகள்தாம் எப்படி உயிரைப் பிய்த்துக்கொண்டு போகின்றன? ஒன்றும் தோன்றவில்லை. அவளுக்கு விடுதலையா, மறுபடியும் இதே பந்தமா என்று அவளால் நிச்சயிக்க முடியவில்லை. மற்றவர்களுக்கு உபதேசம் செய்யும் திறமையும், ஸ்திரீகள் முன்னேற்றத்திற்காக அவள் சமாஜத்தில் பேசும் சாதுர்யமும் இப்பொழுது எங்கே? சொந்த விஷயங்களில் பெரிய பெரிய அறிவாளிகளின் மனத்திலிருந்தும் சிந்தனா சக்தி எங்கோ சென்று ஒளிந்துகொண்டு விடுகிறது.

பொழுது புலரக் கூட இல்லை. எழுந்து டிரைவரைக்கூட எதிர்பார்க்காமல் தானே மோட்டாரை ஓட்டிக்கொண்டு சென்றாள். மேஹருன்னிஸா ஒரு குறுகலான தெருவை அடைந்தாள். ஒரு சிறு வீட்டின் எதிரே மோட்டாரை நிறுத்திவிட்டு இறங்கி வாயிற்படியை அடைந்தாள். கதவு சாத்தப்பட்டிருந்தது.

* * *

அது ஜனாப் அன்வர் ஹுஸேனின் வீடு. அன்வர்ஹுஸேன் கியாதி வாய்ந்த ஊழியர். அவர் அதிகமாக வாசித்ததில்லை. மெட்ரிகுலேஷன்கூடப் பாஸ் செய்யவில்லை. அவர் பொதுக் கூட்டங்களில் பேசும்போது எளிதாக விஷயங்களைப் பேசுவார். அவருடைய பேச்சு அழகாக இருக்காது. அணிகளும், உவமைகளும் கலந்து காவ்யமாகப் பேசத் தெரியாது. அவருக்குத் தான் ஹிந்துவா, முஸ்லீமா என்பது அவருக்கே தெரியாது. நமாஸ் செய்யும் வேலைகளைத் தவிர இதர வேலைகளில் அவ்வளவு ஒற்றுமையுடன் எல்லோருடனும் கலந்து பழகுவார். ஆலைத் தொழிலாளிகள் அவர் சொன்னபடி ஆடுவர். எந்த ஏழையும் ஏதேனும் துயர் இருந்தால் அவரிடம் ஓடி வருவான். அவரைக் கண்டுவிட்டால் நகரத்திலுள்ள முதலாளிகளுக்கு நடுக்கம் தான். நடுக்கம் என்றால் சாதாரண, அப்பை சப்பையான நடுக்கம் இல்லை; அன்வர் ஹுஸேனின் உருவத்தை நினைத்தாலேயே முதலாளிகளுக்குப் பிராணன் பாதி ஆவியாகிப் பறந்து போய் விடுவதுபோலிருக்கும். அவர் வேலை நிறுத்தம் என்று சொல்லிவிட்டால், வெட்டினால்கூட ஒரு தொழிலாளியும் அசைய மாட்டான். இவ்வளவுக்கும் அவரிடம் என்ன சக்தியிருந்தது? ஆளைப் பார்த்தால் ஒல்லியாகக் காய்ந்து வற்றிப்போன அவரைக்காய் போல இருப்பார்; புறங்கையால் தட்டினால் ஆசாமி தீர்ந்து போய்விடுவார் என்று தோன்றும். தலையில் ஒரு கதர்க் குல்லாய் போட்டுக்கொண்டிருப்பார்; ஒரு கதர்க் கோட்டு, பைஜாமா இந்தச் சாதாரண உடைகளுடன்தான் அவர் எப்பொழுதும் காணப்படுவார். இப்பேர்ப்பட்ட சாமான்ய மனிதருடைய உள்ளம் எப்படிப்பட்டது தெரியுமா? அது தேசபக்தி, ஸவதந்தரம், பொறுமை, ஏழைத்

தொழிலாளிகளிடம் மட்டில்லாத விசுவாசம் இவைகளை ஒன்ருகச் சேர்த்து உருக்கிக் கெட்டியாக அசையாமல், தகர்க்க முடியாமல் செய்யப்பட்டிருந்தது போலிருந்தது. ஜயிலுக்கும் வீட்டிற்கும் அவருக்கு வித்தியாசமே கிடையாது. சட்ட மறுப்பு இயக்கங்களின் பொழுதெல்லாம் போலீசாரின் புளியமிலாறுகளும், குண்டாந்தடிகளும் அவருடைய பலவீனமான சரீரத்திற்கு அதிகத் துன்பம் கொடுத்திருக்கலாம்; ஆனல் அவருடைய ஆத்மாவை அவைகள் என்ன செய்திருக்க முடியும்? இன்னும் உறுதியுடையதாகவே செய்தன. சத்திய நிஷ்டையே அவருடைய மேன்மைக்குக் காரணம்.

அவரிடம் மேஹர் பேகத்திற்குத் தேவதா விசுவாசம். தன்னுடைய ஹிருதய பாவத்தை அநுதாபத்துடன் கேட்டு ஆறுதல் அளிப்பவர் வேறு ஒருவரும் இல்லை என்பது அவளுடைய அபார நம்பிக்கை. அவள். எவ்வளவோ தடவைகளில் தன் அந்தரங்க ரகஸ்யங்களை யெல்லாம் அவரிடம் திறந்து காண்பித்திருக்கிருள். எக்காரியங்களிலும் அவருடைய ஆலோசனைகள் மிகுந்த பலன் அளிக்கும் என்பது அவளுக்கு அனுபவ சித்தாந்தம்.

கதவு சாத்தியிருந்தது. அவள் கதவைத் தட்டினுள். கதவு திறந்தது. ஒரு ஸ்திரீ கதவின் பின்புற மிருந்து வந்தாள். நழுவியிருந்த மஞ்சள் சேலையைத் தலையின் மேல் இழுத்துவிட்டுக்கொண்டு, 'வாருங்கள்!' என்ருள்.

உள்ளே ஒரு சிறிய விளக்குப் புகையடைந்து எரிந்துகொண்டிருந்தது. அன்வர் ஹுஸேன் ஒரு கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்திருந்தார். கீழே இரண்டு பாய்கள் கிடந்தன. ஒன்றில் ஒரு சிறுமி தூங்கிக்கொண்டிருந்தாள். சுவரில் ஒரு காந்தி படம் தொடங்கியது. கட்டிலின் அடியில் ஒரு காபூலிப் பூனை முடங்கிக் கொண்டு கிடந்தது.

"ஸலாம் அலேகும்!"

மேஹருன்னிஸா அவரைப பார்த்ததும் வந்தனம்புரிந்தாள். அவரும் பதிலுக்குவந்தனம்புரிந்தார். எழுந்துவரவேற்ருர். அன்வர் ஹுஸேனின் தர்ம பத்தினி வந்த கௌரவமான ஸ்திரீ எங்கே உட்காருவது என்று யோசித்தாள். ஒடிந்த சட்டமுள்ள ஒரு நாற்காலியைத் தூக்கமாட்டாமல் தூக்கிக்கொண்டு வந்தாள். தன்னுடைய தாரித்ரியத்தைப்பற்றி அவளுக்கு மிகுந்த லஜ்ஜை உண்டாயிற்று. அவள் வெட்கும் மனேபாவத்தை மேஹருன்னிஸா அறிந்து கொண்டாள். 'எனக்கென்னம்மா இந்த உபசாரம்?' என்று சொல்லிக் கொண்டே ஒரு பாயின்மேல் உட்கார்ந்து தூங்கும் சிறுமியின் தலைமயிரைக் கோதிச் சிர்படுத்தலானுள். அன்வர் ஹுஸேன் தரையில் உட்கார்ந்துகொண்டு, "கட்டிலின்மேல் உட்காரம்மா மேகர்!" என்ருர். "முடியவே முடியாது, இங்கேதான் உட்காருவேன். நீங்கள் அந்தஉன்னத பதவியிலிருங்கள்" என்று சிரிப்புடன் சொன்னுள். அன்வர் ஹுஸேன் தமது மனைவியைப் பார்த்தார். அவள் குறிப்பறிந்து கொண்டு 'சாவு'க்காகப் பால் வாங்கிவரச் சென்ருள்.

"என்ன இன்னும் பொழுது விடியக் கூட இல்லையே! அதற்குள் என்ன காரியம் மேகர்! சொல்லியனுப்பினல் நான் வரமாட்டேனு?"

"உங்களுக்கு நான் சொல்லி யனுப்பி வரவழைக்கும்படி நான் பெரிய மனுஷியாகி விட்டேனு, என்ன? நான் எதற்காக வந்திருக்கிறேன் இப்பொழுது தெரியுமா உங்களுக்கு?"

"உன்னுடைய கிருபையைத் தவிர வேறு என்ன இருக்கப்போகிறது, மேஹர்? என்ன விஷயம்? ஏதோ கலவரப் படுகிருய்? தெரிகிறது. சொல்லு."

"நான் என்ன சொல்லவிருக்கிறது? நான் சொன்னல் உபதேசம் செய்ய ஆரம்பித்துவிடுவீர்கள். அவ்வளவு தான். நேற்று ராத்திரி ரொம்ப விபரீதமாகிவிட்டது.

"என், ஜாஹிர் என்னவது சொன்ஞரா?

"சொல்லவேண்டியது இனிமேல் ஒன்றும் பாக்கி யில்லை. இன்னதுதான் வையலாம் என்ற எல்லையே யில்லாமல் பேசிவிட்டார். நேற்று ஏராளமாகக் குடித்திருந்தார். நான் ஆனவரையில் பொறுத்துவிட்டேன். பொறுமையும் ஒரு அளவுக்குத்தானே இருக்க முடியும்? நான் ஸ்திரமாக முடிவுக்கு வந்து விட்டேன்."

"முடிவுக்கா? உம்............மேஹர், நான் சொல்கிறேன் கேள்."

"அதெல்லாம் ஒன்றும் கேட்க முடியாது. தலாக் (மணவிலக்கு) தான் முடிவு.'

'என்ன மேஹர் இப்படி யெல்லாம் சொல்கிறாய்? உனக்குப் புத்திமதி சொல்ல எனக்குத் திறமையில்லை. நன்றாக இராது.'!

"ஏன்?"

"ஏனென்றால் நீ படித்தவள். பெரிய உத்தியோகத்தில் இருக்கிறாய். ஒரு சிறிய அற்ப விஷயத்திற்காக விபரீத காரியங்களைச் செய்யக் கூடாது.

"அப்படியானால் என்னை அடிமையாகக் கிடக்கச் சொல்கிறீர்கள். இல்லையா?"

"நான் அப்படிச் சொன்னேனே? எப்பொழுது சொன்னேன்?"

"நீங்கள் என்னதான் சொல்கிறீர்கள்?"

"கேட்கிறாயா, கவனமாகக் கேள், நான் நீதி உபதேசம் செய்யவில்லை. என் சாதாரண புத்திக்குப் படுவதையே சொல்கிறேன். என்ன?"

"சொல்லுங்கள், சொல்லுங்கள்!"

"மண விலக்கு என்பது ரொம்பவும் தீவிரமான முறை. வேறு வழி யில்லை. அப்படிச் செய்யாவிட்டால் கதியே யில்லை என்னும் நிலைமை ஏற்படும்போதுதான் செய்யப்பட வேண்டும். நீ இருக்கிறாய் மேஹர், உனக்கு படிப்பு, சுயேச்சை மனோபாவம், பணம் எல்லாம் இருக்கிறது. ஆகையால் மண விலக்குச் சுலபமாகத் தோன்றுகிறது. ஆனால் சமூகத்தில் எல்லா ஸ்திரீகளும் படிக்கவில்லை; அவர்களுக்கு சொந்தமாக சம்பாதிக்கும்திறமை யில்லை; உயர்ந்த லக்ஷியங்கள் தெரியாதவர்களாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் எவ்வளவு பேர்கள் புருஷர்களின் கொடுமைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்? அவர்களுக்கு மண விலக்குச் செய்துகொண்டு தனியே போக முடியவில்லை. என்ன, நான் சொல்வதில் தவறு இருந்தால் சொல்லு; ஒப்புக்கொள்கிறேன்."

"ஆமாம்! நீங்கள் சொல்வது வாஸ்தவம்."

"அப்படிப்பட்டவர்கள் என்ன செய்வது? வாய் திறக்க முடியாமல் இருக்கிறார்கள். அவர்கள், விவாக ரத்துச் செய்வது விவாகத்தின் உயர்ந்த நோக்கத்தை இழிவுபடுத்துவதாகும். விவாகம் கேவலம் சுயநலம் என்ற இழி நிலைக்குக் கொணரப்படுவதாகும். மணம் செய்துகொள்வது என்றால் ஸ்திரீ புருஷனுடைய நலத்துக்காகவும் புருஷ ஸ்திரீயின் நலத்துக்காகவும் பாடுபடுவதாகும். உண்மையான பிரேமை அதில்தான் இருக்கிறது. பரஸ்பரம் ஒருவருக் கொருவர் சேவை செய்யவேண்டும். அந்தச் சேவையில் தான் விவாகத்தின் மகோன்னதமான தத்துவம் அடங்கி யிருக்கிறது."

"ரொம்பவும் உன்னதமான ஆதர்சமாக விவாகத்தைப்பற்றித் தாங்கள் சொல்வதை நான் ஆதரிக்கிறேன். ஆனால் 'பரஸ்பரம்' என்று ஒரு வார்த்தை நடுவில் சொன்னீர்களே அதில்தானே இருக்கிறது எல்லாம். ஸ்திரீகளுக்குப் பொறுமை வேண்டும் என்றெல்லாம் சொல்கிறீர்கள். ஸ்திரீகள் உபதேசம் கேட்கப் பிறந்தவர்கள்; புருஷர்கள் உபதேசம் செய்யப் பிறந்தவர்கள். புருஷர்கள் ஸ்திரீகளை எது வேண்டுமானாலும் செய்யலாம். இப்படி இருக்கிறது நிலைமை. தாங்களும் இப்படித்தான் வாதிக்கிறீர்கள். அதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. அதை நான் ஆக்ஷேபிக்கிறேன்."

"நான் சொல்வதை நீ தப்பாக அர்த்தம் செய்துகொண்டுவிட்டாய் மேஹர்!"

"பின் என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?"

"நான் மண விலக்கு கூடாதென்கிறேன். ஏன் தெரியுமோ, அது ஸ்திரீக்

கும் புருஷனுக்கும் உள்ள இடைவெளியை இன்னும் ஆழமுள்ள தாக்குகிறது."

"பின், ஸ்திரீ ஸ்வதந்தர மில்லாமல் அவஸ்தைப் படவேண்டும்."

"அல்ல, அல்ல, விவாக ரத்து ஸ்வதந்தரத்தை அளிக்காது. அது கேவலம் சுயநலம்; பொறுப் பின்மை சுதந்தரமாகாது. பொறுப் பின்மைக்கும், சுதந்தரத்திற்கும் உள்ள தார தம்மியம் ஆகாயத்துக்கும், பாதாளத்துக்கும், உள்ள தாரதம்மியம் மாதிரி. கேள். நம் நாட்டு ஸ்திரீகள் தெய்விகத் தன்மை உள்ளவர்கள். தாய்மையிலும், அடக்கத்திலும், ஒழுக்கத்திலும் மேனாட்டு ஸ்திரீகளைவிட அநேக ஆயிரம் மடங்கு உயர்ந்தவர்கள்."

"சரி"

உன்னைப்போன்ற படித்த பெண்மணிகள் விவாக ரத்து முதலிய வியவகாரங்களில் இறங்கி ஸ்திரீ புருஷர்களுக்கிடையே அதிகப் பிளவை உண்டு பண்ணலாகாது. என்ன செய்யவேண்டும் தெரியுமோ, புருஷ முன்னேற்றத்தில் ஈடுபட வேண்டும். புருஷர்கள் தங்களது உத்ஸித மனோபாவங்களை விட்டுவிட்டு, உண்மையான பிரேமையுடன், அபிமானத்துடன், மரியாதையுடன் ஸ்திரீகளிடம் பழகும்படி செய்யுங்கள்."

மேஹருன்னிஸா அவருடைய முகத்தைப் பார்த்தாள். அவர் பேச்சு வியப்பளித்தது. ஆனால் அவர் சொல்வதில் ஒரு வித தவறும் இருப்பதாக அவளுக்குத் தெரியவில்லை. ஆமாம்! விவாக ரத்தினல் கணவனிடமிருந்து பிரிந்துவிடுதலை அடைந்துவிட்டதாக நினைப்பது, வாழ்க்கையைச் சிறையாக நினைப்பதுபோலாகும். மண வாழ்க்கையே சிறைதானா? எத்தனை பெண்கள் இம்மாதிரி கஷ்டப்படுகிறார்கள்? அவர்களுடைய க்ஷேமத்தைக் கருதி உண்மையாக சேவை செய்ய விரும்பினால் மேஹர் எல்லோரையும் விவாக ரத்துச் செய்துகொள்ளுமாறு தூண்டுவதா? சே! சே! இது எவ்வளவு அஸப்யமாக இருக்கும்? அவள் யோசனை செய்தாள். அன்வர் ஸாஹேபின் ஆலோசனை ஆழ்ந்த கருத்துள்ளதாக இருந்தது. சமூகம் சாந்தியும், வளர்ச்சியும் பெறவேண்டுமானால் முதலில் புருஷர்களை முன்னேற்றவேண்டும் என்று புலப்பட்டது அவளுக்கு.

"மேஹர்! உங்கள் மஹிளாசமாஜம் இருக்கிறதே அதில் சமூக ஸேவிகைகள் அதிகமாகச் சேரவேண்டும். சாமான்ய, மத்திம வகுப்பு ஸ்திரீகள் அதில் அங்கத்தினர்களாகவேண்டும். எளிய ஸ்திரீகள் தங்களது பொருளாதார நிலையை, பிறர் மீது சாராமல் தாங்களே சமாளித்துக் கொள்ளும் வண்ணம் தாங்களே பொருளீட்டும் வகையில் நல்ல சிறைகள் அளிக்க வேண்டும்."

"இதை யெல்லாம் பற்றி நாங்கள் பேசியிருக்கிறோம்."

"பேச்சு, பேச்சு, பேச்சு! உங்கள் பேச்சுக்கள் பத்திரிகைகளில் வெளிவர வேண்டும். புகழ் அடையவேண்டும் என்று பேசுகிறீர்கள். பேச்சில் சாமர்த்தியம் மட்டும் இருப்பது போதாது. புகழின் ஆசை உண்மை நோக்கத்தை மறைத்துவிடுகிறது. அந்தராத்மா விழித்தெழாத வரையில் அதன் பலன் கிடைக்காது. நீங்கள் புத்தி பூர்வகமாக உண்மையில் சேவையில் ஈடுபட்டால் வெற்றியடைய முடியும். உங்கள் நோக்கம் சுதந்தரம். பொருளாதார சுதந்தரம் மட்டும்போதும். ஸ்திரீ புருஷனுக்குப் பாரமாகச் இல்லாமல் அவனுக்கு உதவியளிப்பவளாகவும் இருக்க வேண்டும். இதற்குப் புருஷன் முன்னேற்றம் அடையவேண்டும். புருஷர்கள் ஸ்திரீகளின் முன்னேற்றம் என்று சொல்லிக்கொண் டிருக்கிறார்கள். நீங்கள் புருஷர்கள் வாஸ்தவத்திலேயே முன்னேறும்படி செய்யவேண்டும்."

அன்வர் ஹுஸேனின் மனைவி தேனீர் கொணர்ந்து கொடுத்தாள். மேஹர் "இன்னும் பல்கூட விளக்கவில்லையே" என்றாள். பிறகு அங்கேயே பல்லைத் துலக்கிவிட்டுத் தேனீர் பருகினாள். பிறகு கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தாள். கடைசியில் விடை பெற்றுக்கொண்டாள் மேஹர்.

"அதாப் அர்ஜ், மேஹர்! போய்விட்டு வா!"

உண்மையான மனோ விகாஸத்தினுல் சேவையின் ருசியை பேகம் மேஹருன்னிஸா அனுபவித்தாள். கம்பீர மனோ பாவத்துடன் திரும்பினுள்.

* * *

"மேஹர்! எல்லாம் போயிற்று. பஞ்சு விலை விழுந்துவிட்டது. இன்னும் இரண்டாயிரத்து எழுநூறு ரூபாய்கள் கட்டியாகவேண்டும்."

மேஹருன்னிஸா பேசவேயில்லை.

"என்ன மேஹர்! மூன்று தந்திகள் வந்துவிட்டன. நிலமை எக்கச்சக்கமாகிவிடும். புரோக்கர் லாட் கொடுத்துவிடுவான் போலிருக்கிறது.

மேஹருன்னிஸா மௌனம்சாதித்தாள்.

"என்ன செய்வதென்று தெரியவில்லை, மேஹர்!"

மேஹருன்னிஸா வாயையே திறக்கவில்லை.

"இப்பொழுது என்ன செய்யலாம்?"

"எதை வேண்டுமானுலும் செய்யுங்கள். நேற்றிரவுதான் என்னைக் கன்னுப்பின்னு வென்று திட்டினீர்களே. இப்பொழுது என்னைக் கேட்கிறீர்களே. எனக்கென்ன தெரியும்? புள்ளி விவரங்கள் சேகரித்து வைத்திருக்கிறீர்கள். சர்வ தேசிய, ராஜீய வியவகாரங்களில் உங்களுக்கு ஞானம் இருக்கிறது. என்னைக் கேட்டால் எனக்கென்ன தெரியும்?"

"இல்லை மேஹர்! என்னிடம் கோபித்துக்கொள்ளாதே! நான் உன்னை என்ன சொன்னேன்?"

"யோசனை செய்து ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்!"

"ஒன்றும் சொல்லவில்லையே! உன்னைச் சொல்வேனு டியர்?"

"டியரும் ஆச்சு, கோழி முட்டையும் ஆச்சு!"

"மூவாயிரம் ரூபாய் இப்பொழுது வேண்டும். புரோக்கர் நோட்டீஸ் அனுப்பிவிடுவான்."

"நேற்று இரண்டாயிரம் ரூபாய் கொடுத்துவிட்டேன். இனிமேல் என்னிடம் ஒரு ரூபாய்கூட இல்லை."

"கொடுக்காவிட்டால் சர்வ நாசம்."

"மோட்டாரை விற்றுவிடுங்கள். பங்களாவை அடமானம் வையுங்கள். எனக்குத் தெரியாது."

"அப்படிச் சொல்லாதே மேஹர்!"

"இனிமேல் விட்டுவிடுகிறீர்களா இந்த ஆசையை? நமக்கு அந்த வியாபாரங்கள் எதற்காக?"

"இனிமேல் விட்டுவிடுகிறேன்......... கையிலிருந்து சென்றவைகளைப் பிரித்துவிடலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. கெட்ட இடத்தில்தானே தேடவேண்டும்?"

"அப்படியானுல் கொடுக்கமாட்டேன்."

"கடைசித் தடவை உன்னைக் கேட்கிறேன். எல்லாவற்றையும் இன்றே கணக்குத் தீர்த்து முடித்துவிடுகிறன்."

"பணம் இழந்த துக்கத்தைச் சாந்தி செய்துகொள்ள ஒரு பானமும் அருந்தலாகாது."

"இல்லை!"

"பிரதிக்ஞை செய்யுங்கள்."

"அல்லாஹ்-த-ஆலாவின் மீது ஆணை."

* * *

மேஹருன்னிஸா புத்தகங்களைப் படித்துக்கொண்டிருந்தாள். ராஜாராம் மோஹன்ராய் முதல் இன்றுள்ள தலைவர்கள்வரை சமூக சீர்திருத்தத்திற்காக என்ன என்ன முறைகள் சொல்லியிருக்கிறுர்கள் என்பதையெல்லாம் ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தாள். மணி பதினென்றுயிற்று. ஜாஹிர் அலிகானுக்கு அன்று நீதி ஸ்தலத்தில் வேலையில்லை. அவர் வேறு எங்கேயோ சென்றுவிட்டு அப்பொழுதுதான் வந்தார்.

"ஏன் மேஹர்? இன்று கலாசாலைக்குப் போகவில்லை?"

"வேலையை ராஜிநாமா செய்துவிட்டேன்."

"எதற்காக? உம்!"

"மஹிளா சமாஜத்தின் காரியங்களில் ஈடுபட்டிருக்கிறேன்."

"மஹிளா சமாஜமா? அங்கு என்ன வேலை? ஒரு பொழுதுபோக்குச் சபைக்காக வேலையை விடுவானேன்?"

"அது பொழுதுபோக்குச் சபை இல்லை. இனிமேல், ஏழை எளிய ஸ்திரீகளுக்கும் புத்துயிரளிக்கும் கேந்திர ஸ்தானம். அன்வர் ஹுஸேன் ஸாஹேபும் அதில் ஈடுபட்டிருக்கிறார்."

ஓ! அன்வர் ஹுஸேனுமா, அப்படியா?"

"ஆமாம்!"

"சும்மா பத்திரிகைகளில் பேர் வருவதற்கும், புகழ்ச்சியடைவதற்கும்தான் அங்கே போகிறாய் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அதில் அப்படி என்ன செய்யப்போகிறாய் வேலையை ராஜிநாமா செய்துவிட்டு?"

"இது வரையில் நீங்கள் நினைத்தபடிதான் போய்க்கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுதுதான் உண்மையான, ஹிருதய பூர்வமான நோக்கம் உண்டாயிருக்கிறது. இதோ பாருங்கள், சமாஜத்தின் புதிய காரியக் கிரமங்களை எழுதி வைத்திருக்கிறேன். அச்சுக்கு அனுப்ப வேண்டும்."

ஜாஹிர் அலிகான் அக் காகிதங்களை எடுத்து வாசித்தார்.

"ஸ்திரீகளின் சுதந்திரம் அபிவிருத்தியடையவும், தங்களைத் தாங்களே சார்ந்திருக்கவும், இன்னும் என்ன வெல்லாமோ செய்யவேண்டுமென்று எழுதியிருக்கிறாயே! நீ அம்மாதிரி இல்லையே முதலில். நீ சம்பாதித்துச் சேமித்து வைத்திருப்பவர்களை நான் கேட்கும்பொழுதெல்லாம் கொடுக்கிறாய். நேற்றிரவு உன்னை நான் தவறுதலாகப் பேசிவிட்டதற்காக நீ கோபித்துக் கொண்டதாகவும் தெரியவில்லை. நான் உண்மையிலேயே பிறகு பச்சாத்தாபப்பட்டேன்.

"சுதந்திரம் என்றால் என்ன? அதை முதலில் நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள். என்னைப் போலப் படித்தவர்கள் சுதந்திரம் என்னும் பெயரால் புருஷர்களிடம் சண்டையிட்டுக்கொண்டு தனியாகப் போக நினைக்கிறார்கள். படிப்பும், லோகானுபவமும் இல்லாத ஸ்திரீகள் கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடையபொறுமை நமக்கு வருவதில்லை. அந்தப் பொறுமையை நாம் அடையவேண்டும். முதலில் அவர்களுக்கு நாம் பரந்த எண்ணங்களை உண்டுபண்ணவேண்டும். ஸ்வார்த்தமான துச்ச எண்ணங்களை யல்ல. உண்மையான சுதந்திரம் ஆத்மீகமானது. காதலுக்கும் காமத்திற்கும் எவ்வளவு வித்யாசமோ அவ்வளவு வித்யாசம் சுதந்திரத்திற்கும், பொறுப் பின்மைக்கும் உள்ளது. சுதந்தரமென்றால் புருஷனுடன் சண்டையும், மண விலக்குமல்ல. புருஷனுடைய அதிக்கிரமத்தால் அவனுடன் பிணிக்கப் பட்டிராமல், பிரேமையுடன் அவனுடன் இணைந்திருக்கவேண்டும்."

"மேஹர்! உன்னை நான் இதுவரையில் அறியவில்லை."

"இருங்கள், முடித்துவிடுகிறேன் ஸ்திரீகளும், புருஷர்களும் தனித் தனியே பிரிக்க முடியாதவர்கள். அவர்களில் ஒருவர் மற்றொருவருடைய அங்கம்; ஒருவரால் இன்னொருவர் பூர்த்தி யடைகிறார். புருஷர்களுடைய பார்வையில் தாழ்மையாகப் புலப்படும் ஸ்திரீகளை மேல் நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும். இது தான் எங்கள் ஆதர்சம், எங்கள் கொள்கை எங்கள் உத்தேசம்."

"என் கண்களை மலரச் செய்கிறாய், மேஹர், நீ! நான் கண்களிருந்தும் குருடன். இதுவரையில் உன்னைப் பார்த்தும் பாராமல் இருந்தேன் நான். இப்பொழுதுதான் உன்னை நான் பூரணமாக உணர்ந்து அறிந்துகொண்டேன்."

"ரொம்பப் புகழாதீர்கள், டியர்! புகழ்ச்சியால் கர்வம் உண்டாகிவிடப் போகிறது!"

—

# விஞ்ஞானத்தின் இலட்சியம்

[டி. பி. நவநீத கிருஷ்ணன் எம். ஏ. அண்ணாமலை நகர்]

இவ்வுலகைப் பற்றியும் இயற்கையைப் பற்றியும் அறியப்பட்ட விஷயங்களை வகைப்படுத்திக் கூறுவதே விஞ்ஞானத்தின் பணியாகும். ஆர்வமுள்ள சிலர் மனத்தைச் சில விஷயங்கள் கவர்கின்றன. அவற்றை அவர்கள் ஆராய்கின்றனர். தம் புலன்களுக் கெட்டிய வரை, அவற்றின் தன்மைகளை அறிகின்றனர். ஆதலின் நுண்ணிய கருத்துடன் உற்றுக்காண்பது, விஞ்ஞான மெனும் ஏணியின் முதற்படியாகும்.

ஆனால் விஷயங்களின் உண்மைத் தத்துவங்களை அறித லென்பது எளிதன்று. பொருள்களுக்கும் அவற்றின் தோற்றங்களுக்கும் வித்தியாசமுண்டு. விஞ்ஞானம் 'மெய்ப்பொருள் யாது?' எனும் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடாவிடினும் உண்மைக்கும் போலிக்கு முள்ள வேற்றுமையைக் காணவேண்டும்.

உண்மையான விஷயங்களை நன்கு அறிந்தபின், அவற்றை ஒழுங்காக வகுக்கவேண்டும். அவை யாவற்றிற்கும் பொதுவாயுள்ள அம்சங்களைக் காணவேண்டும். அவை எவ்வாறு நிகழ்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள முயலவேண்டும். தெளிவாயும், முழுமையிலும் அவற்றை விளக்கவேண்டும். பின் அவற்றைச் சூத்திர முறையில் வாய்பாடாக (Formula) க் கூறவேண்டும். இவ்வாறு இயற்கையின் நியதி, அல்லது 'விஞ்ஞான உண்மை' வெளிப்படுகின்றது.

இதனாலேயே, அரிஸ்டாடில் (Aristotle) "கலை (அல்லது) விஞ்ஞானம், பலர் அனுபவத்தா லறிந்த விஷயங்களை ஒரு பொதுவான முறையில் கூறுவதில் தொடங்குகின்றது" எனக் கூறியுள்ளார். ஆதலின் விஞ்ஞான முறை, புது விதிகளைக் கண்டுபிடிப்பதால் மட்டும் முன்னேற்ற மடையாது. புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்ட விஷயங்களை, முன்னரே அங்கீகரிக்கப்பட்ட விதிகளுக் குட்பட்டனவா எனக் கருதுவதால்தான் முன்னேற்ற மடையும். அவ்வாறு சில விஷயங்கள் புறம்பானவையாய்க் காணப்படின், அவற்றையும் அடக்கும் விதிகளைக் கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் முயலுகின்றனர். ஆதலின் சிதறிக்கிடக்கும் பல விஷயங்களையும் விளக்கும் பொதுவான இயற்கை விதிகளைக் காண்பதே, விஞ்ஞானத்தின் நோக்கமாகும். ஆதலின், விஞ்ஞானம் அனுபவத்தில் கண்டதைத் திண்ணமாகவும் எளிதாகவும் முழுமையிலும் விளக்கிக் காட்டும் வழியெனலாம். இவ்வாறு செய்தல் அறிவின் செயலாகும். எனின், விஞ்ஞானம் அனுபவ உண்மைகளையும், பரிசீலனையில் நிரூபிக்கக்கூடிய விஷயங்களையும் அறிவின் உதவியால் விளக்கிக் காட்டும் முறை யெனலாம்.

விஞ்ஞானம் குறித்த ஒரு பொருளைப் பற்றி மட்டும் கூறுவதன்று. இவ்வுலக நிகழ்ச்சிகள் யாவும் அதனுள்ளடங்கியவை. உடலையும் உள்ளத்தையும் பற்றி அது கூறும். மனிதரையும் இயற்கையையும் பற்றி அது கூறும். ஆதலின் அது விஷயத்தைப் பொறுத்த தன்று. அது ஒரு முறையாகும். பிறருக்கு எடுத்துக் கூற முடிந்ததும், பரிசீலனையால் நிரூபிக்கக் கூடியதும், அனுபவத்தில் கண்டதுமான யாவும் அது கொண்டது. விஞ்ஞான நூலில் ஒரு விஷயத்தைச் சேர்க்கு முன் அது தெளிந்த உண்மையா வென அதைச் சலித்துப் பார்க்கவேண்டும். விஞ்ஞான உண்மைகள் புதிதாய்த் தோன்றுபவையன்று. ஆராய்ச்சியின் பயனாய், அறிவால் வெளிப்படுபவை.

விஞ்ஞானத்தின் கடமை இயற்கை நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கூறுவதன்று. ஆனால் ஒரு வரையறைக்குள், நிகழ்ச்சிகள் எவ்வாறு ஏற்படுகின்றன என அது கூறும். அதாவது, அவை எக்காலங்

களில் எவ் வகையான பொருள்கள் சேரும் போது உண்டாகும் என அது விளக்கும். உதாரணமாக, கடல் பொங்குவதற்குக் காரணத்தைப் பூத நூல் கூறுவதில்லை. எக் காலங்களில் கடல் பொங்கும் என்ப தையே அது கூறும். ஆதலின் விஞ் ஞானம் வியாக்கியான மன்று. இயற் கைச் சம்பவங்களை நன்கு விவரிப்பதே அதன் கடமையாகும். ஆயினும், அநுப வத்தி லறிந்த உண்மைகளை அறிவுடன் பயன்படுத்த வேண்டுமாயின், அவற்றின் காரணங்களைப்பற்றிச் சிறிதேனு மறிதல் அவசியம். ஆனால், இங்கு 'காரணங்கள்' என்பவை முதற் காரணங்க ளன்று. ஒரு சம்பவத்திற்கு முன்னுள்ள துணைக் காரணங் களே யாகும்.

பேராசிரியர் பேர்க்ஸன் (Prof. Bergson) எடுத்துக் காட்டியபடி, விஞ்ஞான நூல்களில், 'காரணம்' எனும் சொல், மூன்று வேற்றுமையான தருணங்களில் பிரயோகிக்கப்படுகின்றது. தூண்டுவதா லும், விடுவிப்பதாலும், அவிழ்ப்பதாலும் காரணம் தோன்றுகின்றது. ஒரு பந்து மற்றொன்றுடன் மோதி, அதை அசையச் செய்கின்றது. இங்குக் காரணம், 'தூண்டு தல்'. தீப் பொறி வெடி மருந்தில் பட்டு, வெடி வெளிக் கிளம்புகின்றது. இங்கு, காரணம் 'விடுவித்தல்'. ஒலிப் பெட்டி (Gramaphone)-யி லுள்ள விசை (Spring) தளரும்போது இசைத் தட்டு சுழன்று சங்கீதம் வெளிப்படுகின்றது. இங்கு, காரணம், அவிழ்த்தல். இவற்றி லெல்லாம், முன்னதான, முதற் பந்து-தீப் பொறி-தளரும் விசை என்பவை காரண மெனவும் பின்னதான, அசைவு-வெடி சங்கீதம் என்பவை பலன் எனவும் கொள்ளலாம். முதற் கூறிய உதாரணத் தில் பலனின் அளவும் தரமும் காரணத் தின் அளவு-தரத்தைப்பற்றி நிற்கும். இரண்டாவதில் பலனின் அளவு தரங்க ளுக்கும் காரணத்தின் அளவு தரங்களுக் கும் எவ் வகையான தொடர்புமில்லை. மூன்றாவதில், பலனின் அளவு காரணத் தின் அளவைப்பற்றி நிற்கும். அதாவது விசை தளரும் வரைதான் சங்கீதம் கேட் கும், பலனின் தரம் காரணத்தைப்பற்றி நிற்ப தன்று. விசை தளரும் தரமும் சங்கீதத்தின் தரமும் வேறானவை.

ஆதலின் முதலில் கூறியதில் மட்டுந் தான் காரணம் பலனை முற்றும் விளக்கு கின்றது. மற்றவற்றில் பலன் உண் டாவதற்கு முன்னுள்ளவை சாதனங் களேயன்றிக் காரணங்க ளன்று. முதற்கூறியதில் காரணம் இயங்கும் போது காரணத்திலேயே பலனுமிருந் தது, எனக் கூறலாம். ஏனெனில், முதற் பந்தின் சலனத்தை இரண்டாவது பெற் றது. ஆதலின் காரண முழுதும் இங்கு விளக்கப்பட்டது. இரண்டாவது கூறிய தில், காரணத்தால் பலன் வெளிப்படுகின் றது. ஆனால், அதை விளக்கவில்லை. மூன் றாவதாகக் கூறியதில் காரணத்திற்கும் பலனுக்குமுள்ள சம்பந்தம் ஒருவகை யாகப் புலப்படினும் முற்றிலும் அறியப் படவில்லை. ஆதலின், விஞ்ஞானம், கார ணத்தால் 'பலன்' ஏற்படுகின்றது என்ற கருத்தைக் கொண்டதன்று. ஒரு நிகழ்ச் சிக்குப்பின் மற்றொரு நிகழ்ச்சி ஏற்படு கின்றது என்னும் கருத்தை யுடையது. விஞ்ஞான தத்துவ நிபுணரான ஏ. இ. டெயிலர் (A. E. Taylor) கூறுவ தாவது :

"இக் காலத்தில், விஞ்ஞானத்தில் 'கார ணம்' என்பது, ஒரு குறித்த சம்பவம் நேரு முன் இருக்கவேண்டிய நிலைமைகளை ஒன்று சேர்த்துக் கூறுவது என விளக்கப் படுகின்றது. இந் நிலைமையினின்று சற்றுத் தவறினும் சம்பவம் ஏற்படாது. ஆத லின், விஞ்ஞான நூலில், ஒரு குறிப் பிட்ட நிலைமையி லேற்படும் சம்பவங்களின் தொடர்ச்சிகள், சில காரணங்களால் உண் டானவை எனக் கூறப்படுகின்றது."

பிரபல பூதசாத்திரர்களான கிர் சாப் (Oirchoff), மாக் (Mach), ஆஸ்ட்வால்ட் (Kstwald) என்பாரும் இவ்வாறே, சம்பவ நிகழ்ச்சித் தொடர்பை, சில எளிதானதும் பொதுவானதுமான சூத்திரங்களால் விவ ரித்தலே விஞ்ஞானத்தின், முக்கியமாக பூத நூலின் உயரிய நோக்கம் என்னும் கருத்தை வெளியிட்டுள்ளனர். ஆதலின்

சம்பவங்கள் என் நிகழ்கின்றன எனக் கூறுதல் விஞ்ஞானத்தின் கடமையன்று. அவை எவ்வாறு, எவ்வெப்பொழுது நிகழ்கின்றன வென எடுத்துரைத்தலே, விஞ்ஞானத்தின் பணியாகும்.

தற்கால விஞ்ஞான நிபுணர்கள் விஞ்ஞான தத்துவங்கள் யாவற்றையும் மூன்று மூலப் பொருள்களால் விளக்கிவிடலாம் எனக் கூறுகின்றனர். அவை யாவன : (1) மின்னணுக்கள் (Electrons) அல்லது மின்சாரத்தின் எதிர் அளவைகள், (2) பரமின்னணு (Proton) அல்லது மின்சாரத்தின் நேர் அளவைகள் (3) காந்த — மின்சார இயக்கங்கள் (Electromagnetic Induction). ஆனல் இவ்வாறு நாமறிந்த யாவற்றையும் சில அடிப் படையான முறைகளில்தான் கூற வேண்டும் எனும் எண்ணம், விஞ்ஞானிகள் தம் மனத்தில் முற்றும் குடிகொள்ளும்படி விட்டுவிடலாகாது;

எவ்வகையான விஞ்ஞான அறிவும் அளவையினின்றே ஆரம்பமாகின்றது எனக் கூறலாம். ஆனல் விஞ்ஞானப் பகுதிகள் யாவற்றிலும், குற்றமற்ற திண்ணமான அளவைகள் கிடைக்காது. ஆதலின் அவற்றை விஞ்ஞானமன்று எனத் தள்ளிவிட முடியாது.

கடைசியாக விஞ்ஞானத்தின் நோக்கம் தற்போது காணப்படும் பொருள்களை மட்டும் வகுத்தலால் நிறைவேறுவதில்லை. சரித்திர அல்லது பரிணும நோக்கமும் நிறைவேறவேண்டும், எவ் வகையான அறிவுக் கலையிலும், நாம் எப்பொழுதும் கேட்கும் வினு "இப்பொழுதுள்ள நிலைமை எவ்வாறு ஏற்பட்டது?" என்பதேயாம். சூரியமண்டலம் முற்காலத்தில், ஓர் படலத்தினின்று (Nebula) உண்டாயிற்று என வான நூல் நிபுணர் கூறுகின்றனர். இப்பொழுது நாம் நடந்து செல்லும் இத் திடமான நிலம், ஒரு காலத்தில் ஓடும் நெருப்புத் திரளாகவிருந்தது என்பதே அவர் கூறுவது. ஆனல், சிலர், கதிரியம் (Radium), யூரேனியம் (Uranium), மாறுதல்கள் அடைவதுபோல, ஒரு பொருள் மற்றென்ருய்ப் பரிணமித்ததால், இவ்வுலகமேற்பட்டது எனக் குறிப்பிடுகின்றனர். ஒவ்வொரு கல்லிலும் ஒரு சொற்பொழிவும் வரலாறும் அடங்கியுள்ளன. இன்னும் உறுப்புகளி னமைப்புகளைக் கருதும் போது, பரிணும முறையை முற்றும் காண்கின்றோம். ஓரினம் மற்றொரு இனமாகப் படிப்படியாக மாறுகின்றது. இவை எவ்வாறு மாறுகின்றன வென்பதை நாம் முற்று மறியோம். இவ்வகையான மாறுதலை, மொழி - இலக்கியத்திலும், கலைகள் ஆசாரங்களிலும்கூடக் காணலாம். இவ்வாறு, மக்களுக்கும் இயற்கைக்குமுள்ள சம்பந்தங்களை ஆரம்பத்திலிருந்து அறிவதனல்தான் விஞ்ஞானம் முற்றும்.

—

மாதர் வியக்கின்றனர் —
ஆடவர் மதிக்கின்றனர்

கேஸ்ரின்
கேஸத்திற்கு வளர்ச்சியைத் தரும்.
விக்டோரியா டிப்போ, மைலாப்பூர். சென்னை

# வட வீழம்

[அ. வி. மயில் வாகனம்]

தென்றமிழ் நாட்டு நண்பர் பலர் நம்மீழ நாட்டைப்பற்றிக் கேள்வியுற்றிருப்பா ரெனினும் அது பூகோளத்தில் எப்பாகத் திலுள்ள தென்று அறிதற்கு அதிக சிரத்தையு மெடுத்திரார். ஆனுல் கம்ப ராமாயணக் கதை யறிந்த எவரும் இலங் கையின் பெருமைகளைப் பற்றிச் சிறிதள வேனும் அறிந்து உணர்ந்திருப்பார். அன்றியும் அது இந்தியாவிற்கு மிக அண்மையி லுண்டென்றும் அவர் யூகித் திருப்பார். ஆஞ்சனேயர் இலங்கைக்கு இலகுவில் தாண்டிச் சென்றது இது அண்மையி லுள்ளதென்பதற்கு இன் ெனாரு நியாயமாகும்.

இவ் விலங்கையே ஈழமெனப் படுவது. இஃது இன்று தமிழில் ஈழமென்றும் சிங்களத்தில் லங்காவென்றும் வழங்குகின் றது. இவ் விலங்காவென்னும் பெயரிற்குப் பிறிதோர் கருத்துமுண்டு. அது கிளை, அல்லது பாகம், என்பதே. இக் கருத்தை எங்கள் தீவிற்குரிய பெயருக்குச் சூட்டி னல் அது முற்காலத்தில் இந்தியாவுடன் தொடர்புபட் டிருந்த தென்பதும் ஒரு கடல்கோளின் காரணத்தால் பிரி வடைந்து தனி நிலை பெற்ற தென்பதும் இந்தியா தாய் மரமாயின் இது அதன் ஒரு கிளையெனக் கொள்ளல்கூடும் என்ப தும் தெற்றெனத் தோன்றும்.

தற்போது இலங்கைக்குக் கப்பலேறிக் கடல் கடந்தே செல்லவேண்டு மெனினும் சில ஆண்டுகளுக்கு முன் மனிதர் முழங் தாள் மட்டத் தண்ணீரில் கால் நடையாக வுஞ் சென்ருர்களெனப் பெரியோர் வாய்க் கேட்டுள்ளேன். அக் காலம் இத் தாய்நாட் டிற்கும் அச் சேய் நாட்டிற்குமிடையில் நெருங்கிய தொடர்பிருந்தது. தென்னந்த மாகிய குமரி முனையில் நின்று சற்றே குதிகாலை உயர்த்திக் கிழக்கு முகமாக எட்டிப் பார்த்துவிட்டால் போதும். அடி வானத்திடை ஈழந் தோன்றும். இவ் வீழத்தின் வட பாகத்தைப் பற்றியே நாம் இங்குக் கவனிப்போம்.

ஈழ நாட்டின் சரித்திரத்தை எழுது பவர்கள் யாவரும் யாழ்ப்பாணத்தைப் பற்றிக் கூறும்போது அது யாழ்ப்பாடி என்பானுக்கு முன் ஒரு மணற்றிடலா கவே யிருந்த தென்று ஏகமனதாய் முடிக் கப் பார்க்கிருர்கள். பின்னர் அப் பெயர் பெற்றதும் யாழ்ப்பாடியாலேயே என்றும் கூறிவிடுகிருர்கள். இது முற்றும் பொருத்த முடையதன்று. 'யாழ்ப்பாணம்' என்னும் பெயர் பெறுமுன் அது 'மணற்றி டல்' என்று வழங்கிற்றன்று. ஆதியில் இலங்கை முழுவதும் 'ஈழம்' என வழங் கிற்ருதலின் யாழ்ப்பாணம் 'வடவீழமென வழங்கிற்றென்றல் சாலுமன்ருே. அன்றி யும் 'லங்கா' என்னுஞ்சொல் இலக்கியத்தில் பயின்று வாலாயது கி. பி. 4-ஆம் நூற் ருண்டின் பின்பே. அது வால்மீகி இராமா யணத்திலும் (கி. பி. 300, வரையில்) மகா வம்சத்திலும் (கி. பி. 500) வரையில்) முதன்முதல் காணப்படுகின்றது. (யாழ்ப் பாடியின் கதையும் யாழ்ப்பாணம் என் னும் பெயர் தோன்றிய பின்பே எழுந்த தென்பது வெளிப்படை.)

இக் காலத்திற்ருனே எழுந்த மணி மேகலையும் சோழத்திற்கு 300 கல் தொலைவிலுள்ள 'மணி பல்லவம்' என் னுந் தீவைக் குறிக்கின்றது. பூமி சாஸ் திர முறைப்படி ஆராயின் இந்து சமுத் திரத்தில் இலங்கையைவிட்ட வேறு பெருந் தீவு எதுவும் 300 கல் தொலை வில் இருப்பதாக அறியோம். ஆதலின் இதுவோ அம்மணி பல்லவம் எனவும் ஐயுற விடமுண்டு. அன்றியும் பழைய இலக்கிய ஆராய்ச்சியாளர் இலங்கையே அம் மணிபல்லவம் என்றும் கொண்டிருப் பது இங்கு நோக்கவேண்டுவது. இன்

னும், இலங்கையானது இயற்கை வனப்பாலும் செயற்கை யழகாலும் இரத்தின மீட்டத்தாலும் ஈசனருள் பெற்று இலங்குவதாதலின் இப் பெயர் பெறுதற்குத் தகுதியுடைய தென்பதும் ஓர் உண்மை.

ஆயினும் இப் பெயர் வேறு நூல்களிலும் அதிகம் வழங்காதிருப்ப 'ஈழம்' என்பதே இன்றும் தொடர்ந்து வழங்கி வருகின்றது. மிகப் பழைய சங்க நூல்களுளொன்றாகிய பட்டினப் பாலையில் "ஈழத் துணவும் காழகத் தாக்கமும்" என்று காண்கின்றது. இக் காலத்திற்றானே (கி. பி. 100 வரையில்) மதுரை ஈழத்துப் பூதன்றேவனார் தங்கலைச்செல்வத்தைக்கொண்டு ஈழம்விட்டு, மதுராபுரி வந்து பாக்கள் பல யாத்துக் கடைச் சங்கத்தில் அரங்கேற்றிக் கலைமாதை மகிழ்வித்தார். இங்கு நாம் 'ஈழம்' என்ற சொல்லின் தொன்மையை மாத்திரம் நோக்குவதன்றி அந் நாடு இத் தாய் நாட்டிற்குப் பொருட் செல்வமும் கலைச் செல்வமும் ஒருங்கே வாரியிறைத்த வள்ளன்மையையும் நோக்கவேண்டும். ஆதலின், அத்தனை பழைய காலத்திற்றானே தமிழ் ஈழத்தில் தாண்டவமாடிற் றென்க.

ஆனால் தமிழ் மாத்திரம் பேச்சு வழக்கி லிருந்ததென்று நாம் திடமாகக் கூறவில்லை. சிங்களமும் தென்னீழத்தில் பயின்றிருக்கலாம். நூல்களும் அப்படியே கூறுகின்றன. சிங்களம் தென்பாகத்தில் பயின்று வந்ததாயின் வடபாலாவது தமிழ் பயின்று வந்ததென்னல் போதரும். தமிழவரசர் தாமே, கி. மு. 100 வரையில் அனுராதபுரத்திலிருந்து ஆண்டாராதலால் சிற் சில காலங்களில் மத்திய வீழத்திலும் தமிழ் வழங்கிய தென்னலாகும். அண்மையில் யாழ்ப்பாணத்து வல்லிபுரக் கோயில் மணலில் கண்டெடுத்த பொற்றகட்டுச் சாசன மொன்றில் வடவீழத்தை வசப மன்னனாண்டதாகக் கூறப்பட்டுள்ளது. இது ஏறக்குறைய கி. பி. 350 வரையிலிருக்கும். ஆதலால் சிற்சில காலங்களில் சிங்கள ரரசாட்சியும் வடவீழத்தை எட்டியது என்ன இடமுண்டு.

இனி. கி. பி. 1000 வரையிலிருந்த இராசராசன் காலத்துச்சிலாசாசனங்களில் "எண்டிசை புகழ்தர ஈழ மண்டலமும்" என்று காணப்படுவது இப் பெயர் தொடர்ந்து வழங்கி வந்தமையை நிலைநாட்டும். பின்பும் 12-ம் நூற்றாண்டினதாகிய கலிங்கத்துப் பரணியிலும் இப் பெயர் தோன்றுகின்றது. ஆனால் இதனுடன் 'சிங்களரும், சிங்களமும்,' இந் நூல் வழங்கலாயின பின்பு 17-ம் நூற்றாண்டினதாகிய முக்கூடற் பள்ளில் "மலையாள மின்னல், ஈழ மின்னல் சூழ மின்னுவது" என்னும் வரியில் ஈழம் தோன்றுகிறது. (திருநெல்வேலியில் ஈழத்தர்' என்று வழங்கும் சாதியார் வடவீழத்திலிருந்தே அங்குச் சென்றனர் போலும்.)

இது காறும் தமிழினையே பயின்று வந்த வடவீழத்திற்கு 1617 ஆம் ஆண்டில் ஒரு பேரிடி நேர்ந்தது. இவ்வாண்டிலேயே போத்துக்கேயர் நம்நாட்டைக் கைப்பற்றினர். அப்பொழுது அவர்கள் தம் மொழியையும் மதத்தையும் வலிந்து தம் மூதாதையரை மேற்கொள்ளும்படி கட்டளையிட்டனர். தமிழுஞ் சைவமும் தளர்ந்தன. அன்றியும் அவர் நாட்டு மக்களுக் கிடையே பிரிவினை யேற்படவுஞ் செய்துவிட்டனர். இதனால் ஈழத்தின் பழங்கேண்மை சிறிதளவு பங்கமடைந்தது.

ஒற்றுமை யிழந்து அரசனையு மிழந்து அல்லோலகல்லோலப் பட்டிருந்த நாட்டில் பின்னும் போர் தொடங்கிற்று. ஒல்லாந்தர் 1658 ஆம் ஆண்டு போத்துக்கேயரைத் தோற்கடித்து வெற்றி மாலை சூடித் தாமே ஆளத் தொடங்கினர். இவர்களுடைய ஆளுகையில் நடந்த மதமாற்ற முறைகளைப்பற்றிப் போல் டேசு துரையவர்கள் இற்றைக்கு 250 வருடங்களுக்கு முன் எழுதிய நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ் வாட்சியைப் பற்றியும் நாம் வியப்பதற்கில்லை. இதன்பின் 1796'ல்

ஆங்கிலேயர் யாழ்ப்பாணத்தைக் கைப் பற்றி ஆளத்தொடங்கினர்—ஆளுகின்றனர். இது வடவீழ அரசியன் னிலையின் வரன் முறையாகும்.

இனி, மேற் கூறிய முறையில் காலக் கடலைத் தாண்டிவந்த நம் முறைவிடமாகிய வட வீழத்தின் சிறு குழந்தைகளியற்றிய பெருந் தமிழ்த் தொண்டினைக் கூறுவாம். அரசரா யிருந்தோருள் பரராசசேகரன், செகராச சேகரன், அரச கேசரி என் போர் தமிழ்த் தொண்டியற்றிய வட வீழ மன்னராவர். இவர்களுள் முதலிருவரும் 15-ஆம் நூற்றாண்டின் முற்கூற்றி லிருந்த னர். மற்றையவர் இவர்களுக்குப்பின் ஒரு நூற்றாண்டின் பிறகு வாழ்ந்தார்; இம் மூவரில் இவரே சிறந்தவராவர்; இரகு வம்ச மென்னும் வடமொழி நூலை இனிய விருத்தப்பாவிற் பாடித் தந்துள்ளார். இவர்களுக்குப் பின் தோன்றிய புலவர் கள் பலர். அவர்களைப் பற்றிக் கூறும் சிறந்த நூல்கள் வெளிவந்துள்ளது. ஆண்டும் காண்க.

ஆயினும் தமிழ்நாட்டில் ஒரு சிறந்த இடம் ஈழத்திற்கும் உண்டு என்பதை உலகறியக் காட்டியவர் எங்கள் நாவல ரையா ஒருவரே. அவரைப்பற்றி இங்குக் கூறுதல் மிகையாகாது. சைவ சித்தாந் தப் பழமாகத் திரண்டு தோற்றமளித்த இவர் சைவத்திற்கும் தமிழிற்கும் செய்த தொண்டுகள் ஒன்று இரண்டல்ல. இவரு டைய வசன நடையே இன்றுவரையும் முதலிடத்தில் வைத்துப் பாராட்டப்படு கின்றது. இவர் பதிப்பித்த நூல்களிற் பிழைகள் காண்டலரிது. இதற்குக் கார ணம் இவர் சிறுபிள்ளைகளைக்கொண்டு அச்சுப் பிரதிகளைத் திருத்தமாக வாசிப் பித்துப் பிழைகளைத் திருத்திக்கொள்ளு வதே. அதிகம் படித்தவர் வாசிப்பாராயின் அவர் கருத்துப் பிழையிற் செல்லாது. பொருளில் ஆழ்ந்துவிடக் கூடும் என்பது நாவலரையாவின் கொள்கை. அதன் உண்மையை நாம் இன்றுங் காண்கின்றோ மன்றோ?

வட வீழத்தின் தற்போதைய நிலை யைச் சற்று ஆராய்வாம். இந் நாடு தன் தொன்மை மறவாது அதனைப் பின்பற்றி, இன்னும் மென்மேலும் துலக்கிக் கொண்டே வருகின்றது. “தனித்தமிழ்ப் புலவர் சொல்லெடுக்கும் யாழ் நகரம்” என்று அண்மையில் ஓர் ஈழத்துப் புலவர் பாடியது மிகப் பொருத்தமுடைத்து. நம் நாட்டவர் விடா முயற்சி யுடையவர். எத் துறையிலும் முற்றப்போகிய சுத்த வீரரை யுடையது நம் நாடு. புலவர்கள் புகழ்ந்து போற்றும் இயற்கை வனப் பெல்லாம் நன்கு வாய்க்கப் பெற்றது. நாவாயோட்டு முதுகுடியினரும் பருத்தி நூல் நூற்கும் பழந் தமிழ் மக்களும் எண்ணெய் வாணிச்சியரும் புகையிலையை வகை வகையாகச் சுருட்டுவோரும் மேழி கையாளும் வேளிரும் இன்னும் பல் துறைத் தொழிலாளரும் இங்குக் கூடி இனிது வாழ்வர். இவரை யெல்லாம் வாயார வாழ்த்திப் பாடிப் பொருள் பெற்று வாழும் பாவாணரும் இங்குளர். ஆதலின் வட வீழம் சீருஞ் சிறப்பு மெய்தி நாடுகள் யாவற்றுள்ளும் தலைமை பெற்றிலங்குமோர் தனிப் பெரும்பதியா மென்க. இதற்கத்தாட்சியாகச் சின்னத் தம்பிப் புலவர் பாடிய பறாளாய்ப் பள்ளில் இரண்டடியை ஈண்டுத் தருகிறேன்.

“பண்ணிற் றோயப் பொருண்
முடிப்புக் கட்டிப்
பாடும் பாவலர்க் கீந்திடவென்றே
யெண்ணிப் பொன் முடிப்புக்
கட்டி வைத்திடும்
ஈழ மண்டல நாடெங்கள் நாடே.”

# மகா மஹோபாத்யாய — — ஸ்ரீ யக்ஞசாமி சாஸ்திரிகள்

[தேவங்குடி தியாகராஜ சாஸ்திரி, தஞ்சை]

ஆற்றோரத்தில் அமர்ந் திருந்தேன். அந்தி மங்கும் நேரம். அங்கு மிங்குமாக ஓரிரண்டு தாரகைகள் பிறந்து மினுக்கிக் கொண்டிருந்தன. காற்றில்லை. சுற்றிலும் மண்டி யிருந்த நாணலும் மரங்களும் அசைவற்றுப் பய பக்தியுடன் இரவன்னையின் வருகையை எதிர் நோக்கி யிருந்தன. மூங்கில் பாலத்தில் மோதிய நீரின் சலசலப்பு மாலையின் ஆழ்ந்த அமைதியுடன் போராடிக்கொண் டிருந்தது. அந்த இன்னோசையில் மயங்கி யிருந்தேன்.

என்ன சுகம்! இயற்கையின் குழந்தைகள் சாச்வதமாக இன்பத்தி லாழ்ந்திருக்கிறார்களே. ஏன் மனிதன் மட்டும் துயர்ப்பட்ட வண்ண மிருக்கவேண்டும்!

தாரகை தினம் தினம் அழிகிறது. தினம் தினம் புத் துயிர் பெற்று மின்னுகிறது.

பூவையும் காயையும் பறிகொடுத்து மரம் மொட்டையாக நிற்கிறது. மீட்டும் புத்துயிர் பெற்று முந்திய அழகைப் பெற்றுவிடுகிறது.

தேய்ந்து தேய்ந்து திங்கள் சாகிறான். ஓரிரண்டு நாட்களுள் வளர்ச்சி பெற்று மீட்டும் தாரகைகளுடன் ரமிக்க வந்து விடுகிறான்.

மனிதன் யாரையேனும் பறிகொடுத்தால் கொடுத்ததுதான். அவன் சோகத்தைத் தணிக்க, எந்தச் செத்துப் போனவன் திரும்பி வந்திருக்கிறான்? என் குரு நாதன் போய்விட்டார். இந்த இயற்கையின் அமைதி, அழகு, காம்பீர்யம், ரகஸ்யங்களை மறைத்து வைத்திருக்கும் தோற்றத்தை யளிக்கும் அந்தி மங்கல்—இவ்வளவையும் கண்டால் யாருக்குத்தான் குரு நாதன் ஞாபகம் வராது?

குருநாதன்—ஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள்—1876-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ம் தேதியன்று பிறந்தார். தந்தைக்கு ஒரே பிள்ளை. இலக்கியக்காரர்களின் வழக்கப்படி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தார் என்று சொல்லவேண்டியதில்லை. அந்திய காலத்தில் கொழுந்துவிட் டெரிந்த தேக காந்தியும் தெள்ளறிவும் குழந்தைப் பருவத்தில் இல்லாமலா இருந்திருக்கும்?

புகழ்பெற்ற அப்பைய தீக்ஷிதரின் வம்சம். வட மொழிச் சோலையுட் புகுந்தால், காளிதாஸனோடும் சங்கரரோடும், தீக்ஷிதரின் மணத்தை எங்கும் நுகரலாம். அத்தனை கிரந்தங்கள் செய்திருக்கிறார். காவ்யம், மதம், அலங்காரம், தத்வம்—எதைத் தொட்டாலும் தீக்ஷிதரை நினைக்காமல் இருக்கவே முடியாது. ஐயத்திற்கும் எதிர்ப்புக்கும் இடங்கொடாமல்; மேலே ஒன்று இருக்கிறது என்று சொல்ல முடியாமல் அலசி அலசி ஆராய்வார். குவலயானந்தம் அவர் எழுதியது. அதை வாசிப்பவன், “அடடா, இது ஒரு காவ்யமாக இருந்திருக்கக்கூடாதா? அலங்கார கோஷ்டியில் விழுந்து விட்டதே என்று வருத்தப்படுவான். ஆனால் தீக்ஷிதர் அலங்கார சாஸ்திரத்தைக் கௌரவிக்கத் தான் குவலயானந்தத்தை எழுதினார் போலும். ஏனெனில், அதில்லாவிட்டால் அலங்காரப் பாலைவனத்தில் ஒருவன் கூட நுழைந்திருக்க மாட்டான். காவ்யத்தின் அழகைப் பருக நமக்குச் சொல்லிக் கொடுப்பதென்பது அலங்காரத்தின் லக்ஷியம். தீக்ஷிதர் தோன்றினார். அலங்காரம் புத்துயிர் பெற்றது. ஜயதேவன் பரப்பிய மணல் வெளியிலே, பரிபூர்ணமான காவ்ய அழகு ததும்பும் உதாரணங்களைப் போட்டு, பெருஞ் சோலையாக வளர்த்து, அந்த சாஸ்திரத்தை அலங்காரம் என்ற பெயருக்குத் தகுதியுள்ளதாகச் செய்திருக்கிறார். அலங்காரத்தில் மட்டுமில்லை. மற்ற பிரிவுகளிலும் அப்படித்தான். மதவிஷயங்களை எடுத்துக்கொண்டால், எதிரியை நிர்த்தாக்ஷண்யமாகக் கண்டித்து, காரணத்துடன் தன்கொள்கையை நிலைநாட்டும்

வீரம் பெற்ற நடை, சொல்லிலே ஒரு வன்மை இவ்வளவு பெரியவர் தீக்ஷிதர்—இந்தக் கோபுரத்தைத் தாங்கி நின்றது அவரது பக்தி. உருகி யுருகி பக்தியிலாழும் உள்ளம் அவருக்கு. பராசக்திக்குக் கருணை வந்தது. மனிதனின் தாழ்மையைஅறிந்து, தன்னைமறந்து, கனிந்து கொடுத்ததோர் ஈடற்ற பக்திக்குப் பரிசாக தேவி தந்தது அழியாத அருளும் நீண்ட ஆயுளும். தீக்ஷிதர் கேட்ட வரங்களிலேயே அழியாத பக்தி ஒன்று. அதனால் அவர் வம்சத்தவர்களுக்கு 'கர்ப்ப தாஸர்கள்' என்று பெயர்வந்தது.

தீக்ஷிதருக்குப் பிறகு வந்த மகான்—மகாமகோபாத்யாய ஸ்ரீ தியாகராஜ சாஸ்திரிகள்—இப்படி யாரும் பெயரைச் சொல்லும் வழக்க மில்லை. பலருக்கு இதுதான் முழுப் பெயர் என்றும் தெரியாது. ஏனெனில் சாஸ்திரிகள் என்றாலே போதும். அவர் காலத்தில் சாஸ்திரிகள் என்ற சொல் அவரொவரைத்தான் குறிக்கும். இப்பொழுது ராஜு சாஸ்திரிகள் என்றோ அல்லது "சாச்ருவாள், சாச்ருவாள்" என்று "சாஸ்திரிகளைத்" திரித்தோ அழைக்கிறார்கள். பண்டிதருலகில் பெரும் புகழெய்தியவராதலால், அதிகமாகச் சொல்லவேண்டிய தில்லை. தர்க்கம், மீமாம்ஸை, வேதாந்தம், வியாகரணம் முதலிய பல சாஸ்திரங்களில் முதன்மை பெற்று, அவைகளைத் தெள்ளென விளக்கிக் காட்டும் வன்மை வாய்ந்தவர். ஸரஸ்வதி எப்பொழுதும் அவர் நாவில் உலவியதால், பொங்கிக்கொண்டிருந்த மேதை வெளிப்படப் போதுமான வாக்கு இருந்தது. கருத்துப் பிறிட்டு வரும். முன்னும் பின்னுமாக ஒரே யடியாக அடித்துக் கொண்டு விழாமல், வரிசை வரிசையாகப் பண்படுத்தப் பெற்று வரும். அத் தூய தேஜஸுக் கெதிரிலமர்ந்து வாதம் செய்ய யாருக்கும் துணிச்சல் வராது. துணிந்தாலும் கடைசியில் பணியத்தான் வேண்டும். வெற்றியைக் கனவில் கூடக் காண முடியாது. தென்னாட்டில் முதல் முதலாக அவருக்கு மகா மகோபாத்யாயப் பட்டம் அளிக்கப்பட்டது. உண்மையான யோக்யதைக்குத்தான், ஒருவரும் சிபார்சு செய்யவில்லை. காக்காய் பிடிக்கவு மில்லை. பிடித்தாலும் அந்தக் காலத்தில் லேசில் கிடைத்துவிடாது. கண்ட குணங்களுக்காகவும் கொடுக்கப்பட மாட்டாது. ஏதோ பெரிய சொத்திற்கு அனந்தர வார்ஸ் யார் என்பதைப் பற்றிச் சர்க்காருக்குச் சந்தேகம் உண்டாயிற்று. தெளிவாகும் சந்தேகமாக யில்லை. ஹிந்துச் சட்டமும் வழி விட வில்லை. சர்க்கார் கலங்கிற்று. கடைசியில் ராஜு சாஸ்திரிகளிடம் சந்தேகத்தைச் சமர்ப்பிக்கவே, அவர் தம் ரிஷியுள்ளத்திற்குப் பக்குவமாகப் பட்டதை எடுத்துரைத்தார். அந்த அறிவின் தெளிவனைத்தும் அம் முடிவில் அடங்கி யிருந்தது. அவருடைய அபிப்ராயம் அங்கீகரிக்கப்பட்டு, அதனை யொட்டியே வழக்கும் தீர்ப்பாயிற்று. இதற்குத்தான் மகா மகோபாத்யாயப் பட்டம்.

ஓயாத தெய்வத்யானம், வழுவாத உள்ளத் தூய்மை, நியமம்—இவ்வளவும் சாஸ்திரிகளுக்கு அருள் செய்யும் சக்தியை ஈந்திருந்தன. அவர் எது சொன்னாலும் நடந்துவிடும். அவர் சிஷ்யர்கள் அனைவரும் கல்வியிலே கரை கண்டு, பாரத மெங்கும் புகழெய்தியது அவருடைய அருட் செல்வத்தினால்தான்.

உலக வழக்கத்தை யொட்டி, இப் பெரியாருக்குப் பிள்ளை யில்லை. தன் தம்பியின் குமாரரான நீலகண்ட தீக்ஷிதரை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டார். குருநாதன் அவரது மைந்தன்.

இவ்வளவு தூரம் நான் வழி விட்டுப் பிரிந்தது, வெறும் காரண மில்லாமலில்லை. குருநாதனுக்கு அறிவு கூடவே பிறந்தது. போதனையினால் மட்டும் வரவில்லை என்பதைக் காட்டத்தான். மிகச் சிறுவயதில் அவருடைய கல்விப் பயிற்சி ஒரு வேடிக்கை. ராஜு சாஸ்திரிகளின் சிஷ்யர்கள் ஒருவரிருவரல்ல. தென்னாட்டின் மூலை முடுக்குகளி லிருந்தெல்லாம் மொக்கு மொக்காகப் பூத்திருந்த எத்தனையோ இளம் மேதைகள் வளர்ச்சி பெற சாஸ்திரிகளை யடைந்து மொய்த்தனர். அறுபது நாழியும் வீட்டிலே படிப்பும், போதனையும், சிந்தனையும் ஒலித்த

வண்ணமா யிருக்கும். ஆனால், நெடுந் தூரத்தினின்றும் வந்திருக்கும் இக் கூட்டத்திற் கிடையே பேரனைக் காணவே முடியாது. சாஸ்திரிகள் 'எங்கே அவன் ?' என்று கேட்பார். எல்லோரும் திரும்பித் திரும்பி பார்த்துவிட்டு இல்லை யென்று சொல்லுவார்கள். 'எங்கே' என்றதும், ஒரு குறிப்பறிந்த சிஷ்யன், பேரப் பிள்ளையைத் தேடிக்கொண்டு வருவதற்காக, வாசலை நோக்கி ஓடுவான். 'மூர்மூர்' என்று உறுமின வண்ணம் ஒரு பன்றி குடல் தெறிக்க வயிற்றை ஆட்டிக்கொண்டு ஓட முடியாமல் ஓடும். அதற்குப் பின்னால் செக்கச்செவேலென்ற மேனியில் காலை வெயில்பட்டு மின்ன, கல்லையெடுத்து ஓங்கின கையுடன் ஓடி வருவார் பேரப்பிள்ளை. ஆடை முழுதும் புழுதி படிந்து, நடுக் காட்டில் துணை யில்லாமல், புலியையும், காட்டுப் பன்றியையும் அம்பு பூட்டித் துரத்தி வரும் இளவரசரைப் போல ஓடி வருவார். தேட வந்த சிடப் பிள்ளைக்கு முப்பத்தைந்து நாற்பது வயதிருக்கும். எங்கே ஓடுவது? "ஏய் என்னடா, இன்னும் பச்சைக் குழந்தையா யிருக்கயே' ஐயா உட்கார்ந்துட்டா பாடம் சொல்ல. நீ வரயா மாட்டயா" என்று ஒரு கேள்வி மட்டும் போட்டுவிட்டு நிற்பார். "போங்கோ, மாமா வர முடியாது" என்று சொல்லிவிட்டுச் சில்லுப் பொறுக்க ஆரம்பித்து விடுவார் பேரன்.

பாட்டியும் அடிக்கடி சற்று வேகத்துடன் சொல்லுவாள். "எங்கெங்கேருந்தோ வந்து வாசிக்கறா. நீ போய் வாசிக்கக் கூடாதோ" என்று. அதைக் கேட்டு சாஸ்திரிகள், "அவனை ஒன்றும் சொல்லாதே. எல்லாம் தானாக வந்துவிடும் அவனுக்கு" என்பார்.

தினம் தினம் இந்தக் கதைதான்' கொஞ்சம் வயது வந்த பிறகுதான் குருநாதன் பாட்டனார் முன் னமர்ந்து படித்

நோட்டீஸ்

மன்னார்குடி டி. மு. கோர்ட்டு

1940 S. C. No. 359

1. A. ராஜகோபாலய்யர்
2. மைனர் A. வெங்கிட்டராமன் } வாதிகள்

P. அய்யாசாமி சாஸ்திரிகள் முதல் வாதியின் பவர் ஏஜண்டு. 2ம் வாதியின் அடுத்த சினேகிதர்.

நடேசன் சேண்டப் பிரியர்—பிரதிவாதி

இந்த நம்பரில் பிரதிவாதிபேரில் பிராமிசரி நோட்டுகளின்பேரில் ரூபா 43-2-0 க்கும் பின்வட்டி வியாஜ்ஜிய சிலவுக்கும் வாதிகளால் தாவா செய்யப்பட்டுக் கடைசியாக சம்மனை ஒட்டி சார்வு செய்யவும் பப்ளிகேஷனுக்கும் உத்திரவாகி 17-2-41ல் ஈறங்கி போடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபனை யிருந்தால் ஷை கோர்ட்டில் ஷை தேதியில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

இப்படிக்கு,
T. K. கிருஷ்ணமூர்த்திஐயர். B.A., B.L.
வாதிகளின் வக்கீல்
மன்னார்குடி.
3—2—41



தார். அப்பொழுது கூடப் பாதி நாள் பாடத்திற்கு வருவதில்லை. மற்ற சிஷ்யர்களைப்போல், நடு நிசியிலும், கரிச்சான் கூவும் ஜாமத்திலும் விளக் கெரிக்காமல், தானகவே குரு நாதனின் போறிவு ஒளி விடத் துவங்கியது. இவ்வாறு இயற்கையாகவே ஒரு சின்னத் தூண்டுதலைத் தவிர வேறு பெரிய போதனை யில்லாமல், குரு நாதனுக்கு அறிவெழுந்தது என்று காண பிக்கவே, தீக்ஷித—சாஸ்திரிகளின் கதையைத் தொட்டேன். போனுக்கு ஆசி கூறுங்கால், தன்னுள்ளே திகழ்ந்த சர்வ சக்திகளையும் அவ்வாசியில் மறைத்தளித்து விட்டார் சாஸ்திரிகள். ஆனல் குரு நாதன் சிஷ்யர்களுக்குப் பாடம் சொல்வதைப் பார்த்தால் பற்பல ஆசிரியர்களிடம் தனித் தனியே பயின்று அவர்களின் போதனு முறையில் முதிர்ந்த அனுபவம் பெற்றவர்போ லிருக்கும். உலகத்திற்குக் குரு பதவி வகித்துவரும் தக்ஷிணமூர்த்தி முன் போல விறு விறு வென்று ஐயங்கள் தெளியும். உண்மை தென்படும். சொல்லிலே ஒரு அருள் உண்டு.

நான் அவரிடம் போன புதிதில் எனக்குத் தர்க்கம் ஆரம்பிக்கப் பெற்றது. தீபிகை கேட்டு வந்தேன். அருவி போலத் தங்கு தடையின்றிச் சொல்லிக்கொண்டு வருவார். வெகு ஜாக்ரதையாக, புலன்களைக் கட்டி, மூச் சடக்கி, சொல்லிலே லயிக்க வேண்டும். சற்று அப்பால் திரும்பினல் போதும். கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற்போல் ஆய்விடும். பறந்து பறந்து செல்லும் அம்மனே தர்மத்திற்கு முன் புதிது புதிதாக யுக்திகள் வந்து நிற்கும். ஒரு பங்க்தி வந்தது. புரிந்துவிட்டது. அதைத் தொடர்ந்து புதிதானச் அநுமானமொன்னீறச் சொன்னர்கள். எனக்கு விளங்கவில்லை. பிறகு கேட்டுக்கொள்ளலா மென்று, மறுநாள் காலையில் யாருடனே பேசிக்கொண் டிருக்கையில் போய்க் கேட்டேன். சொன்னர். ஆனல் முந்திய வேகம்தான். இப்பொழுதும் ஒன்றும் புரியவில்லை. புரியவில்லையே என்றேன். பொறுமை யிழந்து ‘புரியவில்லையா, சரி, சி—யிடம் போய்க் கேட்டுக்கொள்’ என்று சொல்லி வந்தவருடன் பேசத் தொடங்கிவிட்டார். ‘சீனு’ என் சகபாடி. ஆனல் எனக்கு ஓரிரண்டு வருஷம் முந்தியே குரு குலத்திற்கு வந்து விட்டார். அவரைப் போய்க் கேட்க, அவருடைய மூளையும் குழம்பிற்று. தெரியாது என்று சொல்லிவிட்டார். எனக்குக் கலக்கமும் கவலையும் வந்துவிட்டன. மாலையில் குரு நாதனை யணுகி “ எனக்குத் தர்க்கம் வருமா வராதா ” என்று அழாத குறையாகக் கேட்டேன். கருணை பிறந்து செவ்வையாகச் சந்தேகத்தை நீக்கினர்.’

எத்தனையோ சீடர்கள் வந்து பாடம் கேட்டுப் போன வண்ண மிருப்பார்கள், படிப்படியாக குரு நாதனின் பெருமை அவர்களுக்குப் புலனயிற்று. ஆனல் இன்னும் உலகிற்குத் தெரியவில்லை. இதற்கு சங்கோசம்தான் காரணம். கற்பனைக் கெட்டாத செல்வங்களை வைத்துக் கொண்டு ஆர்ப்பாட்ட மின்றி அமைதி கொண்டு நிற்கும் நடுக் கடல் போலே, ஒரு காம்பீர்யமும் அழுத்தமும் நிறைந்த ஹிருதயம். தன் தேட்டத்தைத் தானகப் பறையடிக்க ஆவலில்லை. முண்டிக் கொண்டு நுழைந்து கொடுப்பது, பல புள்ளிகளைப் பேட்டிகண்டு பிரவசனத்திற்கு ஏற்பாடு பண்ண முயலுவது—இந்த மாதிரி தரித்ர வித்வான்களின் சிறுமைகளிலிருந்து குரு நாதனை காக்க உணவிற்கும் சௌகரியத்திற்கும் போதுமான பொருளைத் தெய்வம் தந்திருந்தது. ஆனல் என்றைக்குத்தான் உள்ளிருக்கும் கதிரை உலகம் காணும்?

ஸ்ரீ ரங்காசாரியார் ஒரு வைஷ்ணவர். முனிசிப் கோர்ட் ஆபீஸ் குமாஸ்தா. அவருக்கு மிகவும் கவலை வந்துவிட்டது. தினம் தினம்இரண்டு முறை வந்து, “நான் ஏற்பாடு செய்கிறேன். ஒரு பிரவசனம் ஆரம்பித்தா லென்ன? இவ்வளவு சங்கோசமும் பயமும் இருந்தால் என்றைக்குத்தான் தாதாவைப் போல் ஆவது? ஒவ்வொருத்தன் இரண்டு புஸ்தகத்தைப் படுச்சுட்டு, வாயடி யடித்துக்கொண்டு ஜகத்தையே விலைக்கு வாங்கிவிடுவதுபோல் பேசுகிறன். இப்படித் தாங்கள் கூட விளக்காக இருக்கிறீர்களே ” என்று கெஞ்சுவார். குரு நாதன் அசைந்தால் தானே? ஆனல்

வெகு நாளாக, அலுத்துப் போகாமல், பிடிவாதத்தை விடாமல் ஐயங்கார் சொல்லிக்கொண்டே வந்தார். கடைசியில் வெற்றியும் பெற்றுவிட்டார். பாகவதம் சொல்லுவதற்கு குரு நாதன் இசைந்தார். குரு நாதன் வீட்டு வாசலிலேயே ஒரு பந்தல் போடப்பட்டது.

அன்றிரவு நல்ல கூட்டம் கூடியிருந்தது. இது ஸ்ரீ ரங்காசாரியாரின் முயற்சியினால் மட்டுமில்லைக் அந்த காலத்தில் திண்ணைக்கதைக்குக் கௌரவமிருந்தது. இப்பொழுது அறிவாளிகளும் 'பெரிய' மனிதர்களும், ரேடியோவை முடுக்கு வதிலும், பரீக்ஷை மண்டிக் கிடக்கும் ஆராய்ச்சியிலும், டவுன் ஹாலுக்குப் போவதிலும் சுவைக்கும் ருசியை, கேவலம் ஸமஸ்க்ருதத்தில் மட்டும் பாண்டித்ய மெய்தியவர்களின் திண்ணைக் கதையில் காண்பதில்லை. இருப்பதாகவும் நினைக்கமாட்டார்கள். நினைத்துப் போனாலும் கௌரவக் குறைச்சல். ஆங்கிலம் படித்தவர்கள் ஸமஸ்கிருதத்தைப் பற்றிச் சொன்னால் சற்றுக் காதுகொடுப்பார்கள். அந்தக்காலம் வேறு.

அன்று நல்ல கூட்டம். பூஜை யெல்லாம் முடிந்ததும் தம்புராச்ருதி சேர்த்து, நாட்டை ராகத்தில் ச்ருதி தேவதைப் போல் தம்புராவின் இசையுடன் குரலை ஐக்கியப்படுத்தி தியான ச்லோகங்களைச் சொல்லி முடித்தார். மூலம் வாசிப்பவர் "கதிதோ வம்சவிஸ்தார: பவதா ஸோம ஸூர்யயோ?" ராக்ஞாம் சோபய வம்ச்யா னாம் சரிதம் பரமாத்புதம்." என்றாரம்பித்து மேலே வரும் ச்லோகங்களை வாசித்து முடித்தார். பிரசங்கி ஆரம்பிக்க வேண்டும். குருநாதன் கண்ணை மூடி ஒரு கணம் தியானத்திலாழ்ந்தார். ஒரு முறை கனைத்தார். எப்படியாரம்பிக்கப் போகிறாரென்று, கூட்டம் ஆவலுடன் புன்முறுவல் பூத்துச் சாதக பக்ஷிபோலக் காத்திருந்தது. குருநாதன் மீட்டும் கனைத்தார். கூட்டத்தின் ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிக்குப்பார்வைச்செலுத்தினர். மறுபடியும் ஒரு கனைப்பு. ஐந்து நிமிஷம் ஆய்விட்டது. இன்னும் குருநாதன் வாயைத் திறந்த பாடில்லை.

நான் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தேன். ஐந்து நிமிஷமாகியும் கனைத்துக் கொண்டே யிருக்கிறாரே, வாயைத்திறக்கவில்லையே என்று கவலை. மார்பு படபடவென்று அடித்துக்கு கொண்டு பத்து நிமிஷமாய் விட்டது. வீட்டிற்குள் சீடர் குழாத்தின் முன் பொழியும் சொல் ஏனின்று நின்று விட்டது? தேவியைப் பிரார்தித்தேன். பதினைந்து நிமிஷமாய் விட்டது. குருநாதனைப் பார்த்தேன். உதடு அசைந்தது. மடையைப் பிடுங்கி விட்டாற் போலச் சொற்கள் புரண்டு புரண்டு வந்தன. எனக்கு உயிர் வந்தது.

மறு நாள் நானும் ஆசார்யனும் தனியாய் இருந்தோம். நான் என்னுடைய மார்மனரின் ' கதையைச் சொன்னேன். இதே மாதிரி அவர் பூஜை, தியானச் லோகம், மூலம் எல்லாம் முடிந்தவுடன் கொஞ்சநேரம் கூட்டத்தைப் பார்த்து விழித்தாராம்; கனைத்தாராம் ஐந்து நிமிஷம் ஆயிற்று. "நான் நாளைக்கிச் சொல்றேன்" என்று எழுந்து விர்ரென்று உள்ளே போய்விட்டாராம். "எனக்குப் பஸாபங்கம் வந்துடுத்து என்ன பண்ணுகிறது" என்று அவருக்கிருந்த நடுக்கத்தில் 'ஸபாக்ம்பம்'என்பதை பஸாபங்கம் என்று மாற்றிவிட்டார். மேலும் "திடீரென்று மழை கொட்டினால் என்ன ? கதை நின்று விடுமே இல்லாவிட்டால் ஒரு தேள் கொட்டக் கூடாதா ? கிர்ரென்று தலைசுற்றி மூர்ச்சை போட்டு விழுந்துவிடக்கூடாதா என்று நினைத்துக்கொண் டிருந்தேன். ஒன்றும் வந்தபாடில்லை. கடைசியில் நானே 'நாளைக்கி சொல்றேன்' என்று வந்து விட்டேன்' என்றார். அது மாதிரி தாங்களும் நாளைக்குச் சொல்றேன்' என்று எழுந்து வந்துவிடுவீர்களோ என்று பயந்தேன் என்றேன் நான். குரு நாதன் இதைக் கேட்டுச் சிரித்தார். நான் அவரை விடத் தேவலை. பிடித்தடித்துச் சொல்லி விட்டேனே இல்லையா? என்றார். இது தான் குருநாதன் ஆற்றிய முதல் பிரசங்கத்தின் கதை.

குரு நாதனுக்குக் காதில் இனிமையை யூற்றும் ஸன்னமான சாரீரம், ஸ்வரூப

யோக்யதையுடன் ஸங்கீதத்தில் ஆழ்ந்த ஞானமும் சேர்ந்திருந்தது. கதை நடக்கும்போது, நாதஸ்வரத்தைத் தன்வசப் படுத்தியிருந்த காலஞ் சென்ற சின்ன பக்கிரி நாள் தவறாமல் வந்து கேட்டுக் கொண்டிருப்பார். பூர்ண ஞானம் வெளிப்படும் ஆசார்யனின் சங்கீதம் அவரைப் பரவசப் படுத்தியது. விரு விரு வென்று எழுந்து போனார். பத்துப் பதினைந்து நாட்களுக்கு முன் திருவாங்கூர் ராஜா அவர்கள் தனக்குப் பரிசாக அளித்திருந்த பட்டை யெடுத்துக்கொண்டு குருநாதனின் திருவடியில் வைத்து விட்டுப் போய் நின்றார். சங்கீதத்தில் இருந்த ஞானம் நன்கு பயன்படுத்தப் பெற்றது. வடமொழியில், ராகபாவம், பொருள், இனிமை மூன்றும் நிறைந்த எவ்வளவோ கீர்த்தனைகளை இயற்றி யிருக்கிறார். ஆசாரியன் "குலகிரி வரதனயாம்" என்று தோடியிலும், "கருணா சமுத்ரா" என்று பிலஹரியிலும், "தியாகராஜ தேநமோ நமோ" என்று ஹம்ஸத்வனியிலும், "கானு கதி ராமாமே" என்று தன்யாசியிலும், "நிரபாயம் நிடிலாக்ஷம் நிர்மாயம்" என்று ஆனந்த பைரவியிலும் உள்ள க்ருதிகளும் இன்னும் இரண்டு மூன்றும் எங்களிடையே அதிகமாக உலவுபவை. சில க்ருதிகளின் அர்த்த புஷ்டியும், கவிதையும், அமைப்பும், தியாகையரின் முதல் தர கீர்த்தனைகளோடு மதிக்கத்தக்கவை. இன்னும் வெளிப்படாத இம் மணிகளை, அவரின் மூத்த புதல்வர் ஸ்ரீ மகாலிங்க சாஸ்திரிகள் சீக்கிரமாக அச்சுக்குக் கொண்டு வருவார் என்று நம்புகிறோம்.

குருநாதன் சொற்பொழிவில் ஒரு அலாதியான அழகு தெரியும். அவதாரிகை வைத்துப் பொருள் கூறல் அவருடன் கூடப் பிறந்த கலை. சாத்திரங்களிலே கரைகண் டிருப்பான். ஆனால் பேசவராது. வந்தேன் போனேன் என்று சொல்லி முடித்துவிட்டுப் பிறனுள்ளத்தில் பதிக்கும் வழி தெரியாமல், தவித்துத் தண்ணீராக உருகுவான். இந்தக் குறையொன்றே, உலகிற்கு முன் அவனுடைய மற்றக் உயர்வுகளை அமுக்திவிடும். ஆனால் குரு நாதனுக்கு வாக்குண்டு. ஒரு ச்லோகத்தை எடுத்துக் கொண்டால், பெரிய பெரிய பதஞ்சலிக்கும் பாணினிக்கும் எட்டாத அர்த்தங்கள், அவருக்குத் தோன்றும். முன்னே பார்த்துக்கொண்டு வருவதில்லை. பீடத்தில் உட்கார்ந்து தன்னை மறந்துவிடுவார். சரஸ்வதி தாண்டவமாடுவாள். இப்படிச் சமயோசிதமாக மேதை இடங் கொடுத்ததால், எதைப் பற்றிச் சொன்னாலும் அது நன்றாகத்தான் இருந்து தீரும். லக்ஷ்மன சக்தி ஒரு 'ஸ்பெஷாலிடி! 'விபீஷண சரணாகதி' ஒரு மாஸ்டர்பீஸ்' என்ற மாதிரி சொல்வதற்கே ப்ரஸக்தியிராது. இசையின்பம், ஞானம், பிரதிபை—இவ்வளவும் சேர்ந்து விட்டால் கேட்பானேன்—ஸ்வர்க்கம்தான்.

ஒரு நாள் மன்னார்குடிக்குப் பக்கத்திலிருக்கும் சே—யூரிலிருந்து பெ—வந்திருந்தார் கதைக்கு. பொற்பூண் அறைந்த கைத்தடி, இடுப்பிலே ஜரிகை வேஷ்டி, சரிகை உத்தரீயம், பக்கத்தில் இரண்டு மூன்று புன் முறுவல் பூத்த சிநேகிதர்கள்—இவ்வளவும் செல்வவந்தர் என்று அவரை, உலகத்திற்கு அறிமுகப் படுத்தின. குருநாதன் அவரை முன் பின் பார்த்ததில்லை. அன்று தசமஸ்கந்தத்தில் முக்கியமான கட்டம். பாரதப் போரின் மத்தியில் திரும்பிய பலராமன் நைமிசாரண்யத்தில், சௌனகாதிகளுக்குச் சூதர் கதை சொல்லிக்கொண் டிருக்கும் ஆச்ரமத்திற்கு வருகிறார். எல்லோரும் எழுந்து அவரைப் பூஜிக்கிறார்கள். சூதர் மட்டும் எழுந்திருக்கவில்லை. "என்ன அகங்காரம்" என்று சினமூண்ட பலராமன் சூதரைக் கொன்றுவிடுகிறார். கதை சொல்லுவதற்காக அவருக்கு நாங்கள் தீர்க்காயுள் தந்திருக்கிறோமே. இப்படிக் கொன்றுவிட்டீர்களே" என்று துக்கப் படுகிறார்கள். உடனே பலராமன், தன் வதமும், ரிஷிகளின் செயலும் பொய்யாகாமலிருக்க, சூதர் மாண்ட இடத்திலேயே, அவருக்கு மைந்தன் என்று ஸௌதி என்றோர் புருஷனை ஸ்ருஷ்டித்து விடுகிறார். இதுதான் கதை. ரொம்பப் பிரமாதமாக அமைந்துவிட்டது. பெ—பிரமித்துப் போய் வாயைப் பிளந்த வண்ணம் கேட்டுக்கொண் டிருந்தார். கதை

முடிந்து, எல்லோரும் போனவுடன் பெ—குரு நாதனிடம் வந்து, "அபசாரம், சாமான்யமாக எண்ணி, தங்களைக் கேள்வி கேட்டு, பரீக்ஷிக்கலா மென்று வந்தேன் செருக்குடன். மன்னிக்க வேண்டும்" என்ருர். யாருக்கு யாரைத் தெரியும்? முன் பின் வராத முன் பின் தெரியாத, பெ—திடீரென்று அப்பா குதிருக்குள்ளில்லை என்றதும், குருநாதன் ஒன்றும் பேச வில்லை. பிறகு தெரிய வந்தது—பெ—பெரிய பணக்காரர். வைஷ்ணவ சம்பிரதாயத்தையும், மற்ற முறைகளையும் ஒட்டி வட மொழியைத் திரப்பயிறின்ருக்கிருர் என்று.

கற்பனையும், பொருணயமும் இனிமையும் ததும்பக் குருநாதன் பேசுவதைக் கேட்க வெகு சிலர்தான் கொடுத்து வைத்திருந்தார்கள். இதற்குக் காரணம் மக்களுக்கு இந்தியாவின் புராதனமான இலக்கியங்களில் அபிருசி குறைந்துவிடுவது மின்றி, த்வேஷ புத்தியும் உண்டாயிருப்பதுதான். அள்ளி யள்ளி வீசப்படும் 30 ரூபாயைத் தேடிவரும் குமாஸ்தா வட மொழி படித்திருக்கக் கூடாது என்று தொனிக்கும்படி ரொம்பத் தெரிந்த மூளைகள் கூறும் போது பாதித் தெரிந்த மூளைகளுக்குத் தெரியுமா வட மொழியின் கற்பூர வாசனை! காலஞ் சென்ற டி. ஆர். ராமச்சந்திரய்யர் "சாஸ்திரிகள் ஆங்கிலம் படித்திருந்தால், அவரின் பேச்சுத் திறன் சுரேந்திரநாத் பானர்ஜியின் புகழை மறைத்திருக்கும்" என்று சொல்லுவார். இப்படியொரு நெடும் மொழியின் மீது விழுந்து விடாமல் வட மொழி சாய்ந்திருப்பதும், காலத்தின் கோரமான நகைச்சுவை.

சே—யூர் 'பேஞ' மாதிரியே ப்ரொபசஸர் சுந்தரராமனும் ஒரு நாள் செய்தார். பங்கா நாட்டுக் கணபதி சாஸ்திரிகள் காலம் சென்றதும் குடந்தை அத்வைத சபைத் தலைமை குருநாதனுக் களிக்கப்பட்டது. ஆண்டுதோறும், அயலூர்களினின்றும் அவைக்கு வரும் பண்டிதர்கள் ப்ரொபஸர் வீட்டில்தான் தங்கும் வழக்கம். குருநாதன், பரிசய மில்லாததால், வேறு சுற்றத்தாரின் இல்லத்தில் இறங்கியிருந்தார். அறிமுகப் படுத்தப்பட்ட போது, எப்பொழுதும் பண்டிதர்களிடம் அதிக அன்பும் மரியாதையும் காட்டும் புரோபஸர் "ஓஹோ, சரிதான்" என்று உயரிய தோரணையில் சொல்லிவிட்டுப் போய்விட்டார். அன்றிரவு தலைவரின் உபன்யாசம். ப்ராஹ்மண்யம் என்பது அவர் பேசப் புகுந்த விஷயம். முழுவதும் நவீனமான முறையிலே, எவ்வளவு நுணுக்கமாகப் புக முடியுமோ அப்படிப் புகுந்து ப்ராஹ்மண்யத்தைப் பற்றிக் குருநாதன் ஆராய்ந்தார். அசாத்தியமான கூட்டம். வெறும் பாமரக் கும்பலல்ல. கல்வியிலே திளைத்த அறிஞர்கள். இதைக் கண்டால் குருநாதனுக்கு உள்ளம் எழாமலிருக்குமா? திங்களைக் கண்ட இமய மலைப் பச்சிலை போலே, முகம் ஒளிவிட்டது. திங்களைக் கண்ட கடல் பொங்கிற்று. 'பாரறியும் விண்ணறியோம்' என்று தான் இருந்தது சொல் பெருக்கு. பிரசங்கம் முடிந்தது. எல்லோரும் போனுர்கள். முன்போலத்தான், ப்ரொபஸர் பின்னே வந்து, "கணபதி சாஸ்திரிகளுக்குப் பிறகு, பூமண்டலத்திலேயே பிரஸங்கி யில்லை யென்று நினைத்துக்கொண்டிருந்தேன். இன்று கேட்டபோது......அப்பாப்பா..." என்று மௌனம் சாதித்து விட்டார். அந்த மௌனமே அவர் எவ்வளவு தூரம் உணர்ந்திருக்கிருர் என்பதைத் தெளியத் தெரிவித்துவிட்டது. பிறகு ப்ரொபஸருக்கு குருநாதனிடம் ஒரு கௌரவ புத்தி.

மன்னுர் குடியில் பாகவதம் நடந்து கொண்டிருந்தது. ஒருநாள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, குருநாதனுக்கு நெஞ்சை யடைத்து விட்டது. குரு பக்தியைப் பற்றிக் கூறிக்கொண்டிருந்தார். குருவான பாட்டனரின் நினைவு தோன்றிவிட்டது. கரகரவென்று கண்ணீர் பெருகிற்று. துக்கத்திற் கறிகுறியாக நெஞ்சில் காணும் உருண்டை மேலே மேலே போய் வந்தது. ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை. அப்படியே கதையை நிறுத்தி எழுந்து விட்டார். கலங்கிய கண்ணுடன் பூஜை முடிந்ததும், உள்ளே போய்விட்டார். இந்த குருபக்தி ஆயுள் முழுவதும் தணியாத வேகத்துடன் இலங்கிக்கொண்டிருந்

தது. என்றைக்காவது அகஸ்மாத்தாக, குரு பக்தியைப்பற்றி வந்துவிட்டால் கதைக்கு வந்தது ஆபத்து. நெஞ்சை யடைத்துத் தாரை தாரையாகக் கண்ணீர் கொட்டும். குருநாதனுக்கு அடிக்கடி வரும் இந்தத் தீராத சோகத்தையும் கலக்கத்தையும் எத்தனையோ முறை பார்த்திருக்கிறேன். கல்லூரி மாணவர்களும், அரிக்குழி ரோண்டும் குழந்தைகளும் ஆசிரியனை 'அவன் இவன்' என்ற காட்டுத் தனமாக ஏக வசனத்தில் பேசும் இந்தக் காலத்தில், இந்த அன்பு ஒரு ஆச்சரியம். இந்தக் கட்டுப் பெட்டிப் பக்தி ஒரு புதுமை! இந்த நிகரற்ற குரு பக்தியை சிடர்கள் உள்ளத்திலே ஊட்டக் குருநாதனுக்கிருந்த ஆவல் கொஞ்ச நஞ்சமில்லை. அடிக்கடி அதன் அவசியத்தைப் பற்றிப் பன்னிப் பன்னிச் சொல்வார். 'வித்தை அதனால்தான் வரும், ச்ரேயஸ் அதனால்தான் வரும், ஆயுளும் நன்மையும் அதனால்தான் வருமென்று கவட்டுத் தனமாக ஓர் சிஷ்யன் பழகுவதாகத் தெரிந்தால் குருநாதன் உள்ளம் துடித்து வேதனைப்படும். அவனுக்கு வெறுப்பாக அருள் புரிந்துவிடுவார். யாரையேனும் ஒருமுறை பார்த்தால் போதும். எடை போட்டு நிறுத்ததுபோல், அவனுடைய குணங்கள் வெட்ட வெளிச்சமாக அம் மனதிற்குத் தெரிந்துவிடும்.

அறிவைத் தேடி வந்தார் ஒரு சிஷயர். புதிது. கொஞ்சநாள் பழக்கமாயிற்று. குருநாதன் முன்பு ஒருநாள் பேசிக்கொண்டிருந்தார். உடம்பின் வளைவும், கட்டிய கையும் விநயமே மூர்த்தி யென்று அவரைச் சொல்லின. ஆனால் குருநாதனின் பருந்துக் கண்ணுக்கு ஒன்று புலப்பட்டது. அதுதான் சிஷ்யனின் கை விரல்கள். கட்டிய கைகளுடன், விரல்கள் புஜத்தின்மீது தாளம் போட்டுக்கொண் டிருந்தன. உடனே குருநாதன், "என்ன அகங்காரம் விரலில் வந்து கூத்தாடுகிறது" என்றார் முகத்தில் அடித்தாற்போல. எனக்கு ஸாக்ரடீஸின் நினைவு வந்தது. கிரீஸில் ஒரு கக்ஷி யிருந்தது. அவர்கள் அழுக்கு மண்டி சுக்கு நூறாகக் கிழிந்துபோன ஆடைகளைத்தான் தரிப்பார்கள். சாக்கடைகளில்தான் உட்கார்ந்திருப்பார்கள். இவ்வளவும் வைராக்கியத்தினல் அல்ல. உலகமே துச்சம் என்று மிதமிஞ்சிக் கொழுத்த செறுக்கினல் அவர்களின் தலைவன் ஒருநாள் ஸாக்ரடீஸின் முன் போய் நின்றான். பளிச்சென்று சொல்லால் அறையும் ஸாக்ரடீஸ், "அடாடா, நன்றாகத் தெரிகிறதே. உன்னுடைய அகம்பாவம். உன் சட்டைப் பொத்தல்களின் வழியாக எட்டிப் பார்க்கிறதே" என்றார்.

அத்வைத சபைத் தலைமை யளிக்கப் பட்டதாலும், நிலபுலன்கள் உள்ள திருவாலங்காடு சமீபத்தில் இருந்ததாலும், குருநாதன் 1919-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மன்னார்குடியை விட்டு குடந்தைக்குக் குடும்பத்துடன் வந்துவிட்டார். கும்பகோணத்து வீட்டில் ரேழி யறையில் ஒரு சாய்வு நாற்காலியுண்டு. அந்த விக்ரமார்க்க ஸிம்மாஸனத்தில் சதா காலமும் சாய்ந்திருப்பார் குருநாதன். வாழ்வின் மர்மங்களைப்பற்றிய யோஜனை, அல்லதுதேவியைக் குறித்துத்தியானம்-இவை இரண்டும் அதில் சாய்ந்து குருநாதன் செய்யும் காரியங்கள். உள்ளம் முழுவதும் பறி கொடுக்கும் பக்தி யுண்டு. "வாழ்வின் மர்மங்களை அறியவேண்டுமானல், அறிவுதேட ஆசைப்பட்டால், உழைப்பைக் காட்டிலும் உமையின் அருள்தான் பெரிது" என்று அடிக்கடி சொல்லுவார். குருநாதனின் தெய்வ பக்தி ஆடம்பரமற்றது. பிரமாதமாக ஆசாரம் ஆசாரம் என்று தன்னையும் பிறரையும் துன்புறுத்தும், நெஞ்சிலே ஈரமற்ற கர்மிஷ்டனின் வழியிலே அவருக்குப் பிடித்தமில்லை. ஆனல் உள்ளத்திலே பூர்ணமான பக்குவம் திகழ்ந்தது. ஏகாந்தத்தில் தேவியின் உருவை,நிலைப்படுத்திக் காண்பதில் ஒரு ஆனந்தத்தைக் காண்பார்.

இந்தப் பக்தி மேலிட்டிலிருந்து வைராக்ய உணர்ச்சி பிறந்தது. குழந்தை குஞ்சுகளெல்லாம் சாய்வு நாற்காலியில் ஏறி விளையாடும். கத்தும், கொஞ்சும். புதிதாகப் பார்ப்பவனுக்கு, "என்ன, இவ்வளவு பெரிய அறிவாளி, இப்படி ஸம்ஸாரத்தில் மயங்கிக் கட்டுண்டு கிடக்கிறாரே" என்று ஸகஜமாகத் தோன்றும். அது முற்றி

னும் தவறு. தன் குடும்பம், தன்னது என்ற பாமரனின் அன்பில்லை குருநாதனுக்கு. அன்பே தெய்வம் என்ற ஞானியின் அன்பு. வீட்டோடு மட்டுமின்றி, வெளியே உலகத்திலும் சமமாகப் பரவியிருந்த அந்த அன்பை, ஒரு துறவியின் பேதமும் கபடமுமற்ற அன்பென்று சொல்லவேண்டும். பார்ப்பவர்களுக்குத் தவறாகத் தோன்றும் ஸம்ஸார மோகம் உண்மையாகக் குருநாதனுக்கில்லை.

ஒரு சம்பவம், என் சகபாடியான 'சீனு' சொன்னது, இளமையிலே துறவு மேலிட்டு குருநாதன் சேலத்தை நோக்கி ஓடிவிட்டார். பெரும் பெரும் யதிகளையும் ஞானிகளையும் உலகத்திற்குக் காட்டாமல் மறைத்து வளர்த்துப் பரம்பொருளைக் காட்டும் அமைதியாழ்ந்த கொல்லிமலையின் அடிவாரத்தில் நின்றுகொண்டிருந்தார். இவர் யாரை எதிர்ப்பார்த்து நின்றாரோ அந்த ஞானி கொஞ்ச நேரத்தில் வந்து சேர்ந்தார். அவதூதர் உலகத்தைத் துறந்து வந்திருக்கும் ஆத்மாவை நோக்கி, "பசிக்கிறுள்போலிருக்கிறது" என்றார். குருநாதனின் பசியும், தாகமும் புலனை யொடுக்கிக்கொண் டிருந்தன. நாவறண்டு பேசக்கூட முடியவில்லை. அவதூதர் அருகில் நின்ற ஒரு செடியிலிருந்து இரண்டு மூன்று காய்களைப் பறித்துக் கொடுத்தார். முசுமுசுக் காயைப் போன்றிருந்த அதை மென்றதும்,குருநாதனுக்கு விருந்துண்டதுபோ லிருந்தது. முகத்தில் மலர்ச்சி ஏற்பட்டது. சற்று நேரம் ஆனதும் ஞானி, "அப்பா உனக்குக் குடும்பப் பற்று இன்னுமிருக்கிறது. பூர்ணமான வைராக்ய மில்லாமல் சன்யாஸத்திலே பயனில்லை. நீ போ இன்னொரு சமயம் பார்த்துக்கொள்ளலாம்! ஆனல் ஒன்றுடி விஷயம் ரொம்பக் கொடிது. மனிதனை வேரொரு வீழ்த்திவிடும். உலகம் முழுவதையும் மயக்கும் தேக சௌந்தரியம் கூட எலும்புக் கூட்டைச் சுற்றி வளர்ந்ததுதான். ஆதலால் சிற்றின்பத்தில் எக்காரணத்தைக் கொண்டும் வீழ்ந்துவிடக் கூடாது. உறுதிவேண்டும்"— என்று கூறினர். இதுதான் ஞானி மொழிந்ததின் சுருக்கம். குருநாதன் இரண்டு மூன்று நாள் தங்கி, குழந்தை போல் திரியும் ஞானியின் சாந்நியிலும், அழகு பொங்கும் கொல்லி யிறைத்த சாந்நியிலும் லயித்திருந்தார். பிறகு ஞானி உத்தரவளிக்கவே, ஊருக்கு வந்து மீட்டும் பழைய வீட்டிற்குள் பழைய நாற்காலியில் வந்து சாய்ந்தார்.

இன்னெரு சம்பவம், பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. 1929-அல்லது 30-ல் இருக்கலாம். நான் தஞ்சை காமாக்ஷியம்மன் கோயிலுக்குப் பின்னுள்ள தெருவில் வசித்து வந்தேன். ஒருநாள் மாலை வெளியில் போய், கோயில் வழியாகத் திரும்பிக்கொண் டிருக்கையில் அப்படியே திகைத்து நின்றுவிட்டேன். குருநாதன் ஒரு தூணடியில் அமர்ந்திருந்தார். முகம் கலங்கி யோசனையிலிருந்தது. இப்படிக் குருநாதன் பலர் நடமாடும் இடத்திலே, உட்காரும் வழக்கமேயில்லை. தஞ்சை காமாக்ஷியம்மன் கோயிலில் பரதேசி யுறங்கும் தூணடியில், குடந்தையிலிருந்து வந்து உட்கார்ந்திருப்பானேன், நேரே என் வீட்டிற்கு வராமல்! எனக்குப் பிரமிப்பாக இருந்தது. 'என்ன இது?' என்றேன். 'த்ஸ, நீயா' என்றார். வழக்கமாகத் தவழும் புன்னகை உதட்டில் தவழ்ந்தது. வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனேன்.

இரண்டு, மூன்று நாட்கள் ஆகிவிட்டன. குருநாதன் வந்த விஷயத்தைச் சொல்லவில்லை. காசிக்குப் போனேன் காவடி கொண்டு வந்தேன், என்று வெட்டொன்று துண்டிரண்டாகச் காரியத்தைச் சொல்லிமுடிக்கும் இயல்புடையவர் ஐந்தாறு நாளாகியும் ஒன்றும் சொல்லவில்லை. பேசாம லிருந்துவிட்டேன். மாலையில் நான் கதை சொல்லப் போகும் நேரம் நெருங்கிற்று. என்னமோ நினைத்துக்கொண்டு, "நான் நேற்றுச் சொன்ன கதையைத் தொடர்ந்து மேலே தாங்கள் சொல்லவேண்டும்" என்று கேட்டேன். சரி என்றுவிட்டார். அன்றிரவு நானமரும்பலகையி லமர்ந்து குருநாதன் பிரவசனம் செய்தார். இது ஒரு அபூர்வமான சிஷ்ய வாத்ஸல்யம், சீடர்கள்பால்

உள்ள அன்பு எவ்வளவு பெரிதாக இருப்பினும், இவ்வளவு சரளமாக, அதியாக ஒருஆசிரியனும் இவ் வுலகில் செய்கையில் அதைக் காட்டமாட்டான். ஆதலால் உலகத்தில் நான் முதல் தரமான பாக்யம் பெற்ற சிடன் என்று நியாயமாக இறுமாப் படையலாம். அன்றிரவு நான் தூங்கவில்லை. ஆசார்யனின் சரளபுத்தியை நினைத்தும் வியப்பிலும் ஆனந்தத்திலும் ஊசலாடினேன். மனத்திற்குள்ளே சிரித்துக் கொண் டிருந்தேன்.

மறுநாட் காலையில் ஒரு கடிதம் வந்தது. "நாலைந்து நாளாக அப்பாவைக் காணேம். ஸ்வாமிகளுக்குத் (காம கோடி பீடம்) தந்தி கொடுத்திருக்கிறேன். இன்னும் பல தெரிந்த இடங்களுக் கெல்லாம் தந்தி போயிருக்கிறது. எங்குமில்லை" என்று புதல்வன் எழுதியிருந்தான்.

"என்ன இது?" என்றேன்.

"ஒன்றுமில்லை. என்னமோ நினைத்துக் கொண்டேன். இங்கு வராமல் எங்குப் போவது"? என்று குருநாதன் புன்னகை பூத்தார்.

சரி, வைராக்யப் பற்று என்று தெரிந்து கொண்டேன். என் மகிழ்ச்சி பன்மடங்காயிற்று. கடைசியில், என் வீட்டில் வந்து இந்த ஆத்மா தங்கிற்றே என்று வெகுநாள்வரை, "அந்தச்சமயம், உங்கள் அகத்தில் வந்திருந்தார்களாமே சாஸ்திரிகள்" என்று பலர் கேட்டுக்கொண் டிருந்தார்கள்.

வளரும் குடும்பத்திற் கிடையே இந்த வைராக்யமும் வளர்ந்துகொண் டிருந்தது.

குருநாதனின் பெருமையை யறிந்து சர்க்கார், 1935 ஜனவரியில் மகா மகோபாத்யாயப் பட்டத்தை யளித்தது, குருநாதன் இதை விரும்பவுமில்லை. வந்ததற்காக மகிழ்ச்சியு மெய்தவில்லை. பெயருக்கு ஒரு வால் வளர்ந்திருக்கிறது என்று தான் இருந்தார்கள். துறவிலே ஊறுவோருக்கு இதில் ஒரு பெருமையா?

குருநாதன் வாழ்வு துன்ப மில்லாமல் ஓடிக்கொண் டிருந்தது. ஆனல் கடைசி காலத்தில் ஒரு பெரிய அதிர்ச்சியில் தாக்குண்டார். மைந்தன் விச்வநாதனை வாழ்க்கையில் அறிவும் சக்திகளும் உச்சநிலையை யடையும் வயதிலே, காலன் வந்து வாரிப் போனன். அவன் இருபத்திரண்டாவது வயதில் ஒரு உயர்தரக் கலாசாலைக்குத் தலைமைப்பதவியைவகிக்க ஆரம்பித்தான். விசுவநாதனுக்குச் சங்கீதத்திலே அபாரமான ஞானம். தந்தை முன்னமர்ந்து பல நூல்களைப் பயின்றவன். உலக ஞானம் நிறைந்து, காரியங்களை நிர்வகிப்பதில் சூரன். பார்த்தவுடனேயே கௌரவ புத்தி யூட்டும் கண்கள். சதா சர்வ காலமும் வீரனின் புன் சிரிப்புப் பூத்த முகம். எவ்வளவு வைராக்கிய சாலியாக இருந்தாலும், இது போன்ற புதல்வன் போனல் எந்த நெஞ்சுதான் அறுபடாது? ராமன் காட்டுக் கேகினதும், தசரதன் சோகம் தாளாமல் உயிர்விட வில்லையா? தசரதனுக்கு வேதாந்தமா தெரியாது? குருநாதன் உள்ளம் சிதைந்தது. வாழ்வும் குன்றிவிட்டது. "விசுவநாதன்போய் விட்டான். நான் இன்னும் இருக்கிறேன்" என்றுசொல்லிக்கொண்டே ஹோவென்று வாய் விட்டுக் கதறிவிடுவார். அவனை நினைத்து நினைத்து, உயிர் தேய்ந்துவிட்டது.

வாழ்க்கையின் கடைசி வாரத்தில், தாங்க முடியாத உபாதைக்கும் வலிக்கும் இடையில் ஓயாமல் பராசக்தியின் நினைவு தான் குருநாதனுக்கு. ஆனல் நடு நடுவே "ஒரு பிள்ளையாகப் பிறந்து அன்னைக்கு முன் போகிறேமே" என்று துயர்ப்பட்டது கொஞ்ச நஞ்சமில்லை. இதேவிதமான அன்னையைப் பற்றிய கவலை இருபது முப்பது ஆண்டுகளுக்குமுன் வந்தது. மன்னர் குடியிலிருக்கும் போது குரு நாதனுக்கு வைசூரி கண்டது. ஒரு நாள் கூடத்தில் எழுந்து நடந்துகொண்டி ருந்தார். ஒரு மூலையில் அன்னை உட்கார்ந்திருந்தாள். திடீரென்று வைசூரியில் வழக்கமாகவரும் சேஷ்டை வந்து விட்டது. கிறு கிறு வென்று தலைசுற்றி 'மடே'ரென்று கீழே விழுந்தார் குருநாதன். உடனே அன்னை தூக்கிவைத்து ஆச்வாசப்படுத்திவிட்டு, உள்ளே யோடி சுவரில் தொங்கும் மாமனரின் (ராஜு சாஸ்திரிகள்) சித்திரத்

தின் கீழ் நின்று பிரார்த்தித்தாள். குருநாதனுக்குச் சுய நினைவு வந்ததும் அன்னையின் உள்ளம் ஆறுதல் பெற்றது. பெரியாரின் அருளில் அன்னைக்கு அவ்வளவு நம்பிக்கை, மறுநாள் நான் போயிருந்தேன். குருநாதன் தான் கீழே விழுந்ததைச்சொல்லிவிட்டு அப்பொழுது என்னுயிரைப்பற்றிய கவலையே யில்லை எனக்கு அம்மாவுக்குக் கிரியை செய்யாமல் போகிறோமே என்று துயர்ப்பட்டேன்'' என்றார் கண்ணீர் வடிந்தது. மரணம் நெருங்கும் போதுகூடத்தன்னைமறந்து தாயைப்பற்றி ஆத்மாவில் எவ்வளவு கபடமற்ற அன்பும் கவலையும்! ஆனால் குருநாதனின் மனோரதங்களின் மீது விதி இடியைத் தள்ளிற்று. அன்னைக்கு முன்னேயே சென்றுவிட்டார். ஆனால் அவரின் குழந்தைமனது "ஜகன்மாதா, அன்னையின்வருங்காலத்தை உன்னிடம் ஒப்பிக்கிறேன் மறுபிறப்பு இருக்கக்கூடாது அன்னைக்கு'' என்று பராசக்தியிடம் முறையிட்டிருக்கும்.

காலன் வருவது குருநாதனுக்குத் தெரிந்துவிட்டது. எனக்குக் கடிதம் எழுதச் சொல்லியிருந்தார்கள். 39, அக்டோபரில் மைசூருக்குப் போனதையும், அரசர் ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையாரவர்களால் சம்மானிக்கப் பெற்றதையும் பற்றி முன் கடிதத்தில் எழுதியிருந்தார்கள். திடீரென்று இந்தக் கடிதம் வந்ததும். குடந்தைக்கு ஓடினேன். உயிரை உறிஞ்சுவதற்குப் பொட்டிலே குருநாதனுக்கு ஒரு சிரங்கு வந்திருந்தது. ஆவி நீப்பதற்கு முதல் நாள் பக்கலில் நாங்கள் உட்கார்ந்திருந்தோம். அப்பொழுது தமக்கு ஏதேனும் நேரிடுமென்று தோன்றினால் குருநாதன், உபநிஷத்துக்களைச் சொல்லச் சொல்லியிருப்பதாக அவர் பத்தினியார் கூறினார். ஈசாவாஸ்ய உபநிஷத்தைச் சொன்னேன். थास्मिन्त्सकीणि भूतान्यात्मै वा भून्त्विजानतः ॥ तत्नकोमोहः कः शोक एकत्वमनुपद्दश्यतः என்ற இடம் வந்ததும் குருநாதன் விழிப்பதைப்பார்த்து விட்டு, அருகிலிருந்த பாங்க் மகாலிங்கையர், அதையே திருப்பித்திருப்பிச் சொல்லச் சொன்னார். அதைப் பல தடவை ஆவிருத்தி செய்தேன்,

மறுநாள்—1940—பிப்ரவரி, ஆறாம் தேதி மாலையில் சுடர்விட்டெரிந்த ஆத்மா சாந்தி பெற்றது.

குருநாதன் இனிய கீர்த்தனங்களோடு மட்டுமின்றி, இன்னும் பல கிரந்தங்களை இயற்றி யிருக்கிறார். தியாகராஜ விஜயம் என்பது பாட்டனாரின் வாழ்க்கைச் சரித்திரம், ஒரு சம்பூ பாடுகிறாற்போல் சொல்விழுந்திருக்கிறது. வட மொழியுலகில் இன்னும் பிரபல்ய மடையாவிட்டாலும் ஒருண்மையான வாழ்க்கைச் சித்திரத்தின் லக்ஷணங்கள் யாவும் நிறைந்து ரஸமாக எழுதப் பெற்றிருக்கும் நூல் வடமொழியில் பூத சாஸ்திரம் (Physics) எழுதியிருக்கிறார். சென்னை ராஜதானிக் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக இருந்து ஒய்வெடுத்துக்கொண்ட ஸ்ரீ எம். ஆர். ராஜகோபாலய்யங்காரின் பேருதவியால் எழுதப்பெற்றது. அது இன்னும் அச்சுக்கு வரவில்லை. அதன் பெயர் "சித்தாந்த கல்பவல்லி.''

# தவக்காலம்

[ஸ்ரீமதி சேது அம்மாள்]

கோழி கூவிற்று; உஷை அருணனிடம் உத்தரவு பெற்றாள். பவித்திரமான பொன் ஒளியுடன், ரவி உலக யாத்திரைக்குப் புறப்பட்டான்; ஜீவராசிகளனைத்தையும் ஒளி மைந்தராக்கப் போகும் மகிழ்வுடன் பவனி புறப்பட்டான்!

முதலில் அவனுக்கு நேர்நின்று வரவேற்றன உயர்ந்தோங்கும் விருக்ஷ சிகரங்கள்! புது மலர்களுடனும், பசுந் தளிர்களுடனும் கூடி அவனுடைய தேஜஸால் பொலிந்தன.

அடுத்தாற் போல, உலக மாயைகளை—பொய் புரட்டுகளை அறியாத பக்ஷிகளின் ஆரவாரம்! அவைகள் குதூஹலக்குரலிலே கட்டியம் கூறிக் கதிரவனைத் துதித்து முகமன் கூறின!

அவனுக்கு மகிழ் வுண்டாயிற்று. தன் இளங் கதிர்களால் உலகை அணைத்து அழகு செய்து பார்த்துக்கொண்டே வந்தான்......

மூன்றாவதாகத் தென்பட்டது மானிட வர்க்கம். பார்த்தான். ஞாயிற்றையும் மறந்து, பித்தலாட்டப் பதுமைகளாக உலவும் மக்களைக் கண்ணாரக் கண்டான். ஞாயிறின் மனத்திலே கனல் மூண்டது. க்ஷணத்திலே தாங்க முடியாத உக்கிரத்தினால் அவனுடலி லிருந்து ஜ்வாலைகள் கிளம்பிப் பாய்ந்தன. நெருப்புச் சலாகைகளால் மானிடச் சாதியைப் பொசுக்கத் துணிந்துவிட்டான்! அந்தோ! எளிய பிராணிகள் தாபம் பொறுக்க மாட்டாமல், இரைகூடத் தேடாமல் பொந்துகளில் சென்று பதுங்கின! மானிடச் சாதியே தவித்தது! உலகத்தைப் புடம் போட்டுக்கொண்டே சென்றான் கதிரவன்.

மனிதச் சுவடு படாத ஒரு காட்டு வெளியிலே, சோலைகளால் சூழப்பட்ட ஒரு பொய்கை. அதிலே பிறந்து வளர்ந்து பருவமான ஒரு குமரி! பெரிய துணைகள் போலப்பெரிய இலைகள், சிறிய தோழிகள் போலச் சின்னஞ் சிறு மொட்டுகள், நடுவிலே அந்த அதிசய ரூபவதியான 'தாமரைப்' பெண் தவமிருக்கக்கண்டான்.

அப்படியே அசையாது நிற்கும் தனது நெருப்புக் கதிர்கள் அவளைத் தீய்க்கவில்லையா? என்ன ஆச்சரியம்! உஷ்ணமேற்ற ஏற்ற, நிமிர்ந்து மலர்ந்து பற்கள் சிறிது பளிச்சிட்டு மின்ன, விண்ணொளியிலே, "தேவ, வணங்குகிறேன்" என்று நகைத்தாள்.

அந்தத் தாமரையாளின் தேன் குரல் ஒரு அமிருததாரை பெய்தது போலிருந்தது அவன் வெம்மைக்கு! ரவி உடனே உக்கிரம் தணிந்த குரலிலே, "பெண்ணே, என் கிரணங்கள் உன் அங்கங்களில் சூடேற்றவில்லையா?" என்று வினவினான்.

"அதெப்படி பிரபோ? இரவுதோறும், ஏன்—அனவரதமும் கண்கள் மூடித் தவம் செய்து பெற்ற பேறல்லவா! உவகை யூட்டுகின்றன உம் கதிர்கள்!" எனச் சொன்னாள் செல்வி.

"தவம்—கமலே, தவம்செய்து என்னிடம் என்ன யாசிக்கிறாய்?" என்று அவன் ஆதுரத்தோடு மெல்லக்கேட்டான்.

அப்போது அவள் முகமும் அங்கங்களும் சிவந்தன.

"அன்ப! நித்திய பவனியை! வேறு ஒன்றுமில்லை" என்று விடை தந்தாள் அவள் விண்ணொளியானுக்கு.

புறப்பட்டான்......"ரூபஸி, பூவாணியரின் புலைக் கண்களுக்கு அகப்படாத மானினி, வருவேன்" என்று நகர, "மாசகற்றும் மன்னவ!" என வாழ்த்தி வணங்கினாள் தாமரை.

எட்டச் சென்று, அஸ்தாசலத்திலே நின்று பார்த்தான் அவளுடைய நாதன். அவனுடைய மின்கரங்கள் தன்னைவிட்டு நழுவுவதை அறிந்தாள் தாமரை. முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டாள்.

இருளிரவு தாமரையின் தவக் காலம்!

# கண்ணன்—அவள் காதலன்

[எஸ். ஸோமாஸ்கந்தன்]

அவள் எப்படிப்பட்டவனிடம் காதல் கொண்டுவிட்டாள்? சாதாரணமான மனிதனிடமா? இல்லை. பாண்டவர் சகாயனுன கிருஷ்ண பகவானிடமல்லவா மனம் வைத்துவிட்டாள்! கபடநாடக சூத்ரதாரியல்லவா அவன்? அவன் எத்தனை கோபிகா ஸ்திரீகளை ஏமாற்றியிருக்கிறுன்? எத்தனை ஸ்திரீகள் அவனிடம் மனத்தைப் பறிகொடுத்திருக்கின்றனர்? எத்தனை யுவதிகளின் மனத்தைக் கவர்ந்திருக்கிறுன் அந்தக் கண்ணன்?

அந்தக் கண்ணன் இவளையும் மயக்கிவிட்டான். அவளை மயக்கியது மல்லாமல் பரவச மடையும்படியும் செய்துவிட்டான். முதலில் கண்ணனைச் சந்தித்ததும் உடல் புளகமுற மெய்ம் மறதியையடைந்துவிட்டாள். ஆம். மாயவனல்லவா கண்ணன்! கண்களைப் பறிக்கும் கண்ணனின் அழகைக் கண்டு அவள் உணர்வழிந்து நின்றது எப்படி அதிசயமாகும்? கண்ணனிடம், பிறரை மயக்கும் லாகிரி போன்ற வசிகரிக்கும் தன்மையிருக்கிறதல்லவா?

கண்ணன் அவளைக் கண்டதும் என்ன செய்தான்? ரதியைப் பழிக்கும் அழகு படைத்த அவளைப் புன்னகை தவழும் முகத்துடன் பார்த்து—

"சோலை மலரொளியோ—உனது
சுந்தரப் புன்னகைதான்?
நீலக் கடலலையே—உனது
நெஞ்சி லலைகளடி"—

என்று ஆனந்த பரவசமாகிக் கூறுகிறுன். அவளது அழகிய புன்முறுவலுக்குப் பூஞ்சோலையில் மலர்ந்து அழகுடன் விளங்கும் மலர்களைக் கண்ணன் உவமையாகக் கூறுகிறுன். அவள் ஹிருதய ஆழத்தில் தோன்றும் எண்ண அலைகளைப் பார்க்க முடியாவிட்டாலும் கண்ணன் தெரிந்துகொண்டு விடுகிறுன். இல்லாவிட்டால் நீலக்கடலில் வீசும் அலைகளை அவள் நெஞ்சில் வீசும் அலைகளுக்கு உவமையாகக் கூறுவானு?

இத்துடன் நின்று விட்டானு கண்ணன்? இல்லை. அவளிடம்—அவளைக் கண்டவுடன் ஏற்பட்ட அளவு கடந்த பிரேமையினுல்

"மூத்தவர் சம்மதியில்—வதுவை
முறைகள் பின்பு செய்வோம்
காத்திருப் பேனுடி—இதுபார்
கன்னத்து முத்தமொன்று"—

என்று வெட்கத்தை விட்டுக் கூறிவிடுகிறுன்; தன் உள்ளத்தை அவளுக்கு நன்ருய்த் திறந்து காட்டிவிடுகிறுன். கண்ணனுக் கிருக்கும் அவசரத்தைப் பாருங்கள்! விவாகத்தை, முறைப்படிப் பெரியோர்களின் சம்மதம் பெற்று—பிறகு பார்த்துக் கொள்ளலாம்—என்கிறுன்.

இவ்வளவுதூரம் பேசி உறவு கொண்டாடிய கண்ணன் அவளைவிட்டுப் பிரிந்துவிட்டால் அது அவளுக்கு வருத்தத்தைத் தாராதா? அவனை நினைத்து நினைத்து ஏங்க வாரம்பித்துவிட்டாள் அவள். பார்க்கும் இடந்தோறும் கண்ணனுருவம் தெரிகிறது அவளுக்கு! கண்ணனுக்கு இது விளையாட்டா யிருக்கிறது. தன்னைப் பிரிந்த துயரம் தாங்காமல் அந்தப் பூங்கொடி வருந்துவதைக் காண்பதில் கண்ணனுக்கு ஒரு தனி இன்பம்! மறைந்து மறைந்து தோன்றி அவளைப் பிரமிக்க வைத்துவிட்டான். கண்ணனைப் பிரிந்து நிற்கும் அவளுக்குச் செய்வ தின்னதென்று தோன்றவில்லை. தோழியிடம்—

"வெண்கல வாணிகரின் வீதிமுனையில்
வேலிப் புறத்திலெனைக் காணடி யென்றுன்"

என்கிறுள். அவள் அங்கு ஓடிச் சென்று பார்த்தாள். ஆனுல் அந்தக் கள்ளக் கண்ணன் அங்கு வராமல் ஏமாற்றிவிட்டான்.

"கண்க ளுறங்கலெனுங் காரியமுண்டோ!
கண்ணனைக் கையிரண்டும் கட்டலின்றியே!"

கண்ணனைப் பிடித்துக் கட்டிப் போடவேண்டு மென்கிறுள் அவள். அதைச் செய்யாமல் தூங்கமாட்டாளாம்! முற்றத்

துறந்த முனிவர்களும் யோகிகளும் எவ்வளவோ பாடுபட்டும் கண்ணனைக் கட்ட முடியாமல் தவிக்கின்றனர். அப்படிப்பட்ட கண்ணனா அவளிடம் கட்டுப்படுவான்? தோழியினிடம் அவள் கூறுவதைக் கேளுங்கள்!

"கண்ணன் மனநிலையைத் தங்கமே தங்கம்—அடி
கண்டுவர வேணுமடி தங்கமே தங்கம்.
எண்ணமுரைத்து விடில் தங்கமே தங்கம்—பின்னர்
எதெனிலுஞ் செய்வமடி தங்கமே தங்கம்—"

தோழியினிடம் கண்ணனுடைய மனக் கருத்தைத்தெரிந்து கொண்டு வரவேண்டுமென்கிறாள். கண்ணன் தன் மனத்திலிருக்கும் எண்ணத்தை உரைத்து விட்டானால் பிறகு செய்ய வேண்டியதைச் செய்வோமென்கிறாள் அவள். எதையும் அவள் அவசரப்பட்டுச் செய்ய விரும்பவில்லை.

"சொன்ன மொழிதவறு மன்னவனுக்கே—எங்கும்
தோழமை யில்லையடி தங்கமே தங்கம்
என்ன பிழைகளிங்கு கண்டிருக்கின்றான்?—அவை
யாவுந் தெளிவுபெறக் கேட்டு விடடீ"

என்று கூறி வருந்துகிறாள் தோழியினிடம். வெண்கலவாணிகரின் வீதி முனையிலிருக்கும் வேலிப் புறத்தில் தன்னைக் காணும்படி கண்ணன் கூறினானல்லவா? காதலி கண்ணன் வார்த்தையை நம்பி அவ்விடத்திற்குச் சென்று காத்திருந்தும் அவன் வராமல் ஏமாற்றி விட்டானல்லா? சொன்ன சொல் தவறுவது பெரிய தவறல்லவா? சொன்ன சொல் தவறுபவரிடம் யாரும் நட்புக்கொள்ள மாட்டார்கள் என்கிறாள் காதலி. கண்ணனும் சொன்ன சொல் தவறினவன் தானே? அந்தக் கண்ணனிடம் கொண்டிருக்கும் நட்பை அவளால் மாற்ற முடியவில்லை. அவள் மனத்தைக் கவர்ந்துவிட்டானல்லவா அவன்? எப்படி அவளால் அந்தத் தோழமையை மாற்றமுடியும்?

"மையல் கொடுத்துவிட்டுத் தங்கமே தங்கம்—தலை
மறைந்து திரிபவர்க்கு மானமுமுண்டோ?"

என்று அவள், கண்ணன் தனக்கு மையல் கொடுத்துவிட்டுச் சென்றதைக் கூறிப் புலம்புகிறாள். தன் திவ்ய ரூப சௌந்தரியத்தினால் கண்ணன் அவள் ஹிருதயத்தை யல்லவோ கொள்ளை கொண்டு விட்டான்! இப்பொழுது இவளிடம் வாராமல் மறைந்து திரிகிறானே! இது மானமுடையவர் செய்கையா? காதலிக்கு இது வருத்தத்தைத்தானே கொடுக்கும்? கண்ணனைப் பொய்யையே உருவமாகக் கொண்டவனென்று இகழ்கிறாள் அவள்.

மையல் கொடுத்து விட்டுத் தலை மறைந்து திரியும் கண்ணனிடம் காதலிக்குக் கோபமுண்டானாலும் அவனிடம் கொண்டுள்ள காதல் அந்தக் கோபத்தை ஓங்கவொட்டாமல் தணிக்கிறது. ஆற்றங் கரையில் முன்பு ஒருநாள் கண்ணன் அவளை யழைத்துத் தனியிடத்திற் பேசியதெல்லாம் அவள் மனக்கண் முன்தோன்றி அவளுக்குத் தீராத வேதனையைத் தருகின்றன. தணிந்த கோபம், கண்ணனைக் காணாமையால் மறுபடியும் அதிகமாகிறது. தோழியை யழைத்துக் கண்ணனிடம் தூதாகப் போகும்படி சொல்லுகிறாள். கண்ணன்தான் அவளை மறந்துவிட்டானே! உண்மையில் அவளிடம் அன்புடையவனா யிருந்தால் அவளை இப்படி அல்லலுறச் செய்வானா? கண்ணன் வாராவிட்டால் போகிறான் என்று நினைத்து அவளால் சும்மா இருக்க முடியவில்லை. கண்ணன் தான் அவளுடைய ஹிருதயத்தை விட்டகலவில்லையே! எப்படி அவனை மறக்க முடியும்?

"ஆற்றங்கரை யதனில் முன்னமொருநாள்—எனை
அழைத்துத் தனியிடத்திற் பேசியதெல்லாம்
தூற்றி நகர் முரசு சாற்றுவனென்றே
சொல்லி வருவையடி தங்கமே—தங்கம்"

ஆற்றங் கரையில் அவளைக் கண்டு தனியிடத்துக்கு அழைத்துச் சென்று கண்ணன் பேசிய பேச்சுக்களை ஊர் முழுதும் அறியும்படி தூற்றிவிடுவேன் என்று கண்ணனிடம் சென்று தைரியமாய்ச் சொல்லிவிட்டு வரும்படி தோழியினிடம்

கூறுகிறாள் அவள். இன்னும் அவள் கூறுவதைக் கேளுங்கள்!

"சோர மிழைத்திடையர் பெண்களுடனே—
அவன்
சூழ்ச்சித் திறமை பல காட்டுவ தெல்லாம்
வீரமறக்குலத்து மாதரிடத்தே
வேண்டிய தில்லையென்று சொல்லிவிடடி"

கண்ணன் இடைப் பெண்களுடன் கள்ளக் காதல் பூண்டு அநேக சூழ்ச்சிகள் செய்ததெல்லாம் அவள் மனக்கண் முன் தோன்றி அவளுக்குக் கோபத்தை யுண்டாக்குகின்றன. அதனால் அந்தச் சூழ்ச்சி வீரக் குலத்துதித்த பெண்களிடம் செல்லாது என்று கூறுகிறாள். வீரக் குலமாகிய அரச பரம்பரையில் தோன்றிய அவளுக்குக் கண்ணனுடைய இந்தச் செய்கை கோபத்தைத்தானே தரும்?

காதலிக்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் கோபம் தணிந்து சாந்தமுண்டாகிறது.

"பெண்ணென்று பூமிதனில் பிறந்து
விட்டால்—மிகப்
பீழை யிருக்குதடி தங்கமே தங்கம்
பண்ணென்று வேய்ங் குழலில் ஊதி
வந்திட்டான்—அதைப்
பற்றி மறக்குதில்லை பஞ்சை யுள்ளமே—"

என்று அவள் தன்னையே நொந்து கொள்கிறாள். வேய்ங் குழலை ஊதி எல்லோரையும் மயக்கும் அந்தக் கண்ணனை அவளால் மறக்க முடியவில்லையாம். என்ன செய்வாள் அவள்! அவள் அந்தக் கண்ணனையே நினைத்தல்லவா உருகிக்கொண்டிருக்கிறாள்.

"நேர முழுதிலுமப்பாவி தன்னையே—
உள்ளம்
நினைத்து மறுகுதடி தங்கமே தங்கம்
தீர ஒரு சொலின்று கேட்டு வந்திட்டால்—
பின்பு
தெய்வ மிருக்குதடி தங்கமே தங்கம்—"

கண்ணனைப் பிரிந்த சோகம் அவளை மறுபடியும் தாக்கிக் கோப முண்டாக்குகிறது. நாள் முழுவதும்—நேர முழுவதும்—அவனையே நினைத்து அவள் மனம் வாடுகிறதாம்! கோப மிகுதியில் தன் காதலனாகிய கண்ணனைப் பாவி என்று திட்டுகிறாள். இப்படி அவனைத் திட்டுகிற படியினால் கண்ணனிடம் அவளுக்கு உண்மையான காதல் இல்லை யென்று சொல்ல முடியுமா? அப்படி அவளுக்குக் கண்ணனிடம் அன்பில்லாவிட்டால் இப்பொழுது அவனையே நினைத்து உருகுவாளா? "அந்தக் கண்ணனை நிச்சயமாய் ஒரு வார்த்தை கேட்டு விட்டு வந்துவிடு", என்கிறாள் தோழியை. பிறகு தெய்வம் இருக்கிறது. பார்த்துக்கொள்ளலாம் என்கிறாள்.

மகா கவியாகிய பாரதியார் இந்த ஒரு சம்பவத்தை எவ்வளவு அழகாகத் தமது கவிதையில் சித்திரம்போல் தெளிவாகக் காட்டியிருக்கிறார்! தம்மைக் காதலியாகவும் கண்ணனைக் காதலனாகவும் பாவித்து நமது கவிஞர் பெருமான் எவ்வளவு உணர்ச்சியுடன் இச் சம்பவத்தைக் கூறுகிறார்! அவருக்கு அந்தக் கண்ணனிடம் அன்பு இல்லை யென்றால் இந்த அழகிய கவிதைச் சித்திரம் தோன்றுமா? கண்ணனிடம் தாம் கொண்டுள்ள-கள்ள மில்லாக் காதலை-மட்டற்ற அன்பை-தீவிர பக்தியை பாரதியார் மிகவும் தெளிவாக வெளிப் படுத்திவிட்டார்.

---

# முன்னேற்றத்தில் முன்னணி!

பிணை

பாதுகாப்பு

துரிதமான பட்டுவாடா

முழு திருப்தி

ஆகியவைகளுக்கு

உங்கள் ஆயுளையும் மோட்டாரையும் வான்கார்டில் இன்ஷ்யூர் செய்யுங்கள்.

**தி வான்கார்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி**

**லிமிடெட்**

மவுண்ட் ரோட், சென்னை

போன்: 8558 தந்திவிலாசம்:— "வான்கார்ட்"

# "மெடிகோ" பாம்

இந்த மருந்து காலஞ் சென்ற டாக்டர் போஸிங்கர் என்பவரின் முறையை அநுசரித்துத் தயாரிக்கப்பட்டது. இதை அநேக டாக்டர்களும் யுனானி ஹக்கிம்களும் மற்றும் பலரும் பரீக்ஷித்து மிகவும் சிலாகித்துக் கூறி யிருக்கின்றனர். இதற்கு ஈடு வேறு ஒன்றும் கிடையாது. உங்கள் நோயை இது சீக்கிரமாகப்போக்கிவிடுமென்பது திண்ணம். ஒருமுறை பரீக்ஷித்தால் மறுமுறை வாங்குவீர்கள். இது தலைவலி, சுளுக்கு, கீல்வாதம், விஷக்கடி முதலிய சகல வியாதிகளையும் ஒரு நொடியில் போக்கும்.




தயாரிப்பவர்கள்:—

**தி ஜூபிடர் ஸ்பெசிபிக் கம்பெனி**

18-A, முக்கர் நல்லமுத்து தெரு,

ஜி. டி., மதராஸ்.

(வெளியூர்களுக்கு ஏஜெண்டுகள் தேவை)

# உங்களுக்குத் தெரியுமா?

இந்திய அரசாங்கத்தில் பொருளாதார அட்வைஸராக இருக்கும் டாக்டர் டி. இ. க்ரேகரி அவர்களையும், லண்டனில் இந்திய வர்த்தகக் கமிஷனரா யிருக்கும் ஸர். டேவிட் மீக் அவர்களையும் இந்திய அரசாங்கத்தார் அமெரிக்கா தேசத்துக்கு அனுப்பியிருக்கின்றனர். அமெரிக்கா தேசத்து மார்க்கெட்டின் நிலைமையையும் விலை விவரங்களையும் ஆராய்வதற்காகத்தான் இவர்க ளிருவரும் அமெரிக்கா சென்றிருக்கின்றனர். இந்தியாவில் உற்பத்தியான சாமான்களைத் தற்போதைய யுத்தநிலைமையினால் எல்லாத் தேசங்களிலுமுள்ள மார்க்கெட்களிலும் விற்பனை செய்ய முடியவில்லை. டாக்டர் டி. இ. க்ரேகரி அவர்களும் ஸர். டேவிட்மீக் அவர்களும் இதைப்பற்றி யெழுதிய அறிக்கையைக் கீழே தந்திருக்கிறோம்.

யுத்தத்தின் காரணமாக இந்தியாவிலிருந்து ஐரோப்பாவிற்குச் செல்லும் முக்கியமான பண்டங்க ளெல்லாம் ஏற்றுமதியாவதில்லை. ஐரோப்பாவுக்கு இந்தியாவின் மொத்த ஏற்றுமதி 29-கோடி ரூபாயாகவும் நூற்றுக்குப் பதினேழு சதவிகிதமாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. கீழே தரப்பட்டிருக்கும் அட்டவணையில், ஐரோப்பா மார்க்கெட்டில் வியாபாரப் போக்குவரத்து குறைந்திருப்பதால் இந்தியாவிற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிற விவரத்தைத் தெரிவிக்கிறது. முக்கியமான அம்சங்கள்தான் இந்த அட்டவணையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கீழே காணும் பண்டங்களுட்பட, விலையதிகமில்லாத பண்டங்களும், வியாபாரத்தில் பெருத்த நஷ்டத்தை உண்டாக்கி யிருக்கின்றன. விசேஷமான நஷ்டம் உண்டானதற்குக் காரணம்—நார்வே, பெல்ஜியம், டென்மார்க், ஹாலந்து, பிரான்சு,— முதலிய தேசங்களில் இந்திய வியாபாரம் தடைப்பட்டிருப்பதுதான்.

ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி வியாபாரத்தில் இந்தியா அடைந்த நஷ்டம் 30-கோடி ரூபாய்க்குமேல் ஆகிறது. ஏற்றுமதியின் அளவும் விலை விவரமும் 1938-39-ல் ஹூ கணக்கைப் பார்த்தால் விவரம் விளங்கும்.


## BOOKS FOR ALL

| | Rs. | A. |
|---|---|---|
| 1. The Message of the Gita Edited by Anilbaran Roy. | 5 | 0 |
| 2. Songs from the Soul By Anilbaran Roy | 1 | 4 |
| **Works of Sri Aurobindo** | | |
| 3. Essays on the Gita 1st Series | 0 | 6 |
| 4. 2nd Series | 7 | 8 |
| 5. Kalidasa | | |
| 6. A System of National Education | 1 | 0 |
| 7. The Ideal of the Karmayogin | 1 | 8 |
| 8. The Renaissance in India | 1 | 4 |
| 9. The Life Divine (Just published Vol. 1) | 6 | 0 |

**Svetaranya Ashrama,**
12, Brindaban Street, Mylapore.

# அட்டவணை 1

## 1938-39ல் இந்தியாவிலிருந்து ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி

(எண்ணிக்கைகள் லக்ஷம் ரூபாய்)

| பண்டங்கள் | ஜெர்மனி | நீதர்லாந்து | பெல்ஜியம் | டென்மார்க் | நார்வே | ஸ்வீடன் | ஸோவியத் ஸோஷலிஸ்ட் ரிப்பப்ளிக் | பிரான்சு | ஸ்பெயின் | இத்தாலி | ஆஸ்ட்ரியா & ஹங்கேரி | ஸெக்கோ | போலந்து | | மொத்தத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எலும்புகள் (கைத்தொழிலுக் கேற்றவை) | — | — | 20 | — | — | — | — | 2 | — | — | — | — | — | | 22 |
| காப்பிக்கொட்டை | — | 2 | 4 | — | 8 | — | — | 12 | — | — | — | — | — | — | 26 |
| கயிறு திரிக்கும் நூல் etc | 14 | 8 | 4 | 1 | — | 1 | — | 4 | — | 3 | — | 1 | — | | 36 |
| கடுக்காய் | 4 | 2 | 1 | — | — | — | — | 2 | — | — | — | — | — | | 9 |
| பிரஷ் செய்யும் நார் | — | 2 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | 2 |
| முந்திரிப்பருப்பு | — | 3 | 2 | — | — | — | — | 2 | — | — | — | — | — | | 7 |
| கோதுமை | 42 | — | 7 | — | — | — | — | — | — | 7 | — | — | — | | 56 |
| பதனிடாத தோல் | 28 | 3 | 2 | — | 3 | 4 | — | 2 | — | 10 | — | 6 | 2 | | 60 |
| வெறும் தோல் | 12 | 6 | 3 | — | — | 4 | — | 22 | — | 3 | — | 8 | — | | 58 |
| பதனிட்ட வெள்ளாட்டுத் தோல் | — | — | — | — | — | — | — | 6 | — | — | — | — | — | | 6 |
| க்போக் | — | 1 | 1 | — | — | — | — | — | — | — | — | — | — | | 2 |
| அரக்கு | 12 | 4 | 1 | — | — | — | 1 | 3 | — | 1 | — | — | 1 | | 23 |
| எலும்பு எரு | — | — | 11 | — | — | — | — | 4 | — | — | — | — | — | | 15 |
| எலும்பு ஆகாரம் | — | — | 4 | — | — | — | — | — | — | — | — | — | — | | 4 |
| இரும்புக் கம்பி | 10 | 20 | — | — | — | — | — | — | — | — | — | — | — | | 30 |
| க்ரோமைட் உலோகம் | 2 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | | 2 |
| மாங்கனீஸ் உலோகம் | 1 | — | 3 | — | — | — | — | 18 | — | 16 | — | — | — | | 38 |
| அப்பிரகம் | 13 | 2 | — | — | — | — | — | 2 | — | 8 | — | — | — | | 25 |
| எலுமிச்சத் தைலம் | 1 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | | 1 |
| தாவர எண்ணெய் | 1 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | | 1 |
| எண்ணெய்ப் பிண்ணாக்குகள் | 54 | 18 | 22 | 11 | 6 | 12 | — | — | — | — | — | — | — | | 123 |
| மெழுகு | 3 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | | 3 |
| ரப்பர் | 13 | — | — | — | — | — | — | 1 | — | — | — | 6 | — | | 20 |
| ஆமணக்குக் கொட்டை | 1 | 4 | — | — | — | — | — | — | — | — | — | — | 1 | | 6 |
| நிலக்கடலை | 134 | 276 | 78 | 27 | 12 | 1 | — | 178 | — | 41 | — | 40 | — | | 797 |
| ஆளிவிரை | 15 | — | — | — | — | — | — | 12 | — | 1 | — | — | — | | 28 |
| எள் | — | 4 | 2 | — | — | — | — | 5 | — | — | — | — | — | | 11 |
| ஏலம் | 2 | — | — | 1 | 1 | 6 | — | — | — | — | — | — | — | | 12 |
| இஞ்சி | 1 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | | 1 |
| மிளகு | 1 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | | 1 |
| டீ | 10 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | | 10 |
| பருத்தி | 161 | 39 | 124 | 1 | — | 3 | — | 145 | 1 | 69 | 2 | 29 | 25 | | 599 |
| வீணான பருத்தி | 22 | — | 4 | 2 | — | 5 | — | 4 | — | 1 | — | — | — | | 38 |
| சணல் | 5 | — | 22 | 2 | — | 2 | — | 7 | — | — | — | 3 | — | | 41 |
| சணல்நார் | 254 | 25 | 96 | — | 2 | 13 | 36 | 150 | 20 | 92 | 5 | 39 | 12 | | 746 |
| சணல் கைத்தொழில் | 5 | 2 | 20 | — | 20 | 1 | — | 1 | — | — | — | — | — | | 50 |
| கம்பளி | 4 | — | 2 | — | 2 | — | — | — | — | — | — | — | — | | 6 |
| | | | | | | | | | | | | | | | 2,907 |

இந்தியாவிலிருந்து ஐக்கிய அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் முக்கியமான பண்டங்களைப் பற்றிய விவரத்தைக் கிழேகாணும் அட்டவணை தெரிவிக்கிறது.

## அட்டவணை 2

| பண்டங்கள் | 1934-35௵த்திலிருந்து 1938-39௵ வரையில் சராசரி மதிப்பு (லக்ஷம் ரூபாய்) | | | |
|---|---|---|---|---|
| ஐக்ய அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் எல்லாப் பண்டங்களுடைய முழு மதிப்பு | 15,93 | | | |
| சணல் (கைத்தொழிலுக்கேற்றது) | 7,64 | 48· 0 | % | மொத்தத் |
| சணல் நார் | 1,25 | 7·9 ,, | ,, | தொகைக்கு |
| பதனிடாத வெள்ளாட்டுத் தோல் | 1,47 | 9·2 ,, | ,, | ,, |
| முந்திரிப்பருப்பு | 1,09 | 6·9 ,, | ,, | ,, |
| அரக்கு | 72 | 4·5 ,, | ,, | ,, |
| பருத்தி | 55 | 3·5 ,, | ,, | ,, |
| கம்பளி | 48 | 3·0 ,, | ,, | ,, |
| டீ | 42 | 2·6 ,, | ,, | ,, |
| இந்த ஏற்றுமதியின் மொத்தத் தொகை | 13,62 | 85·6 ,, | ,, | ,, |

அப்பிரகம், ரப்பர், கம்பளி விரிப்புகள், பதனிடும் சாமான்கள், நிலக்கடலை, பருத்தி, தோல், விளையாட்டுக் கருவிகள், கயிறுகள், டீ, சந்தனக் கட்டை, இரும்புக் கம்பிகள், எண்ணெய்கள், அரிசி முதலிய சாமான்கள் இந்தியாவிலிருந்து ஐக்ய அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் சாமான்கள்.




# வெறும் பதர்

[பெ. நா. அப்புஸ்வாமி பி. ஏ. பி. எல்.]

ஓர் ஊரில் ஓர் ஏழைக் குடியானவன் தன்னுடைய நிலத்திற்கு வேலி கட்டி, அதை நன்றாக உழுது, உரமிட்டு, விதைத்து, களைகொத்திப் பயிரிட்டு வந்தான். பயிர் முளைத்துச் செழித்து வளர்ந்திருந்தது. கொத்துக் கொத்தாகக் கதிர் விட்டிருந்தது.

சாயங்காலம் வரை ஒருநாள் அவன் வயலில் வேலை செய்துவிட்டு வீட்டுக்குப் போனான். மறுநாள் காலையில் வயலை வந்து பார்க்கவே சில இடங்களில் பயிர் மடிந்து கிடந்தது; சில இடங்களில் கதிர்கள் கொய்து தின்னப்பட்டிருந்தன. வேலியைச் சுற்றிப் பார்த்தான். ஓர் இடத்திலாவது வேலி முறிபடவில்லை. ஆச்சரியமடைந்து, வயலினுள்ளே ஏதாவது மாட்டின் காலடி தெரிகிறதா என்று பார்த்தான். மாட்டின் அடிச்சுவடு ஓர் இடத்திலும் காணப்படவில்லை. அங்கே அங்கே உரலைப் பூமியில் அழுத்தின மாதிரி வட்டமான பெரிய சுவடுகள் காணப்பட்டன. “இன்னும் சிலநாள் பொறுத்துத் தானியத்தைத் தின்ன இருக்கிற உரல், முன்னாடியே வந்து பயிரைத் தின்றுவிட்டுப் போய்விட்டதுபோ லிருக்கிறது” என்று எண்ணி ஆச்சரியப்பட்டான். அந்தக் கிராமத்தில் உள்ள குடியானவன் வீடு ஒவ்வொன்றாகப் புகுந்து அங்கே இருக்கிற உரல்களைப் பார்த்தான். உரல்களின் அடியிலேயே மண் ஒட்டிக்கொண் டிருக்கவில்லை. உரல்களின் உட்புறத்திலே கையை விட்டுப் பார்த்தான். அவற்றிலே தானியம் ஒன்றும் இடிபட்டதாகத் தெரியவில்லை.

ஆகவே அன்று இராத்திரியிலே வயலிலே பயிருக்குள்ளே ஓர் இடத்தில் பதுங்கிக் கண்விழித்துக் காவல் காத்துப் பார்க்கவேண்டும் என்று தீர்மானித்தான். அந்தப்படியே இராத்திரி வந்ததும் வயலில் ஒளிந்துகொண்டு எச்சரிக்கையாயிருந்தான். பாதி ராத்திரி வேளையில் ஆகாசத்திலிருந்து இந்திரனுடைய ஐராவதம் அந்த வயலில் இறங்கி மேயத் தொடங்கிற்று. அதன் காலடியால் சில இடங்களில் பயிர் மிதிபட்டு அழிந்தது. சில இடங்களில் அது கதிர்களை உருவி வாயில் போட்டுக்கொண்டது. குடியானவன் உரல் சுவடுகள் என்று நினைத்தது யானையின் அடிச்சுவடுகளைத்தாம்.

பயிர் அழிபடுவதைக் கண்ட குடியானவன், யானை என்று பயப்படாமல் அதை அதட்டிக் குரல் கொடுத்தான். அதைக் கேட்டதும் ஐராவதம் ஆகாயத்தில் கிளம்பத் தொடங்கிற்று. அதைப் பிடித்து நிறுத்தும் பொருட்டு, அதன் வாலைக் கெட்டியாகப் பிடித்தான் குடியானவன். அதை நிறுத்த அவனால் முடியுமா? அவனையும் தூக்கிக்கொண்டு விர்ரென்று தேவலோகம் போய்ச் சேர்ந்துவிட்டது ஐராவதம். சேர்ந்ததும், வாலை உதறிக் குடியானவனைத் தள்ளிவிட்டுத் தன்னுடைய இடத்துக்குப் போய்விட்டது.

தேவலோகத்திலுள்ள அமராவதியைக் கண்டும் குடியானவன் திகைக்கவில்லை. தான் ஆகாய மார்க்கமாய் வந்ததையும் பற்றி ஆச்சரியப்படவில்லை. தன்னுடைய அருமைப் பயிரை ஊரான் ஒருவனுடைய யானை வந்து தின்றுவிட்டதே என்கிற

நினைவும், அதைப்பற்றி அவனிடம் சொல்லி, அதற்குத் தண்டம் வாங்கவேண்டும் என்கிற நினைவுமே அவன் மனத்தில் குடி கொண்டிருந்தன.

ஆகையால் அவன் அங்கே எதிர்ப்பட்ட ஒருவனைப் பார்த்து "ஒரு வெள்ளை யானை என் பயிரைத் தின்றுவிட்டு இங்கே வந்தது. அது யாருடைய யானை? அந்த யானைக்கு உடையவனை நான் பார்க்க வேண்டும்" என்றான். அதைக் கேட்ட அந்தத் தேவன் அவனை அழைத்து தேவேந்திரனிடம் கொண்டுபோய் விட்டான்.

கொலுவீற்றிருந்த தேவேந்திரன் அந்தக் குடியானவனைக் கண்டு, "நீ யார்? இங்கே வந்த காரணம் என்ன?" என்று கேட்டான். அந்தக் குடியானவன் தேவேந்திரனுடைய பதவியை அறியாதவனாகையால், ஒன்றையும் மதியாமல் "நீர்தானா அந்த வெள்ளை யானைக்கு உடையவர்?" என்று கேட்டான்.

தேவேந்திரன் சிரித்துக்கொண்டே "நம்மிடம் ஒரு வெள்ளை யானை இருக்கிறது" என்றான்.

"உம்முடைய யானை இரண்டு நாளாக இராத்திரி வந்து என் பயிரை அழித்து விட்டது. யானையை வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் அதற்குச் சரியானபடி தீனிபோட்டு வளர்க்கவேண்டும். ஜாக்கிரதையாய்க் கட்டி வைக்கவேண்டும். தீனிபோட்டுக் காப்பாற்ற வகை யில்லையானால் யானையை வைத்துக்கொள்ளக் கூடாது. மற்றவர்கள் பயிரை மேயவிட்டுத் தன்னுடைய யானையை வளர்ப்பது மிகவும் அநீதி" என்றான்.

தேவேந்திரன் அதைக் கேட்டுச் சிரித்துக்கொண்டு, "நடந்தாய்விட்டது. இனிமேல் யானையைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளுகிறேன். இப்போது உன்னுடைய பயிருக்கு உண்டான சேதத்துக்காக ஒரு மரக்கால் வராகன் தரச்சொல்லுகிறேன்" என்று அந்தப்படி செய்யும்படி உத்தரவிட்டான்.

உடனே அங்குள்ள தேவன் ஒருவன் ஒரு மரக்கால் வராகனை அளந்து மூட்டையாகக் கட்டி அந்தக் குடியானவனுக்குக் கொடுத்து, அவனைத் திரும்பவும் பூலோகத்தில் கொண்டுவந்து விட்டுவிட்டான்.

வீடடைந்த குடியானவன் மிகவும் சந்தோஷமாய், மறு நாள் காலையில் அந்த வராகன்களில் ஒரு வராகனை எடுத்துக் கொண்டு, பக்கத்துக் கொல்லையிலிருந்த ஒரு தட்டானிடம் எடுத்துக்கொண்டு போய் அதை மாற்றி ரூபாய் வேண்டுமென்று கேட்டான்.

குடியானவனிடத்தில் பொன் வராகன் இருப்பதைக் கண்டு ஆச்சரிய மடைந்த தட்டான் "இது உனக்கு எப்படி வந்தது?" என்று கேட்டான், கேட்கவே "அந்த அப்பாவிக் குடியானவன் நடந்ததை யெல்லாம் ஆதியோடந்தமாகச் சொன்னான்; தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய் அந்த வராகன் மூட்டையைக் காட்டினான்.

காட்டவே, அந்தத் தட்டான் "தேவலோகத்திலும் இப்படி வஞ்சனை செய்வதுண்டா? நான் நினைக்கவே இல்லையே" என்று மூக்கில் விரலை வைத்தான்.

"என்ன சங்கதி? எனக்கு விளங்கவில்லையே?" என்று குடியானவன் கேட்டான்.

"இந்த வராகனில் முக்கால்வாசிக்கு மேல் வெறும் பதராயிருக்கின்றன. சில தாம் நல்ல கட்டி வராகன்கள். மற்றவை யெல்லாம் வெறும் பதர்கள். தேவலோகத்திலே உனக்குப் பதரைக் கொடுத்து ஏமாற்றிவிட்டார்கள். நீ மோசம் போய் விட்டாய்" என்றான்.

பதர் எது? கட்டி வராகன் எது? எனக்கு ஒன்றும் தெரியவில்லையே" என்று குடியானவன் சொல்லத் தட்டான் நான் "இதோ காட்டுகிறேன். அந்த மூட்டையை இங்கே எடுத்துக்கொண்டு வா" என்றான்.

குடியானவன் மூட்டையை எடுத்துக் கொண்டுவரத் தட்டான் அடியிலே ஒரு பாறையிருந்த மரத்தைப் பார்த்து, அதின்

மேல் ஏறி, வராகன் மூட்டையைத் தன் கையில் கொடுக்கச் சொன்னான். குடியானவன் தூக்கிக் கொடுத்தான். தட்டான் மூட்டையை அவிழ்த்து, அதிலுள்ள வராகன்களை மரத்தின்மேலிருந்து கற்பாறையின் மேல் தூற்றினான்—தானியத்தைத் தூற்றுவதுபோல, கல்லின்மேல் விழுந்த வராகன்களில் முக்கால்வாசிக்கு மேல் கணீர் கணீர் என்ற ஓசையுடன் தெறித்துப் பாறையினின்று துள்ளித் துள்ளி விழுந்தன. சில வராகன்கள் மட்டிலும் அந்தப் பாறையின் மேலே தங்கி நின்றன.

அதைப் பார்த்த குடியானவன் "நீ சொன்னது மெய்தான். இதோ இவ்வளவுதான் கட்டி வராகன்கள். மற்றவையெல்லாம் வெறும் பதர்கள். காற்றில் விலகிப் போய்விட்டன" என்று சொல்லிக்கொண்டு பாறையில் கிடந்த வராகன்களை மட்டும் எடுத்துக்கொண்டான். சிதறிக் கிடந்த வராகன்களைப் பதர் என்று எண்ணித் தொடவில்லை.

அதைக் கண்ட வஞ்சகத் தட்டான் தன்னுடைய சந்தோஷத்தை வெளியே காட்டாமல் தலையைக் குனிந்து "இந்தப் பதர்களைப் பொறுக்கி வைத்துக்கொண்டால் என்னுடைய கும்மட்டிக்குப் போடலாம்" என்று சொல்லிக்கொண்டே அவற்றை எல்லாம் பொறுக்கித் தன் வீட்டிற்குக் கொண்டுபோய்ப் பணக்காரனாகி விட்டான்.

(பழங் கதையை ஒட்டி எழுதியது.)

---

இன்ஷ்யூர் செய்யுங்கள்!

**ஜூபிடர் ஜெனரல்**

**இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

கீழ்க்கண்ட இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களை கவனிக்கும்.

ஆயுள், மோட்டார், நெருப்பு, பஸ், டாக்ஸி, கப்பல், தொழிலாளர் நஷ்டஈடு, சமுத்திரம், ரெயில்வே, தபால்

**பிரபல இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி**

வாக்களிக்கப்பட்ட மூலதனம்

**ஒன்றரைக்கோடி ரூபாய்**

எங்கும் ஏஜண்டுகள் தேவை

பிராஞ்சு ஆபீஸ்:

**99, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.**

பிராஞ்சு மானேஜர்: N. வெங்கடராம அய்யர்.

# புத்தக விமர்சனம்

## கோவலன்-கண்ணகி

[ஆங்கிலத்தில் எழுதியவர்—ஏ. எஸ். பஞ்சாபகேச ஐயர். எம். ஏ. ஐ. ஸி. எஸ். தமிழில் எழுதியவர்—தி. அ. ஸ்வாமிநாத ஐயர். பிரசுரம்—பி. வரதாச்சாரி அண்டு கம்பெனி. மதராஸ். விலை அணா 12.]

தமிழ் இலக்கியங்களுள் பஞ்ச மகா காவியங்களாகிய சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், வளையாபதி, குண்டலகேசி, மணிமேகலை—என்னும் இவ் வைந்தும் தமிழர்கள் தலை நிமிர்ந்து நடக்கும் கௌரவத்தைக் கொடுத்துவிட்டன. அவற்றுள் சிலப் பதிகாரம் என்னும் நூல் மிகப் பிரசித்திபெற்று விளங்குகிறது. பஞ்ச மகா காவியங்களுள் இது பெருமைபெற்று விளங்குவதன் காரணம் இதில் நவரஸங்களும் பொங்கிப் பொலிந்து விளங்குவதேயாகும்.

சிலப்பதிகாரத்தில் நாடக உணர்ச்சி ததும்பி நிற்குமாறு இளங்கோவடிகள் இயற்றியுள்ளார். இதன் நாடகத் தன்மை இயல்பாகவும் மனத்தைக் கவரத்தக்கதாகவும் அமைந்திருக்கிறது. காதற் கதையாகக் கொள்ளின், நள—தமயந்தி, சத்தியவான்—சாவித்திரி முதலியவைகளுக்குச் சரிசமானமாக நிற்கிறது. மேல் நாட்டு ரோமியோ — ஜூலியத்போன்ற சிருங்கார காவியங்களுக்கு இது எவ்வகையிலும் தாழ்ந்ததாகாது.

கோவலன்—கண்ணகி என்னும் இத் தமிழ் வசன நூலில் தமிழ் நடை சிறந்து விளங்குகிறது. மொழி பெயர்ப்பாகவோ பிறமொழி யினின்றும் தழுவப்பட்டதாகவோ கொஞ்சமும் சந்தேகம் உண்டாகாதபடி தி. அ. சாமிநாத ஐயர் எழுதியிருக்கிறார். ஆசிரியர் இந் நூலில் பழைய தமிழ்ப் பதங்களைக் கிருபணத்வம் செய்யாமல் கையாண்டுள்ளார். இப் புத்தகத்தைப் படித்தால் "நெஞ்சை யள்ளும் சிலப்பதிகார மென்றோர்மணி யாரம் படைத்த தமிழ் நாடு"—என்று பாடிய நம் பாரதியாரை நினைக்காம லிருக்க முடியாது.

## ஸ்ரீ ராமவிலாஸ மகா காவ்யம்

[இயற்றியவர் — எஸ். வேங்கடராம சாஸ்திரிகள். பிரசுரம்—ஜி. சேஷாத்திரி சாஸ்திரிகள். மாஜி பண்டிதர், பிண்ட்லே கலாசாலை, மன்னார்குடி. விலை. அணா. 6.]

இந் நூலில், வடமொழியில் இனிய எளிய நடையில் ஸ்ரீ ராமாவதாரத்தி லிருந்து பட்டாபிஷேகம் வரையில் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. சிறுவர்களுக்கென இயற்றப்பட் டிருக்கும் இந்நூல் பெரியவர்களும் படித்தின்புறுமாறு அமைந்திருப்பது ஆசிரியரின் கலைத் திறனை நன்குணர்த்துகிறது. இந் நூலைப் படிப்பவர்கள் இறந்த பாஷையாகக் கருதப்படும் ஸம்ஸ்கிருதம் இன்னும் உயிருடனிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளாம லிருக்க முடியாது.

## சக்ரவாகம் முதலிய கதைகள்

[ஆசிரியர்—ந. சிதம்பர சுப்ரமண்யம். பிரசுரம்—அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை அணா 12.]

நம் நாட்டு வாழ்க்கையைப் பிரதி பலிக்கும் பதினேழு கதைகள் தமிழ் மணங் கமழும் இனிய நடையில் திகழ்கின்றன இந் நூலில். படிக்கப் படிக்கத் தெவிட்டா இன்பம் பயக்கும் ஸ்வாரஸ்யமமைந்த இக் கதைகள் வாழ்க்கைப் பாதையில் நடந்து அலுப்புற்றிருக்கும் எல்லோருக்கும் ஓர் உற்சாகத்தைத் தரும் என்பதில் ஐயமில்லை.

"பாட்டி என்ற அச் சொல் தங்கத்தின் நெஞ்சில் ஈட்டியைப்போல் ஊடுருவிப் பாய்ந்தது. வார்த்தையில் விஷம் இல்லையா? புண்பட்ட மனத்தில் சொல்லம்புகள் எப்படிப் பாயும் என்பதை யார் தான் நன்கு அறியமுடியும்? அன்புடன்

சொன்ன அந்த வார்த்தை, தங்கத்தைத் துண்டம் துண்டமாக ஆக்கியதுபோ லிருந்தது. அவளுடைய க்ஷேமத்தைத் தவிர வேறொன்றையும் கருதாத பெற்றோர்கள், அவளுக்குச் செய்திருக்கும் தீங்கை, அந்த வார்த்தை இரக்கமின்றி ஞாபகப் படுத்தித் துன்புறுத்துவதாக எண்ணித் துக்கித்தாள்......சிறு வயசில், கல்யாணத்தில் வாழ்க்கையின் வாசற்படியில் அவள் பாட்டியாகிவிட்டாள். கிழவனுக்கு வாழ்க்கைப்பட்ட அவள் பாட்டி தானே?"—

என்று நாம் படிக்கும்பொழுது அந்தப் "பாட்டி" (தங்கம்) சோக உருவத்தில் காட்சி யளிக்கிறாள். இவ் வுணர்ச்சி ததும்பும் வாக்கியங்களைப் படித்ததும், காசுக் காசைப்பட்டுக் கிளியை யொத்த பெண்ணைக் கிணற்றில் தள்ளுவதை யொப்பக் கிழவனுக்கு வாழ்க்கைப் படுத்தும் பெற்றோர்களின் கொடுமை நம் மனக்கண் முன் தோன்றி ஆவேச முண்டாக்குகிறது. ஹிந்து சமூகம் இதைச் சகித்துக்கொண் டிருப்பதை நினைக்க உடல் நடுக்க முண்டாகிறது. இக் கதைகள் ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமியர் அனைவரும் படிக்க வேண்டிய அபூர்வ இலக்கிய சிருஷ்டிகள். இந் நூலைத் தமிழர்கள் விரும்பி வரவேற்பார்க ளென்பதில் ஐயமில்லை.

## கனகாம்பரம் முதலிய கதைகள்

[ஆசிரியர் — கு. ப. ராஜகோபாலன். பி. ஏ. பிரசுரம்—அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை அணா 12.]

மனத்தை உணர்ச்சி வெள்ளப் பெருக்கில் அழுந்த வைக்கும் இருபத்தொரு வாழ்க்கைச் சித்திரங்கள் இந் நூலில் அடங்கி யிருக்கின்றன. புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தால் முடியும் வரையில் கீழே வைக்க மனம் வரவில்லை. ஆசிரியர் இந் நூலில் உலக வாழ்க்கை அநுபவத்தைப் படமெடுத்துக் காட்டி யிருக்கிறார்.

தமிழ் வசன நடை அழகு பெற்றுப் புத்துணர்ச்சியுடன் விளங்குகிறது. "வயலில் ஆட்கள் அறுப்பறுத்துக்கொண் டிருந்தனர். தங்க வர்ணத்துடன் தலை தூக்கி மஞ்சள் பாம்புகள்போலப் படமெடுத்து ஆடிகொண் டிருந்தன நெற்பயிர்கள். ஆறுமுகம் அவர்களுடன் இடுப்பில் கோவணமும் தலையில் சுற்றிய துணியுமாக அறுப்பில் மும்முரமாக இருந்தான்"—என்று வாழ்க்கைக் காட்சியில் நாம் படிக்கும்பொழுது ஆசிரியர் நம்மைக் கிராமத்துக்கு அழைத்துச்சென்றுவிடுகிறார். ஒவ்வொரு கதையிலும் இம் மாதிரியான உயர்ந்த சித்திரங்கள் இல்லாமற் போகவில்லை.

இப் புத்தக முழுவதும் ஒவ்வொரு கதையையும் ஒரு சிறந்த ஓவியன் தீட்டிய சித்திரம்போல அழகு மிளிர்ந்து விளங்கும்படி ஆசிரியர் எழுதி யிருப்பது பாராட்டத் தக்கதேயாகும். இந் நூலாசிரியரை நவயுக மறு மலர்ச்சி எழுத்தாளர் எனவும் இந் நூலை அம் மறு மலர்ச்சியின் அத்தாட்சி எனவும் கூறின் அது மிகையாகாது.

## நவ சக்தி

[மாதப் பத்திரிகை. ஆசிரியர் — சக்திதாசன் சுப்ரமண்யன். பிரசுரகர்த்தர்—ஸ்ரீமதி வி. ராதாமணி. நெ. 1. ஸந்நிதித் தெரு. மயிலாப்பூர். வருஷ சந்தா ரூ. 2. தனிப்பிரதி அணா 2.]

இப்பத்திரிகை தமிழறிஞராகிய திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களால் வாரப் பத்திரிகையாகத் திறமையுடன் நடத்தப்பட்டு வந்தது. சமீபத்தில் சில மாதங்களாக நிறுத்தப்பட் டிருந்த இப் பத்திரிகை இப்பொழுது ஜனவரி மாதத்திலிருந்து மாதப் பத்திரிகையாக வெளி வருகிறது. இதன் முதல் இதழ் வரப் பெற்றோம்.

சக்திதாசன் சுப்ரமண்யன், திரு. வி. க. இவ் விதழில் எழுதி யிருப்பதுபோல் 'தமிழ் வெறிய' ராதலின் பத்திரிகை பிழையின்றி வெளி வந்திருப்பதும் தமிழ் வெறி கமழ்வதும் ஆச்சரியமாகாது. திரு. வி. க. இவ் விதழில் எழுதி யிருப்பது போல் அவர், தமக்கு 'ஒல்லும் வகையான்' "நவசக்தி" யின் மூலம் தமிழ்த் தொண்டாற்றுவாரென எதிர்பாக்கிறோம்.

'சமய நேயரும்' 'சீர் திருத்த நோக்கரு' மாகிய சக்திதாசன் சுப்ரமண்யனும், 'இயற்கை நேயரும்' 'இசை ஞானி'யுமாகிய திருமதி இராதாமணி அம்மையாரும் 'நவசக்தி'யை நவசக்தியுடன் நடத்தி வெற்றிபெறுவார்களென நம்புகிறோம்.

## "கலைமகள்" பொங்கல் மலர்

சென்னை "கலைமகள்" பத்திரிகையின் பொங்கல் மலர் கிடைக்கப் பெற்றோம். மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், தேசிக விநாயகம் பிள்ளை, ஸ்வாமி விபுலாநந்தர், வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதியார், டி.கே. சிதம்பரநாத முதலியார் முதலிய பிரபல எழுத்தாளர்கள் இம் மலரில் விஷய தானம் செய்திருக்கின்றனர்.

"கலைமகள்" கடந்த பத்து வருஷ காலமாக இணையிடற்ற முறையில் தமிழ்த் தொண்டு செய்து வருகிறது. பத்தாவது வருஷ முடிவில் இவ் விசேஷ மலர் தமிழ் மணம் கமழ மலர்ந் திருக்கிறது. இம்மலரின் மேலட்டையில் இரண்டு பெண்ணரசிகள் 'கோலம்' போடுவது போல் சித்திரம் வரையப்பெற் றிருக்கிறது. அது இம்மலருக்கு விசேஷ வனப்பைக் கொடுக்கிறது. யுத்த நிலைமையினால் காகிதப் பஞ்சம் ஏற்பட் டிருக்கும் இச் சமயம் இருநூறு பக்கங்களில் உயர்ந்த காகிதத்தில் பிழை யின்றி இம் மலரை வெளியிட்டிருப்பது போற்றத்தக்கதாகும்.

ஐயரவர்களின் கட்டுரை வழக்கம்போல் படிக்கப் படிக்க உற்சாகந் தருவதாகத் தான் இருக்கிறது. ஸ்வாமி விபுலா நந்தர் எழுதி யிருக்கும் "சோழ மண்டலத் தமிழும் ஈழமண்டலத் தமிழும்" என்ற கட்டுரை விஷயம் செறிந்து விளங்குகிறது. வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதியார் எழுதியிருக்கும் "கப்ப லோட்டிய தமிழன்" என்ற விஷயத்தைப் படிக்கும் பொழுது காலஞ் சென்ற ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை யவர்களைப்பற்றிய ஞாபகம் உண்டாகி நம்மைப் பரவசப் படுத்துகிறது; தேசபக்தி பெருகுகிறது. டி. கே. சிதம்பரநாத முதலியார் எழுதியிருக்கும் "கவியும் உருவமும்" என்ற கட்டுரை இவ் விசேஷ மலருக்கு ஒரு விசேஷ மணத்தைத்தான் தருகிறது. இவ்வளவு அரிய பெரிய விஷயங்க ளடங்கிய இம் மலருக்கு எட்டு அணு விலை வைத்திருப்பது தமிழபிமானிகள் அனைவரும் இம்மலரைச் சுலபமாக வாங்கிப் படிப்பதற்கு ஏற்றதா யிருக்கிறது. இது பாராட்டத் தக்கது.

எஸ். ஸோமாஸ்கந்தன்.

**அன்று . . . .**

'இதைப் போன்ற கவிதா நாடகம் இதுவரையில் சிருஷ்டிக்கப்பட்டதில்லை' என்று உலகத்து அறிஞர்கள் வாயாரப் போற்றிப் புகழ்ந்தனர்.

**இன்று . . . .**

லக்ஷக்கணக்கான மக்கள் 'இதைப் போன்ற சாயா நாடகம், திரைக் கவிதையை இதுவரையில் கண்டதேயில்லை' என்று கண்ணாரக் கண்டு களிக்கின்றனர்.

கோகிலகான இசைவாணி

**எம். எஸ். சுப்புலக்ஷ்மி**

நடிக்கும்

**சகுந்தலை**

**சென்னை**

**பிரபாத்தில்**

**பிப்ரவரிமீ**

**15உ முதல்**

**ஆரம்பம் !**

**'சகுந்தலை'**

எம். எஸ். எஸ்.

பாடல்களை

எச். எம். வி.

ரிகார்டுகளிலும்

இதர

'சகுந்தலை'

பாடல்களை

'ஓடியன்' ரிகார்டுகளிலும்

கேளுங்கள் !

**ராயல் டாக்கி டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்**

மதுரை * பெஜவாடா

இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்ள, அல்லது பிரதிநிதியா யிருக்க
"டிராபிகலை" கலந்து கொள்ளவும்.

சேர்மன்:—சுபாஷ் சந்திர போஸ்

இந்த முதல்தரமான தேசிய கம்பெனி :—

(1) நாட்டின் பிரபல தேசியத் தலைவர்களால் ஸ்தாபிக்கப் பட்டது.
(2) டைரெக்டர் போர்டில் ஐந்து காங்கிரஸ் அக்ராசனர்கள் இருந்திருக்கிறார்கள்.
(3) மூன்று கோடிரூபாய் பெறுமானபாலிஸிகளைக்கொடுத்திருக்கிறது
(4) ஆரம்பத்தி லிருந்தே போனஸ் கொடுத்துவருகிறது.
(5) தகுந்த இளைஞர்களுக்கு வேலை செய்ய அபரிமிதமான சந்தர்ப்பங்கள் அளிக்கிறது.

விபரங்க்ளுக்கு எழுதுக :—

டி. எஸ். பஞ்சு
பிராஞ்சு காரியதரிசி :
1/29, மவுண்டு ரோடு,
சென்னை.

மதுரை ஸப்-பிராஞ்சு வடக்கு வெளி வீதி, மதுரை.

